கல்வி அமைச்சு

# விசேடக் கல்வித் தேவைகள் மற்றும் விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் தொடர்பில் கல்வி வசதிகளை வழங்குதல் உட்பட சகல பிள்ளைகளுக்கும் உட்படுத்தல் கல்வியை வழங்குதல் தொடர்பான சுற்றுநிரூபம் மற்றும் ஆலோசனைக்கையேடு

முறைசாரா மற்றும் விசேடக்கல்விக் கிளை,
கல்வி அமைச்சு,
“இசுருபாய”
பத்தரமுல்ல

கல்வி அமைச்சு

# விசேடக் கல்வித் தேவைகள் மற்றும் விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் தொடர்பில் கல்வி வசதிகளை வழங்குதல் உட்பட சகல பிள்ளைகளுக்கும் உட்படுத்தல் கல்வியை வழங்குதல் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக்கையேடு

முறைசாரா மற்றும் விசேடக்கல்விக் கிளை,
கல்வி அமைச்சு,
“இசுருபாய”
பத்தரமுல்ல

அச்சுப்பதிப்பு : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க்

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/9/18/3/1/1/(11)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2020.12.03

சுற்றறிக்கை இலக்கம் 37/2020

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல மாகாண/வலய விசேடக் கல்வி பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்/ஆசிரிய கல்லூரிகளின் அதிபர்கள்
சகல பிரிவெனாதிபதி பிக்குமார்கள்,
சகல அரச பாடசாலைகளின் அதிபர்கள்
சகல அரச அனுமதிபெற்ற தனியார் கல்லூரிகள் மற்றும் உதவிபெறும் விசேட கல்லூரிகளின் அதிபர்கள்

**<u>விசேடக் கல்வித் தேவைகள் மற்றும் விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக கல்வி வசதிகள் வழங்குதல் உட்பட சகல பிள்ளைகளுக்கும் உட்படுத்தப்பட்ட கல்வி வழங்குதல் தொடர்பான சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைக் கையேடு</u>**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஊடாக சகலருக்கும் கல்விக்கான சகல சந்தரப்பங்களிலும் சர்வ சாதாரணமாகவும் சமவாய்ப்புக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது விசேடத் தேவைகள் மற்றும் விசேடக் கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வியை சிறப்பாக்கிக் கொள்வதற்கு

I. விசேடத் தேவைகளைக் கொண்ட வலது குறைந்த மாணவர்களை பாடசாலையில் சேர்த்து அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதன் சாத்தியக்கூறுகளை கூடியளவு மெருகூட்டக் கூடிய வகையிலான பண்புத்தரக் கல்வியை வழங்குதல்

II. விசேடத் தேவைகளைக் கொண்ட சிறந்த மாணவர்களுக்கு அவர்களின் அறிவுமட்டத்திற்கு ஏற்றாற்போல் சவால்களை வெற்றிக்கொள்ளக்கூடிய விசேடத் தேவை கல்வி முறைகளை அறிமுகப்படுத்தி தரமான கல்வியை வழங்குதல்

III. பாடசாலைகளில் சேர்ப்பதற்கு கடினமான நீண்ட காலமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள, வீட்டைவிட்டு வெளியேற முடியாது நரம்பியல் அல்லது உடல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்காக சுற்றுலாத்துறை ஆசிரிய முறையின் கீழ் அவர்களின் கல்வி உரிமையை உறுதிப் படுத்தவேண்டும்.

எனினும் அவ்வாறான பிள்ளைகள் அதிகமானோருக்கு பாடசாலை முறைமைக்குள் பிரவேசிப்பதற்கேனும் இடம் கிடைக்கவில்லை. எனவே விசேடத் தேவைகளுடன் கூடிய மாணவர்கள் உள்ளிட்ட சகல பிள்ளைகளுக்கும் பண்புத்தரமிக்ககல்வியை உறுதிபடுத்துவதற்கு ஒன்றிணைந்த

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

கல்வி, உட்படுத்தப்பட்ட கல்வி மற்றும் அதற்குரியவாறு கற்பவர்களுக்காக கற்றல் தொடர்பான உலகளாவிய வடிவமைப்பை இலங்கைக்கு ஏற்றவாறு நடைமுறைப்படுத்துவதற்கு இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விசேடக் கல்வித் தேவைகள் மற்றும் விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் தொடர்பில் கல்வி வாய்ப்புகளை ஒழுங்குபடுத்துதல் உட்பட அனைத்து பிள்ளைகளுக்கும் உட்படுத்தப்பட்ட கல்வி – ஆலொசனைக் கையேடு, உப அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய கல்வி மேற்பார்வை அறிக்கையில் உட்படுத்தப்பட்ட கல்வி தொடர்பான 10 முன்மொழிவுகள் மற்றும் உப அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள கற்பவர்களுக்கான உலகளாவிய கற்றல் வடிவமைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அமுல்படுத்தப்பட்டு சகலருக்கும் பண்புத்தரமிக்க கல்வியை உறுதிபடுத்துவதற்காக சகல கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் போன்ற அனைத்து தரப்பினரும் கட்டாயமாக செயற்படுவது அவசியமாகும்.

இச் சுற்றறிக்கையை வெளியிட்ட பின்னர் இடைப்பட்ட காலத்தில் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான விதத்தில் தற்போது நிலவும் ஒவ்வொரு சுற்றறிக்கையும் திருத்தப்படுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்**

1. இராஜாங்க செயலாளர், மகளீர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு
2. இராஜாங்க செயலாளர், மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு
3. இராஜாங்க செயலாளர் திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் நவீன கண்டுபிடிப்புகள் இராஜாங்க அமைச்சு
4. இராஜாங்க செயலாளர் அறநெறி பாடசாலைகள், பிக்குமார் கல்வி, பிரிவெனா மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் இராஜாங்க அமைச்சு
5. செயலாளர்கள், கல்வி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு
6. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிலையம்
7. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்
8. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
9. தலைமை ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) கல்வி அமைச்சு
10. சகல விடயப் பணிப்பாளர்கள், கல்வி அமை

# பொருளடக்கம்

**பக்கம்**


| | | |
|---|---|---|
| | பொருளடக்ககம் ……………………… …………………………………………. | 1 |
| 1. | அறிமுகம்…………………………………………………………………………….... | 6 |
| 2. | கட்டாயக் கல்வி………………………………………………………………… | 7 |
| 3. | விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை இனங்காணுதல் மற்றும் பதிவுசெய்தல்… | 7 |
| 4. | விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கான கல்வி மதிப்பீடு………………….. | 11 |
| 5. | விசேடக் கல்வி அலகுக்கு அல்லது உதவிபெறும் விசேட பாடசாலைக்கு பிள்ளையைச் சேர்த்துக் கொள்ளுதல்……………………………………………………………………………… | 16 |
| 6. | முன்பள்ளி பருவத்தைக் கடக்கும் விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கான கல்வி…...................................................................................................... | 17 |
| 7. | விசேடக் கல்வி அலகில் கல்வி பயிலும் விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளைஒருங்கிணைப்புச் செய்தல்…………………………………………………… | 18 |
| 8. | நீண்டகாலமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெறும் மாணவர்களின் கல்வி.. | 20 |
| 9. | விசேடக் கல்வி அலகுகளின் பிள்ளைகளுக்கு ஒருங்கிணைப்பு மூலமாக உட்படுத்தும் வாய்ப்புகளை வழங்குதல்………………………………………………………………………………… | 20 |
| 10 | விசேடக் கல்வி அலகுகளில் பொருத்தமான ஆசிரியர் எண்ணிக்கையினை கணக்கிடுதல்……… | 21 |
| 11 | தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டங்கள் (Individual Education Plan - IEP) / தனிப்பயானாக்கப்பட்ட (Individual Learning Plan - ILP)......................................................................................................... | 22 |
| 12 | விசேடக்கல்வித் துறைக்கான நியமனம் பெற்றவர்களைச் சேவையில் ஈடுபடுத்தல்…………… | 24 |
| 13 | மாணவர்கள் தொடர்பில் பயன்படுத்தப்படும் கருவிகளின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்…………………………………………………………………………….. | 24 |
| 14 | விசேடக் கல்வி அலகுக்கான பௌதீக வளங்கள் மற்றும் பிரவேசிக்கும் வசதிகளை வழங்குதல் | 25 |
| 15 | விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய மாணவர்கள் உட்படுத்தல் கல்வியின் கீழ் தரம் 1 இல் சேர்த்துக்கொள்ளல்……………………………………………………………………….. | 26 |
| 16 | உட்படுத்தல் கல்வி………………………………………………………………………. | 27 |
| 17 | "சிஷ்யோதா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிலையம்…………….. | 29 |
| 18 | விசேடக் கல்வி ஆலோசனைக் குழு……………………………………………………………. | 30 |
| 19 | விசேடத் தேவைகளுடன் கூடிய மாணவர்களுக்காக தேசிய மட்டம் மற்றும் பாடசாலை மட்டத்தில் பரீட்சை வசதிகளை வழங்குதல்………………………………………………………………. | 30 |
| 20 | விசேடக் கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக அதிபரின் பங்கு………………… | 32 |
| 21 | விசேடத் தேவைக் கல்வி, ஆரம்ப, இரண்டாம் நிலைப் பிரிவு ஒருங்கிணைப்பிற்கான உட்படுத்தல், ஒருங்கிணைப்பு பிரிவுக்கான தலைவர் ஒருவரை நியமித்தல் மற்றும் அவரின் செயற்பாடுகள | 34 |
| 22 | பாடசாலையில் ஆலோசனை ஆசிரியரின் செயற்பாடு……………………………………….. | 35 |
| 23 | சிறப்புஅறிவுசார் திறனுடன் கூடிய பிளளைகளை இனங்காணுதல், கல்வி வாய்ப்புகள் மற்றும் வசதிகளை வழங்குதல்………………………………………………………………… | 36 |
| 24 | கற்பவர்களுக்காக கற்றல் தொடர்பான உலகளாவிய வடிவமைப்பு | 37 |
| 25 | இடைக்கால விதிமுறைகள்……………………………………………………………… | 38 |
| | உப அட்டவணை இலக்கம் 01: 3 வயதில் விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை வலயக் கல்விப் பணிமனையில்பதிவுசெய்தல் -விண்ணப்பப் படிவத்தின் மாதிரி படிவம………… | 41 |
| | உப அட்டவணை இலககம் 02 – உலகளாவிய கல்வி மேற்பார்வை அறிக்கையில் உட்படுத்தல் கல்வி தொடர்பான முன்மொழிவுகள்…………………………….................................... | 45 |
| | உப அட்டவணை இலக்கம் - 03: கற்பவர்களுக்கு கற்பித்தல் தொடர்பான உலகளாவிய வடிவமைப்புகள - UniversalDesign of Learning for the Learners - UDL | 48-51 |

**<u>வீசேடக் கல்வித் தேவைகள் மற்றும் விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக கல்வி வசதிகளை ஒழுங்கு செய்தல் உட்பட சகல பிள்ளைகள் தொடர்பிலும் உட்படுத்தல் கல்வியை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைக் கையேடு</u>**

## 1.0 அறிமுகம்

1912 இல் தெஹிவலையில் பார்வை குறைபாடுகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக தற்போது இரத்மலானை பார்வை குறைபாடு பாடசாலையாக அடையாளம் காணப்படும் விசேட பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதனால் இலங்கையில் விசேடக் கல்வித்துறையின் செயற்பாடுகள் ஆரம்பமாயின

1943ஆம் ஆண்டு கன்னங்கர அறிக்கையிலும் பார்வையற்றோர், செவித்திற்ன குறைபாடுள்ளவர்கள், வலிப்பு போன்ற குறைபாடுகளுடன் கூடிய பிள்ளைகளின் கல்வி தொடர்பான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 1967 இல் கென்மோர் அறிக்கையின் பரிந்துரைகளின் பேரில் வித்யோத்ய பல்கலைக்கழகத்தில் 28 பட்டதாரிகளுக்காக இரண்டு வருட சிறப்புக் கல்வி பாடத்திட்டம் ஒன்று நடத்தியதும், அரசாங்க பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகள் தொடங்கப்பட்டு அந்த பயிற்சி பெற்ற பட்டடதாரிகளை அவற்றில் கற்பிப்பதற்காக ஈடுபடுத்தியதும் 1969 இல் இருந்து ஒருங்கிணைந்த கல்வி ஆரம்பிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது. சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர்***அரம்பத்*** அவர்களின்விசேடக் கல்வி தொடர்பில் அறிக்கையின் பரிந்துரைகளின் படி 1971 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் விசேட கல்விக் கிளை ஆரம்பிக்கப்பட்டது.

1989 நவம்பர் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் வெளியிடப்பட்ட சிறுவர் உரிமை தொடர்பான மாநாட்டில் கல்வி உட்பட சிறுவர் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1994 ஜூன் 7-10 வரையில் ஸ்பெயின் நாட்டின் ***சலமன்கா*** நகரத்தில் நடாத்தப்பட்ட யுனெஸ்கோ மாநாட்டில் வெளியிடப்பட்ட ***சலமன்கா*** பிரகடனம் மற்றும் செயல்திட்டம் மூலம் இனம், மதம், சாதி, நிறம், மொழி, இயலாமை போன்ற வேறுபாடுகள் இல்லாத பொதுவான பாடசாலை முறைமைக்குள் சம வயதைக் கொண்ட பிள்ளைகளுடன் உட்படுத்தல் கல்வியினை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டதுடன், அதற்கு இலங்கை அரசும் ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புத்தாயிரம் அபிவிருத்தி இலக்குகளின் நான்காம் இலக்கமானது சகலருக்கும் பண்புத்தரமிக்க கல்வியை வழங்கும் ஒன்றாகும்.

தென் கொரியாவின் ***இன்சியோன்*** நகரத்தில் இடம்பெற்ற (2015) யுனெஸ்கோ மாநாடு வெளியட்ட இன்சியோன் பிரகடனம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவது தொடர்பான செயற்றிட்டத்தின் நான்காம் இலக்கானது, 2030 ஆகும்போது சகலருக்கும் உட்படுத்தல் மற்றும் பொதுவான தரமிக்க கல்வியை உறுதிபடுத்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வி வாய்ப்புகளை ஊக்குவிப்பதாகும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2006 டிசம்பர் 13 ஆம் திகதி பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட 61/106 இலக்கத்தைக் கொண்ட மாற்றத்திறனாளிகளின் உரிமை பிரகடனத்தில் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் பிரவேசித்தலுக்கான வசதிகளை வழங்குதல், தனிப்பயனாக்கப்பட்ட தேவைகளை வழங்குதல், சமவயதுடைய பிள்ளைகளுடன் பொது கல்வி முறைமைக்குள் உட்படுத்தல் கல்வியை வழங்குவதன் மூலம் வாழ்க்கை திறன் மற்றம் சமூக அபிவிருத்தி திறன்களை பெற்றக்கொடுத்து அவர்களின் ஆற்றலின் முழு வளர்ச்சிக்கு உள்ளாக்குதல் மற்றும் சமூகத்தில் ஒரு உறுப்பினராக வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் யுனெஸ்கோ“வாழ்வதற்காகக் கற்றல்” (1972) மற்றும் “கற்றல்உள்ளே புதையல்” (1996) யுனெஸ்கோ அறிக்கையில்காட்டப்பட்டுள்ள“அறிந்துக்கொள்வதற்காகக் கற்றல், வேலை

செய்வதற்காகக் கற்றல், மற்றவர்களோடு ஒன்றுசேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல்” மற்றும் வாழ்க்கைக்கான கற்றல் போன்ற கல்வி கோட்பாடுகள், விசேட தேவை அல்லது விசேடக் கல்வித் தேவைபாடுடன் கூடிய பிள்ளைகள் உட்பட அனைத்து பிள்ளைகள் தொடர்பாக யதார்த்தபூர்வமான செயற்பாடாக மாற்றுவதற்கான செயற்றிட்டம் ஒன்றை வகுத்தல் அவசியமாகும்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் “அறியாமையை முற்றாக ஒழிப்பதற்கு சகலருக்கும் கல்வியில் சகல வாய்ப்புகளையும் சர்வ சாதாரணமாக மற்றும் சம வாய்ப்பிற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு” இலங்கை அரசு கட்டுப்பட்டுள்ளது.

விசேடத்தேவைகளைக் கொண்டவர்களின் கல்வி வாய்ப்புகளை பலப்படுத்தும் உலகளாவிய நவீன அணுகுமுறையான உட்படுத்தல் கல்வி பிரவேசத்தை ஏலவே இந்த நாடு செயல்படுத்தி வருகிறது. ஒரு பிள்ளைக்கு ஒரு குறிப்பிட்ட இயலாமை அல்லது பல குறைபாடுகள் இருப்பினும், ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்துவமான ஆற்றல்கள் உள்ளன. அந்த திறன்களை செயல்படுத்துவதற்கு குறைபாடுகளை தவிர்ப்பதற்கு அல்லது அதன் அனுகூல தன்மையை குறைத்துக் கொள்வதற்காக தேவயையான வசதிகளை வழங்கி சராசரி வகுப்பறையில் ஏனைய மாணவர்களுடன் கல்வி வாய்ப்புகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

## 2.0 கட்டாயக் கல்வி

இலங்கை அரச கொள்கைகளின் படி  பாடசாலை செல்லும் வயதில் (05 வருடம் முதல் 16 வருடம் வரையில்) சகலருக்கும் கல்வியை வழங்குவது கட்டாயமாகும். (இலக்கம் 1963/30 மற்றும் 2016.04.20 ஆம் திகதிய கட்டாயக் கல்வி கட்டளைகள் அடங்கிய அதி விசேட வர்த்தமானி மற்றும் அதற்குரிய கல்விச் செயலாளரின் 2017.01.30 ஆம் திகதிய கட்டாயக் கல்விக் கட்டளைகளை செயல்படுத்துவது குறித்தான ஆலோசனைக் கடிதம்) 2020 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்ட உலகளாவிய கல்வி வழிநடத்தல் அறிக்கையிலும் “உட்படுத்தல் மற்றும் கல்வி: சகலருக்கும் என்பது சகலருக்குமே” என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஒருங்கிணைந்த கல்வி, உட்படுத்தல் கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்பு வழங்கல் போன்ற முறைமைகளின் மூலம் கல்வியின் நியாாத்தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்காக சகலருக்கும் தரமான கல்வியை பெறுவதற்குள்ள தடைகள் மற்றும் சவால்களை இனங்கண்டு சிறப்பான வசதிகள் தேவைப்படும் கற்றலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தடையற்ற சூழலை விருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

## 2.1 விசேடத் தேவைகள் கல்வி

2.1.1 விசேடத் தேவைக் கல்வி என்பது உடல், உள அல்லது சமூக ரீதியான மற்றும் பொதுவான பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான அவர்களின் மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் சிறப்பான, தனித்துவமான தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் தொடர்பான கல்வியாகும். இது இது இரண்டு பிரிவுகளைக் கொண்டதாகும்

2.1.1.1 முதலாவதாக உணர்ச்சி, நடத்தை, அறிவுசார், காட்சி, செவிவழி, வாய்மொழி அல்லது கற்றலை தொடர முடியாத எழும்பியல், உடல் குறைபாடுகள் அல்லது நரம்பியல் குறைபாடுகள் கொண்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி விசேடத் தேவைக்குரிய கல்வி என்பதுடன் விசேடக் கல்வி என அறிமுகப்படுத்தப் படும். அவர்களின் விசேடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அல்லது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு அவர்களின் கல்வத் தேவைகளுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும். விசேடத் தேவைக் கல்வியின் இலக்கானது அந்தக் கற்றலுக்குரியவர் பொதுவான கல்வி முறைமைக்குள், இறுதியில் பொது சமூகமயாக்குதலுக்கு உள்ளாகுவதாகும்.

2.1.1.2.இரண்டாவதாக விசேட திறன் கொண்டநல்ல அல்லது சிறப்பான திறமைகளைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பாக அவர்களுக்கே உரித்தன கல்வித் தேவைகள் உள்ளபடியால்

அவர்களுக்காகவும் சிறப்பான கல்வி வாய்ப்புகள் மற்றும் வசதிகளை வழங்க வேண்டும். அந்த பிள்ளைகளை இனங்கண்டு அவர்களின் சாத்தியக்கூறுகளை ஆகக்கூடிய மட்டத்திற்கு கொண்டுவருவதற்குத் தேவையான கல்வி வாய்ப்புகளை வழங்கி அவர்களை சிறப்பான வழிக்கு கொண்டுவருவதுடன், அதன் மூலமாக விளைத்திறனுடான சேவையை நாட்டிற்குப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களுக்காக வழங்கப்படும் கல்வியையும் விசேடக் கல்வியாககருதமுடியும்.

**2.2 ஒருங்கிணைப்புகல்வி**

2.2.1 ஒருங்கிணைப்பு கல்வியை விசேடத் தேவைகளுடன் கூடிய குறைவான கவனிப்பு, அளவுக்கு அதிகமான சுறுசுறுப்பு, எழுத பேச இயலாத, தமது சொந்த வேலைகளை செய்துகொள்ள இயலாத மேற்படி 2.1.1 இல் குறிப்பிடப்பட்ட பிள்ளைகளை விசேட கல்வி அலகிற்குள் விசேட உதவி பாடசாலையொன்றில் அல்லது இத்துறையில் சுற்றுலா ஆசிரியர் ஒருவரின் மூலமாக விருத்தி செய்யப்பட்டு பொது பாடசாலையினுள் ஒருங்கிணைப்பு மூலமாகவே செய்துகொள்ள முடியும். அவர்களுக்கு கூடுதலான சமூக மற்றும் கல்வி அனுபவம் வழங்குவதற்கான மூலோபாயங்களை வழங்குவதன் மூலமாக பொது சமூகத்திற்கு பொருந்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், பொதுவான பிள்ளைகளுடன் கற்பதற்குரிய வாய்ப்புகளை வழங்குவதும் ஒருங்கிணைப்பு கல்வியின் குறிக்கோளாகும். விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளின் அதிகமான தேவைப்பாடுகள் பொது வகுப்பறைக்குள் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே பொது பாடசாலை கற்பித்தலுக்கு அமர்த்துவதற்குத் தேவையான உடல், உள, கல்வி மற்றும் சமூக ரீதியாக ஆயத்தப்படுத்தல் மற்றும் இசைவாக்கம் செய்தல் ஒருங்கிணைப்பு கல்வியினால் மேற்கொள்ளப்படும்.

**2.2.2 ஒருங்கிணைப்புத் திட்டத்தைத் தெரிவுசெய்தல்**

கல்வி மதிப்பீட்டு அறிக்கையொன்றின் பரிந்துரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் விசேடக் கல்வி ஒருங்கிணைப்பு திட்டங்கள் மூன்றாகும். அதாவது,

I. சுற்றுலா ஆசிரியர் ஒருவரின் கற்கைத் திட்டம்

II. உதவிபெறும் விசேட பாடசாலையொன்றின் திட்டம்

III. மூலோபாய வகுப்பறை (விசேடக் கல்வி அலகு) திட்டம்

மதிப்பீட்டுக் குழுவின் வழிகாட்டலின் படி பெற்றோர் / பாதுளாவலரளரின் ஒப்புதலுடன் மூலோபாயத்தை தெரிவுசெய்துக் கொள்ளலாம்

**2.2 ஒருங்கிணைப்புகல்வி**

2.2.1 ஒருங்கிணைப்பு கல்வியை விசேடத் தேவைகளுடன் கூடிய குறைவான கவனிப்பு, அளவுக்கு அதிகமான சுறுசுறுப்பு, எழுத பேச இயலாத, தமது சொந்த வேலைகளை செய்துகொள்ள இயலாத மேற்படி 2.1.1 இல் குறிப்பிடப்பட்ட பிள்ளைகளை விசேட கல்வி அலகிற்குள் விசேட உதவி பாடசாலையொன்றில் அல்லது இத்துறையில் பயண ஆசிரியர் ஒருவரின் மூலமாக விருத்தி செய்யப்பட்டு பொது பாடசாலையினுள் ஒருங்கிணைப்பு மூலமாகவே செய்துகொள்ள முடியும். அவர்களுக்கு கூடுதலான சமூக மற்றும் கல்வி அனுபவம் வழங்குவதற்கான மூலோபாயங்களை வழங்குவதன் மூலமாக பொது சமூகத்திற்கு பொருந்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்வதும், பொதுவான பிள்ளைகளுடன் கற்பதற்குரிய வாய்ப்புகளை வழங்குவதும் ஒருங்கிணைப்பு கல்வியின் குறிக்கோளாகும். விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளின் அதிகமான தேவைப்பாடுகள் பொது வகுப்பறைக்குள் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே பொது பாடசாலை கற்பித்தலுக்கு அமர்த்துவதற்குத் தேவையான உடல், உள, கல்வி மற்றும் சமூக ரீதியாக ஆயத்தப்படுத்தல் மற்றும் இசைவாக்கம் செய்தல் ஒருங்கிணைப்பு கல்வியினால் மேற்கொள்ளப்படும்.

### 2.2.2 ஒருங்கிணைப்புத் திட்டத்தைத் தெரிவுசெய்தல்

கல்வி மதிப்பீட்டு அறிக்கையொன்றின் பரிந்துரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் விசேடக் கல்வி ஒருங்கிணைப்பு திட்டங்கள் மூன்றாகும். அவையாவன,

I. பயண ஆசிரியர் ஒருவரின் கற்றல் திட்டம்,

II. உதவிபெறும் விசேட பாடசாலையொன்றின் திட்டம்

III. மூலோபாய வகுப்பறை (விசேடக் கல்வி அலகு) திட்டம என்பதாகும்.

மதிப்பீட்டுக் குழுவின் வழிகாட்டலின் படி பெற்றோர் / பாதுளாவலரளரின் ஒப்புதலுடன் மூலோபாயத்தை தெரிவுசெய்துக் கொள்ளலாம்

#### 2.2.2.1 பயண முறை மற்றும் பயண ஆசிரியர்

வசதிகள் குறைவான தனிப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் அல்லது கடும் உபாதைகளைக் கொண்ட அல்லது போக்குவரத்து வசதிகளை வழங்குவது கடினம் என்பதால் ஒரு பாடசாலைக்கு தொடர்ந்து வரக் கடினப்படும் விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக சுற்றுலா ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இந்த வசதிகள் வழங்கப்படும். இதன்போது பின்வரும் விடயங்கள் பின்பற்றப்படல் வேண்டும்.

(I) அந்த மாணவர்விசேட கல்வி அலகைக் கொண்ட பாடசாலைக்கு அல்லது வதிவிடத்திற்கு அண்மித்த பொதுவான பாடசலை ஒன்றில் சேர்க்கப்பட்டு அதற்குரிய இலக்கமொன்றை வழங்குதல்.

(II) இரண்டாவதாக பயண ஆசிரியர்/ஆசிரியையினால் தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டம் (Individual Education Plan-IEP) /தனிப்பயனாக்கப்பட்ட பாடத் திட்டம் (Individual Lesson Plan-ILP)ஒன்றை தயாரித்து வலய மதிப்பீட்டுக் குழுவின் அனுமதியுடன் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

(III) மாணவரின் இல்லம் அல்லது அதனருகில் உள்ள பொது இடத்திலோ அல்லது பொருத்தமான இடமொன்றை ஏற்பாடு செய்யலாம். மாணவருக்குத் தேவையான கற்றல் உதவிகளை எடுத்து வருவதும் மற்றும் மாணவருக்கு வசதியான இடத்திற்கு செல்வதும் ஆசிரியரின் செயற்பாடாகும்.

(IV) மற்ற நாட்களில் வீட்டுவாசி ஒருவரிடம் இருந்து அந்த மாணவருக்கு தொடர்ந்து கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான உதவி மற்றும் வழிகாட்டல் வழங்குவது ஆசிரியரின் பொறுப்பாகும்.

(V) ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கு விரயமாகும் காலத்திற்கேற்ப பயண ஆசிரியரை ஈடுபடுத்தும் காலம் தீர்மானிக்கப்படல் வேண்டும். மதிப்பீட்டுக் குழுவால் அனுமதிக்கப்பட்டIEP/ILP குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கமைவாக பயண ஆசிரியரை ஈடுபடுத்தி மாணவர்களை விருத்திசெய்தல் வேண்டும்.

(vi) இதன்போது அருகில் உள்ள வதிவிடத்தில் ஒரே வகையில் அல்லது ஒரே அறிவு மட்டத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்தால்அவர்களை ஒரே இடத்திற்கு அழைத்து கற்பித்தல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

(Viii) IEP/ILPதயாரிக்கப்பட்டு இலக்காகக் கொண்ட திட்டங்களின் படி இந்த கல்வி வசதிகள் வழங்கப்படல் வேண்டும். உ.ம்.: பார்வைக் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு பிரெயில் முறையில் எழுத பயிற்றுவித்தல், பிரெயில் புத்தக வாசிப்பு வரையான விருத்தி,முப்பரிமாண சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு பயிற்சியளித்தல், சுததந்திரமாக அங்குமிங்கும் செல்வதற்கு பயிற்சியளித்தல் போன்றவற்றின் மூலமாகதிசைமுகப்படுத்தல் மற்றும் இயக்கத்தைப் பயிற்றுவிக்க வேண்டும்.

(IX) குறிப்பிட்ட மாணவர்களின் IEP/ILP இலக்கினைக் கொண்ட திட்டங்களைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்ததின் பின்னர் அந்த ஆசிரியரின் விருப்பு மற்றும் சேவை அவசியத்தின் அடிப்படையில். அவர்களை மீண்டும் விசேடக் கல்வி அலகொன்றில் கற்பிப்பதற்கு அல்லது பயண ஆசிரியராக சேவையில் ஈடுபடுத்த முடியும்.

(X) பயண ஆசிரியர்களை நியமிக்கும்போது வலயக் கல்வி அதிகாரிகளினால் அந்த பிள்ளைகளின் வதிவிடத்திகு அண்மித்த விசேடக் கல்வி அலகொன்றில் ஆசிரியர் ஒருவரை நியமிப்பதில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### 2.2.2.2 உதவிபெறும் விசேட பாடசாலைகள்

4 வயது முன்பருவ மட்டத்தின் பின்னர் வரும் 4.3 (ஆ) வில் குறிப்பிட்டுள்ளபடி அதிக பாதிப்பிற்குள்ளான உதவி அல்லது பயிற்சியளிப்பதின் மூலம் இயக்கத் திறன்களை விருத்தி செய்யக்கூடிய மாணவர்களை குடியிருப்பு அல்லது குடியிருப்பு அல்லாத பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டும் என கல்வி மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்யுமெனில் பெற்றோர், பாதுகாவளர்களின் ஒப்புதலின் கீழ் அந்த மாணவரக்ளை உதவிபெறும் விசேட பாடசாலையில் சேர்ப்பதாக இருப்பின் அதற்குரிய மாகாண சமூகசேவை திணைக்களத்தின் அனுமதியினைப் பெறவேண்டும்.

சிரேஷ்ட இடைநிலை மற்றும் கல்லூரி மட்டத்தில் (உயர் தரம்) எல்லா மாணவர்களும் உட்படுத்தல் கல்வி சமவயது பிள்ளைகளுடன் பெற வேண்டும் என்பது தேசிய கொள்கையாகும்.

### 2.2.2.3 மூலோபாய வகுப்பறைத் திட்டங்கள்

மூலோபாய வகுப்பறை என்பது வேறுபட்ட மூலோபாயங்களைப் பயன்படுத்தும் பயிற்சியுடைய ஆசிரியர் ஒருவரினால் பல்வேறுபட்ட கற்றல் கற்பித்தல் முறைகள் திட்டமொன்றுடன் பயன்படுத்தும் இடமாகும்.

மூலோபாய வகுப்பறை திட்டத்தின் போது 4 வயது முன்பள்ளி பருவத்தில் இருந்து மூலோபாய வகுப்பறை எனும் விசேடக் கல்வி அலகிற்கு பிள்ளைகள் சேர்க்கப்பட்டு பொது வகுப்பறையில் ஏனைய பிள்ளைகளுடன் ஒன்று சேர்ந்து கற்றபதற்கு ஏதுவாக அமைக்க வேண்டும்.

இவ்வாறு ஒழுங்கு படுத்துவதில் உரிய அபிவிருத்தி வாயப்புகளை நெருங்கும் மாணவர்கள் பொதுவான வகுப்பறைக்கு ஒருங்கிணைக்கப்படுவார்கள்

இதன்போது பொதுவான வகுப்பறை ஆசநிரியர்களினால் பொதுவான கல்வித்திட்டத்ற்கமைய விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளின் தேவைக் குறித்து கவனம் செலுத்தப்பட்டு சகல மாணவர்களினதும் அபிவிருத்திற்கு கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

விசேடத் தேவையுடைய பிள்ளை தேவையானால் சுயமாக ஒத்துழைப்ப வழங்கும் குழந்தைகள் குழுவொன்றை அமைத்து செயல்புரிவது மற்றும் பொது வகுப்பறை ஆசிரியர்களுக்குத் தேவையென்றால் விசேட கல்வி அலகின் ஆசிரியருடைய அல்லது விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாகப் பிரிவுத் தலைவரின் ஒத்துழைப்பைப் பெற்றுத்தர வேண்டும்.

## 3.0 விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை அடையாளம் காணுதல் மற்றும் பதிவுசெய்தல்

3.1 விசேடத் தேவைகள் கொண்ட மாணவர்களின் குறைபாடுகளை ஏற்கனவே அடையாளம் கண்டு தேவையான சிகிச்சைகளளை வழங்கும் அதே வேளையில் மிகவும் விளைத்திறனுடன் கூடிய கல்வியினை வழங்குவதால் அந்த மாணவர்களை விருத்தி செய்ய முடியும். குழந்தை நோய் விசேட மருத்துவர் அல்லது குறிப்பிட்ட வைத்திய நிபுணர் ஒரு பிள்ளைக்கு குறைபாடுகள் உள்ளன என மருத்துவ சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டிருப்பின் அந்த பிள்ளைகளை நேரத்துடன் (3 வயதுக்கு முன்னதாக) இனங்காண வேண்டும்.

3.2 வலயக் கல்வி அலுவலகத்தில் விசேடக் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின், பாடசாலை பிரவேசக்குழுவின் தலைவரான கோட்டக் கல்விப் பணிப்பாளரின் உதவியோடு மற்றும் அதிபர்களின் பங்களிப்புடன் கட்டாயக் கல்வி நிபந்தனைகளை செயற்படுத்தும் “பாடசாலைக் குழுவினால்” இந்த பிள்ளைகளின் தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.

3.3 விசேடத்தேவைகளுடன்’ கூடிய பிள்ளைகள் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சின் குடும்ப நல பணியகம்2009 ஆம் ஆண்டில் 03 மொடியுள்களைக் கொண்ட கையேடு ஒன்றின் மூலமாக குழந்தை பருவத்திலேயே விசேடத்தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை இனங்காணுதல் மற்றும் அவர்கள் தொடர்பில் செயற்படும் விதம் தொடர்பில் குடும்ப நல தாதிகளுடைய ஒத்துழைப்புடன் அந்த பிள்ளைகளை இனங்காண வேண்டும். அந்த பிள்ளைகள் 03 வயது முடிவடையும் முன் உப அட்டவணை -1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணபத்தின் இரண்டு 02 பிரதிகளைப் பூர்த்தி செய்து உரிய வலயக் கல்விப் பணிமனையில் விசேடக் கல்விப் பிரிவில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.4 ஒரு பிள்ளையை விசேடக் கல்வி அலகிற்குள் சேர்க்கப்பட்டிருப்பின் அல்லது பயண ஆசிரியர் ஒருவர் மூலமாக கற்பிப்பதற்கு தீர்மானிக்கப்படடிருப்பின் இதன் இரண்டாவது பிரதியினை விசேடக் கல்வி அலகினைக் கொண்ட பாடசாலையில் விசேடக் கல்வி ஆரிசியர்/பயண ஆசிரியரிடம் கையளிக்க வேண்டும். விசேட உதவிபெறும் பாடசாலையொன்றில் சேர்க்கப்பட்டால் அந்த இரண்டாவது பிரதியினை அந்தப் பாடசாலையின் அதிபரிடம் கையளிக்க வேண்டும்.

3.5 அவ்வாறு பதிவுசெய்யப்படும் பிள்ளைகளின் பெற்றோர்கள்/பாதுகாவளர்கள் தொடர்பாக வலயக் கல்வி அலுவலக மட்டத்தில் பாடசாலை தவணை ஒன்றுக்கு ஒருவர் என்ற பேரில் 03 அறிவுறுத்தும் கூட்டங்களை ஒழுங்கு செய்து உரிய தரப்பினரை பங்கேற்பு செய்யவேண்டும். அந்த அறிவுறுத்தலுக்கு பிரதேசத்தின் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், குழந்தை மருத்துவ நிபுணர்கள், மன நல மருத்துவர் அல்லது உளவியலாளர், பேச்சு, தொழில், இயன் மருத்துவர் போன்ற மருத்துவ நிபுணர்கள், விசேடக் கல்வி மற்றும் ஆரம்ப கல்வி அதிகாரிகள், விசேடக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி ஆலோசகர்கள், விசேடக் கல்வி ஆசிரியர்கள் போன்றோர்களை பங்கேற்பு செய்யவேண்டும். இந்தக் கூட்டம் பொது சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட மருத்துவர்களுக்கு வசதியான இடமொன்றை ஒழுங்குசெய்வது உகந்ததாகும்.

3.5.1 பெற்றோர்களை அறிவுறுத்தும் முதலாவது கூட்டத்தில் தாய். தந்தை, பாதுகாவலர் ஆகியோருடன் பிள்ளையும் கலந்து கொள்வது கட்டாயமாகும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளடங்களாக கல்வித்துறையின் அதிகாரிகளுக்கு குழந்தையின் மருத்துவ அறிக்கைகளின் மூலம் தெளிவுபடுத்தி தேவையான ஆலோசனைகளை வழங்கி அதன் ஆதரவில் குழந்தையின் நோயின் தன்மையை தவிர்த்துக் கொள்வதற்கு குடும்பத்தின் மூலமாக மற்றும் உறவினர்களால் நிறைவேற்ற வேண்டிய கடமைகள், வைத்திய அல்லது மருத்துவ சிகிச்சை முறை, அதற்காக செல்ல வேண்டிய இடம் மற்றும் நிலையம் போன்றவை தொடர்பாக தெளிவுபடுத்தி வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும்.

வலயக் கல்வி அலுவலகத்தின் அதிகாரிகளினால் சகல தரப்பினரிடமும் பரிந்துரைகளைப் பெற்று குறைபாடுகள் காணப்படும் மாணவர்களின் தேவைகளைத் தீர்மானிக்க வேண்டும். அத்தேவைகளை வழங்கி அவர்கள் உபாதைகளுக்கு உள்ளாவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது சமூகத்தின் பொறுப்பாகும். பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம்/குழு, பழைய மாணவர் சங்கம், விசேட வசதிகள் வழங்கும் தன்னார்வ அல்லது நலன்புரி நிலையங்கள் அத்தேவைகளை வழங்குவதற்கு முன்வரலாம். யாரேனும் ஒரு குழந்தைக்கு

அத்தேவைகளை எவ்விதத்திலும்முழுமைப்படுத்திக்கொள்வதற்கு முடியாவிட்டால் ஒரு வருடத்திற்குள் கல்வி அமைச்சின் மூலமாக அதற்குப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.இதன்போதுதேவை எனும் பேரில் குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பில் பொருத்தமான காட்சிக் கருவிகள் போன்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்குரிய சிறப்பான கருவிகள், நகர்கை உபகரணங்கள், நிற்கும் ஆதரவுகள் பூதக்கண்ணாடிகள், கேட்கும் கருவிகள், குறைபாடுகளுடன் கூடிய பிள்ளையை அதனூடாக உபாதைகளுக்கு உள்ளாவதை தவிர்ப்பதற்குத் தேவையான உபகரணங்கள் என கருதப்படும். மேலும் அந்த உபகரணங்கள் குறைபாடு, வயது மற்றும் வளர்ச்சியின் நிலைக்கு ஏற்றவாறு இருத்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாரா கல்விப் பிரிவு, சுகாதார அமைச்சு, சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் மற்றும் மகளீர் பணியகத்துடனும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி கடுமையான நிலையில் அல்லது பல்வேறு உபாதைகள் அல்லது உடல் ஊனத்துடன் கூடிய பிள்ளைகளுக்காக இல்லம் சார்ந்த செயற்றிட்டங்கள் மற்றும் தன்னார்வ சமூக செய்ற்றிட்டங்கள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

இந்த முதலாவது அறிவுறுத்தலுக்குத் தேவையான விசேட வைத்தியர்கள் உள்ளடங்கிய சிகிச்சையாளர்களை வலய மட்டத்தில் சேகரிப்பதற்கு போதியளவு வசதிகள் காணப்படாவிட்டால் மாகாண அல்லது வலயக் கல்வி அலுவலக மட்டத்தில் அறிவுறுத்தப்பட வேண்டிய மாணவர் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இரண்டு அல்லது மூன்று வலயங்களை ஒன்று சேர்த்து இந்த செயற்றிட்டங்களை ஒழுங்கு படுத்துவது விசேடக் கல்வி ஒருங்கிணைப்பாளரின் பொறுப்பாகும்.

3.5.2 பெற்றோர்களை அறிவுறுத்தும் இரண்டாவது கூட்டத்தில் முதலாவது அறிவுறுத்தலை ஒழுங்குபடுத்திய விதத்தில் அரச மருத்துவமனைகள் அல்லது சிகிச்சை நிலையங்களில் பிள்ளைக்கு வழங்கப்படும் சிகிச்சை முறை, மருத்துவ முறை அல்லது வேறு சிகிச்சை முறைகளுக்கான வசதிகள் மற்றும் சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் தோன்றினால் அவை தொடர்பில் சுகாதார பிரிவுகளின் ஒத்துழைப்பை நல்கும் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பின்னர், விசேடத் தேவைகளுடன் கூடிய பிள்ளையை சமூகமயமாக்குவதற்காக கல்வியை வழங்கும்
முக்கியத்துவத்தின் கீழ் விசேடக் கல்வி என்றால் என்ன? உட்படுத்தல் கல்வி என்றால் என்ன? எதிர்கால வாழ்க்கைக்காக உட்படுத்தல் கல்வியை பெறுவதில் உள்ள முக்கயத்துவம் கல்வியை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நிலையம் ஒன்றுக்கு பிள்ளையை ஆயத்தப்படுத்தல் என்பது? விசேடக் கல்வி அலகுகளில் கல்வி பயிலும் அல்லது விசேட பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு சாதாரண பாடசாலையில் கல்வி பயில்வதற்கு ஏற்ற விதத்தில் பிள்ளையை விருத்தி செய்வது எப்படி? போன்ற விடயங்கள் குறித்து அறிவுறுத்தப்படல் வேண்டும். பிள்ளையின் குறைப்பாட்டினால் ஏற்படும் இயலாமை, பெற்றோர்களின் தொழில், ஓய்வு, சமூக, பொருளாதார, கல்வி மற்றம் கலாசார பின்னணி மற்றும் பிள்ளையின் விருத்தி பருவம் போன்றவற்றை புரிந்துகொண்டு பொருத்தமான யதார்த்த நிலையினை புரியவைப்பது மற்றும் புரிந்து கொள்வது இருதரப்பினரால் மேற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

3.5.3 பெற்றோர்களை அறிவுறுத்தும் மூன்றாவது கூட்டத்தில் கல்வி மதிப்பீட்டுக் குழுவினால் குழந்தையை அறிமுகப்படுத்திக் கொள்வதானது பின்னர் மேற்கொள்ளப்படும் கல்வி மதிப்பீட்டிற்கு அது உபயோகமாக அமையும்.

3.5.4 இதன்போது பெற்றோர்கள் அறிவுறுத்தப்படும் முதல் மற்றும் இரண்டாவது கூட்டங்களின் போது கல்வி மதிப்பீட்டுக் குழுவினால் ஒழுங்கு செய்ததை போல் அரச மருத்துவமனைகளில் அல்லது

சிகிச்சை நிலையங்களில் குறிப்பிட்ட குழந்தைக்கு வழங்கப்படும் சிகிச்சை முறையோ அல்லது வேறு ஏதேனும் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளும் சிக்கல் அல்லது சிகிச்சை பெறும் வசதிகள் மற்றும் சுகாதார/தடைகள்/தவிர்த்தல் உள்ளதெனில், அவை தொடர்பாக சுகாதார பிரிவுகளிடம் சுமுகமாக பெற்றுக்கொள்ளும் செயல்முறைகள் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

3.5.5 அத்துடன் பிள்ளையின் பெற்றோர்களின் சமூக, பொருளாதார பின்னணியை இனங்காணுதல், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு விசேடமான சிக்கல்களை இனங்காணுதல், அந்த சிக்கல்களுக்கு மாற்றுத் தீர்வுகளை வழங்குதல் மற்றும் பிள்ளையை பாடசாலை மயப்படுத்துவதற்காக பெற்றோர்களிடம் உள்ள சாத்தியக்கூறுகள் தொடர்பில் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன் பிள்ளையின் வெளிப்புறத் தோற்றத்தை அடையாளம் காணக்கூடிய உடல், உள, உணர்வுபூர்வமான சிக்கல்கள், நடத்தை போக்குளை புரிந்துகொள்ள வேண்டும். விசேடத் தேவைகளைக் கொண்ட மிக சிறிய குழந்தையை இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் தூண்டுதல் போன்ற விடயங்கள் விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு பொதுவான பாடசாலையில் உட்படுத்தல் கல்வியை வழங்குதல் சிறப்பாக அமைவதற்கு கணிசமாக பாதிக்கும் என்பதால் அது குறித்து பெற்றோர்கள் கட்டாயமாக அறிவுறுத்தப்படல் வேண்டும். விசேடமாக விசேடக் கல்வி மற்றும் ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிளளை வசிக்கும் பிரதேசத்திற்குரிய விசேடக் கல்வி அலகுகளின் ஆசிரியர்கள் இந்த புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எனவே அவர்கள் இந்த அறிவுறுத்தலுக்காக பங்கேற்பது முக்கியமாகும்.

3.5.6 இந்த அறிவுறுத்தலின் பின்னர் வலயக் கல்வி மட்டத்தில் கல்வி மதிப்பீட்டுக் குழுவினால் ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோருக்கு, பிள்ளையை மதிப்பீடு செய்வதற்காக வெவ்வேறான மதிப்பீட்டு திகதிகள் ஒதுக்கப்பட்டுவழங்கப்படல் வேண்டும்.

## 4.0 விசேடக கல்வித்தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான கல்விசார் மதிப்பீடு

4.1 வலயக் கல்வி அலுவலகத்தில் விசேடக் கல்விப் பிரிவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பிள்ளைகளிடம் தனித்தனியாகக் காணப்படும் விசேடத்தேவைகளின் படி தொடர்ச்சியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதற்காக அந்த பிள்ளைகளுக்கு விசேடத்தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை மதிப்பீடு செய்வதற்காக மூன்றுபேரைக் கொண்ட பயிற்சிப் பெற்ற குழுவொன்றுக்கு கல்வி தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

4.2. கல்வி மதிப்பீட்டுக் குழு

4.2.1 முறையாக பிள்ளைகளை மதிப்பீடு செய்வது தொடர்பில் விசேடக் கல்வித் துறையில் பயிற்சிப்பெற்ற கல்வி பணிப்பாளர்/பிரதிக் கல்விப் பணிப்பாளர்/உதவிக் கல்விப் பணிப்பாளர் /ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் /இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்குரிய விசேடக் கல்வி விரிவுரையாளர்கள் /விசேடக் கல்வி அல்லது உட்படுத்தல் கல்வி தொடர்பாக தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் /விசேடக் கல்வி வளநிலையங்களின் ஆலோசகர்கள் /விசேடக் கல்வி ஆசிரிய ஆலோசகர் /முதன்மை ஆசிரிய ஆலோசகர் / விசேட கல்வி ஆசிரியர் போன்ற தொழில் வாண்மையாளர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழு அமைக்கப்படல் வேண்டும்.

4.2.2 இத் தொழில் வாண்மையாளர்கள் விசேடக் கல்வி/ஆரம்பக் கல்வி அல்லது உட்படுத்தல் கல்வி தொடர்பான ஆசிரியர் பயிற்சி/ போதனாவியல் டிப்ளோமா அல்லது கல்விமானி பட்டம்

அல்லது அடிப்படை பட்டத்துடன் விசேடக் கல்வி தொடர்பான அல்லது உட்படுத்தல் கல்வி தொடர்பான பட்டப்பின் கல்வி டிப்ளோமா சித்தியடைந்தவர்கள் மாத்திரமாக இருத்தல் வேண்டும். அந்தப் பிள்ளைகளை கல்வி மதிப்பீட்டிற்காக கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களங்களில் அல்லது மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் 4.2.1 இன் கீழ் காணப்படும் நிறுவனங்களில் இது குறித்து விசேட பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்றோர் மாத்திரம் பங்கேற்க வேண்டும்.

4.2.3 “சிஷ்யோதா” விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிறுவனம் - வெனிவெல்கொல தேசிய கல்வி நிறுவனத்தின் உட்படுத்தல் கல்வித் திணைக்களம் - மஹரகம, மாகாணக் கல்வித் திணைக்களங்களின் விசேடக் கல்வி வளநிலையம் (வாரியபொல, மீகொட போன்ற) ஓட்டிசம் நிலையம்-மஹரகம மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களின் விசேடக் கல்வி வளநிலையம், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் விசேடக் கல்விப் பிரிவு (ஹாபிட்டிகம, மஹரகம, யாழ்ப்பாணம், அட்டாளச்சேனை கல்வியியற் கல்லூரி) அல்லது விசேடக் கல்வி அலகுகளில் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய பரிந்துரைகளை வலயக் குழுக்களுக்கு முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

4.2.4 மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களின் விசேட கல்வி மதிப்பீட்டுக் குழுவில் பின்வரும் தொழில் வாண்மையாளர்களில் குறைந்த பட்சம் மூன்று பேர் கல்வி மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும்.

1. விசேடக் கல்வி விடயத்திற்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர்/பிரதி கல்விப் பணிப்பாளர் / உதிவிக் கல்விப் பணிப்பாளர்
2. ஆரம்பக் கல்வி விடயத்திற்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர்/பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
3. விசேடக் கல்வி ஆசிரிய ஆலோசகர்
4. ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்
5. விசேடக கல்வி சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர்

**4.3 கல்வி மதிப்பீட்டுக் குழு அறிகையில்,**

(அ) கடுமையான குறைபாடுகள், இயக்கக் குறைபாடுகள், பல்வேறு குறைபா:டுகள், நரம்பியல் குறைபாடுகள் போன்ற விசேடத் தேவைகளுடன் கூடிய ஒரு பிள்ளை வீட்டில் இருந்தவாறு பயண ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலின் கீழ்க் கல்வியைப் பெற வேண்டும் என,

(ஆ) ஆதாரங்கள் வழங்கியோ அல்லது பயிற்றுவித்தோ இயக்க இயலுமையை விருத்தி செய்யக்கூடிய கடுமையான குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள் உதவிபெறும் விசேட பாடசாலை ஒன்றில் கல்வி பெறவேண்டும் என,

(இ) விசேடக் கல்வி அலகொன்றில் விசேடக் கல்வி ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலின் கீழ் கல்வியை வழங்கி விருத்தி செய்த பின்னர் பொதுவான பாடசாலை ஒன்றில் பொதுவான வகுப்பொன்றில் ஒருங்கிணைக்கப்பட்டு கல்வியை வழங்க இயலும் என அல்லது

(ஈ) விசேடத் தேவைகளைக் கொண்ட ஒரு பிள்ளையை பொதுவாக சமவயதில் உள்ள பிள்ளைகளுடன் பொது பாடசாலை ஒன்றில் உட்படுத்தல் கல்வியை பெறவேண்டும் என்ற பரிந்துரைகளில் ஒன்றை முன்வைக்க வேண்டும்.

மேற்படி “ஆ” மற்றும் “இ” பரிந்துரைகளுடன் கூடிய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் நான்கு வயதிலேயே அந்த பிள்ளைக்கு அருகில் காணப்படும் விசேட கல்வி அலகொன்றில் அல்லது விசேட உதவிபெறும் பாடசாலையொன்றின் முன்பருவக் கல்வி தொடக்கம் கற்றலை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

## 5.0 விசேடக் கல்வி அலகிற்கு அல்லது உதவி பெறும் விசேட பாடசாலைக்கு ஒரு பிள்ளையைச் சேர்த்தல்

5.1 விசேடத் தேவைகளைக் கொண்ட ஒரு பிள்ளையை விசேட கல்வி அலகிற்கு அல்லது விசேட உதவிபெறும் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்வது தொடர்பில் உப அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் இரண்டு பிரதிகளைப் பூர்த்தி செய்து ஏலவே கையளிக்கப்பட்டிருப்பதால், அதற்கு மேலதிகமாக பின்வரும் கடித ஆவணங்கள் உரிய கல்வி வலயத்தின் உதவி/பிரதி கல்விப் பணிப்பாளருக்கு (விசேடக் கல்வி) முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

அ.பிள்ளை தொடர்பாக கல்வி வலய அலுவலகத்தில் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் உள்ளடங்கிய விண்ணப்பப்படிவத்தின் பிரதி,

ஆ. பெற்றோர்களின் ஒப்புதல் கடிதம்

இ. பிறப்பு சான்றிதழ் ' மதிப்பிடப்பட்ட வயது சான்றிதழ் (மூலப்பிரதி மற்றும் அதன் நகல் ஒன்று)

ஈ. பிள்ளையின் மருத்துவ அறிக்கை மற்றும் மருந்து அறிக்கைகள் (மனநல அறிக்கைகள்,தொழில் சிகிச்சை அறிக்கைகள், பேச்சு மற்றும் மொழி அறிக்கைகள், இயன் மருத்துவ அறிக்கைகள் போன்றவை)

உ. பெற்றோர்களின் வதிவிடத்திற்குரிய கல்வி வலயத்தின் வலய மதிப்பீட்டுக் குழுவினால் அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வேறு அனுமதிக்கப்பட்ட நிறுவனத்திடம் பெற்றுக்கொண்ட கல்வி மதிப்பீட்டு அறிக்கை

ஊ. ஏனைய சான்றிதழ்கள்

நான்கு வயதில் விசேடக் கல்வி அலகில் சேர்த்துக்கொள்ளப்படும் பிள்ளைகள் தவிர 4.3 "ஈ" யின் பரிந்துரை கிடைக்கப்பெற்ற மாணவர்கள் ஏனைய மாணவர்களைப்போலவே தரம் ஒன்றில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது சாதாரண முறையில் விண்ணப்பங்களை பாடசாலைக்கு முன்னிலைப் படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

5.2 வலய விசேட கல்வி பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்களினால் இந்த அறிக்கைகளைப் பரிசோதித்து பிள்ளையை சேர்த்துக்கொள்ள வேண்டிய விசேடக் கல்வி அலகு காணப்படும் பாடசாலை தொடர்பாக பெற்றோர்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும். பிள்ளை தனது வதிவிடத்தின் அருகில் கல்வி வலயத்தில் விசேட கல்வி அலகுடன் கூடிய பாடசாலையில் சேர்க்கப்படல் வேண்டும். உரிய பாடசாலையைத் தீர்மானிக்கும் போது குடியிருப்புக்கு அருகில் என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். அந்த மாணவர்களை ஒருங்கிணைக்கும்போது மேலும் ஒரு விசேடக் கல்வி ஆசிரியரின் உதவி தேவைப்படாதெனில் அந்த பிள்ளைக்கு மிகவும் வசதியுள்ள வேறு பாடசாலைக்கு ஒருங்கிணைப்பு செய்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு. அதற்காக விசேடக் கல்வி பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் மற்றும் விசேடக் கல்வி ஆசிரிய ஆலோசகரின் உதவியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.3 அந்த விசேடக் கல்வி அலகுடன் கூடிய பாடசாலை மாகாண பாடசாலை எனில் வலய விசேடக் கல்விப் பணிப்பாளர் /பிரதி கல்விப் பணிப்பாளர்களினால் மேற்படி கடித ஆவணங்களை தமது பரிந்துரையுடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முன்னிலைப்படுத்தி அனுமதி பெறுவதில் உரிய பாடசாலையின் விசேடக் கல்வி அலகிற்கு பிள்ளையைச் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்படும்

5.4 தேசிய பாடசாலையொன்றின் விசேட கல்வி அலகிற்கு மாணவர் ஒருவரை சேர்ப்பதற்கு கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் வலய விசேடக் கல்விப் பணிப்பாளர்/பிரதி கல்விப் பணிப்பாளர்களினால் அந்த கடித ஆவணங்களை தமது பரிந்துரையுடன் கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேடக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும். கல்விப் பணிப்பாளரினால் (முறைசாரா மற்றும் விசேடக் கல்வி) உரிய பரிந்துரைகளுடன் தேசிய பாடசாலை கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் விசேடக் கல்வி அலகிற்கு பிள்ளையைச் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

5.5 விசேடக் கல்வி அலகில் சேரும் ஒரு பிள்ளை முதலில் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் அட்டவணையில் பதிவு செய்வது கட்டாயம் என்பதுடன், அந்த அனுமதி இலக்கத்துடன் விசேடக் கல்வி அலகின் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்படல் வேண்டும். சேர்த்துக்கொள்ளப்படும் ஆவணத்தில் உள்ளடக்கப்படாத மாணவர் ஒருவருக்கு விசேடக் கல்வி அலகில் கற்றலை பெற முடியாது.

5.6 இதற்குவெளிப்புறமாக பொதுவான வகுப்பறைகளில் கற்றல் சிரமங்கள் உள்ள பிள்ளைகள் அல்லது மேற் கூறப்பட்டவாறு முறையான பரிந்துரை மற்றும் அனுமதி பெறாத பிள்ளைகள் விசேடக் கல்வி அலகில் சேர்த்துக்கொள்ளப்படக் கூடாது

5.7 விசேடக் கல்வி ஆசிரியர் இல்லாத பாடசாலை ஒன்றில் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டால் அந்த பிள்ளை தொடர்பாகக் கண்காணிப்பதும் அவருக்கு உதவி புரிவதும் பாடசாலையின் விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான ஒருங்கிணைப்பு பிரிவின் தலைவரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.8 மேற்படி 4.3 (ஈ) பரிந்துரை பெறப்பட்ட மாணவர்கள் விசேட முன்பள்ளிக்கோ அல்லது உட்படுத்தல் கல்வி செயற்படும் முன்பள்ளியில் சேர்ப்பது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

## 6.0 முன்பிள்ளைப் பருவத்தில் உள்ள விசேடக் கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கான கல்வி

6.1 சகல முன்பிள்ளைப்பருவ விருத்தி நிலையமும் (முன்பள்ளியில்) எதிர்காலத்தில் உட்படுத்தல் கல்வி வாய்ப்புகளை வழங்குவதில் விசேடமாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 வயதில் வலயக் கல்விப் பணிமனையில் பதிவுசெய்யப்பட்டுள்ள விசேடத்தேவைகளுடன் கூடிய ஒரு பிள்ளை மாகாண சபையில் சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலமாக பராமரிக்கப்படும் குறைபாடுகள் கொண்டுள்ள பிள்ளைகள் தொடர்பில் விசேட முன்பள்ளி ஒன்றுக்கோ அல்லது சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலமாக பராமரிக்கப்படும் குழந்தை வழிகாட்டல் நிலையமொன்றில் அல்லது கல்வி பெறக்கூடிய முன்பருவ விருத்தி நிலையமொன்றில் 4 வயது வரை மாத்திரம் கல்வியைப் பெறமுடியும்.

6.3 மதிப்பீட்டுக் குழுவினால் 4.3 வாசகத்தின் அ,ஆ,இ பரிந்துரைகளைப் பெறும் பிள்ளைகள் 4 வயது முதல் பயண ஆசிரியர் ஒருவரின் அல்லது விசேட உதவிபெறும் பாடசாலையொன்றில் அல்லது விசேடக் கல்வி அலகின் ஆசிரியர் ஒருவரிடம் கல்வி பயில வேண்டும்.

6.4 மதிப்பீட்டுக் குழுவினால் 4.3 வாசகத்தின் ஈ"விசேடத் தேவைகளுடன் கூடிய ஒரு பிள்ளை பொதுவாக சமவயதில் உள்ள குழந்தைகளுடன் பொது பாடசாலை ஒன்றில் உட்படுத்தல் கல்வியைப் பெறவேண்டும் என" சிபார்சு செய்யப்பட்டிருப்பின் அப்பிள்ளை மற்ற பிள்ளைகளுடன் 6.1 அல்லது 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள உட்படுத்தல் முன்பள்ளி அபிவிருத்தி நிலையம் ஒன்றில் புதிய வருடத்தில் தரம் ஒன்றில் சேரும் வரையில் உட்படுத்தல் கல்வி வசதிகளுடன் கல்வியைப் பெறமுடியும்.

6.5 கட்டாயக் கல்வி கட்டளைகள் செயல்படும் வயதான 5 வருடம் பூர்த்தியான பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் மற்றும் 6.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிள்ளைகளை

வீட்டில் தக்கவைத்துக் கொள்ளுதல் அல்லது கல்வியை வழங்காமல் இருத்தல் அல்லது முன்பள்ளியினுள்ளே கல்வியை வழங்குதல் அவர்களின் கல்வி உரிமை மீறல் என்பதால் அவ்வாறு செய்யாதிருத்தல் பெற்றோர்களின் பொறுப்பு என்பதனை இத்தால் வலியுறுத்தப்படுகின்றது.

## 7.0 விசேடக் கல்வி அலகினுள் கல்வி பயிலும் விசேடக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களை ஒருங்கிணைப்பு செய்தல்

7.1 நான்கு வயதை பூர்த்தி செய்த விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் விசேடக் கல்வி ஆசிரியரின் ஊடாக விருத்தி செய்தல் வேண்டும். அதன் பிரகாரம் அண்ணளவாக நகரக்கூடிய திறனை விருத்தி செய்தல், மென்மையாக நகரக்கூடிய திறனை விருத்தி செய்தல், மாணவர்களின் கவனிப்பை தக்கவைத்துக் கொள்வதை விருத்தி செய்தல், அறிவாற்றல், மொழி, பொழுதுபோக்கு திறன்களை விருத்தி செய்தல் தனிப்பட்ட நல்வாழ்வு மற்றும் பழக்கத்தை கற்றுக்கொள்ளும் திறன்களை விருத்தி செய்வதற்கு தேவையான அத்தியாவசிய அடிப்படை வாழ்க்கைத் திறன் பயிற்சியின் மூலம் மாணவரை சமூகமயமாக்கலுக்கு பழக்குதல் மற்றும் முன்பருவ பள்ளி அனுபவங்களை வழங்குதல், அதற்காக,

- மாற்று தொடர்பாடல் முறை மற்றும் திறனாகக் கருதப்படும், சைகை மொழி, உதட்டசைத்தல், பிரெய்லிமுறை காது கேளாதோருக்கான தொட்டுணரக்கூடிய தொடர்பு முறை, கை சைகை முறை, டிஜிட்டலை அடிப்படையாகக் கொண்ட நவீன மாற்று தொடர்பாடல் முறைபோன்ற உரையாடலுக்கு அல்லது மாற்று மறுமொழி முறைகளை பயிற்றுவித்தல்.
- மூட்டுகளில் ஏற்படும் பிறழ்வுகளை தவிர்ப்பதற்கு முறையான வழிகளை பயிற்றுவித்தல்.
- பல்வேறு விளையாட்டு பயன்படுத்தலுக்குத் தேவையான விரல் அசைவுகளைப் பயிற்றுவித்தல்
- அன்றாட வாழ்க்கையின் சுகாதார நடவடிக்கைகளைப் பயிற்றுவித்தல்
- பென்சில், பேனா மற்றும் ஏனைய கருவிகளை கையாளுவதற்கான தசை வளர்ச்சி மற்றும் அவர்களுக்கு உகந்த வடிவமைப்புகளை உருவாக்குதல்.
- உணவு பாவனைக்கான தூண்டுதலை ஏற்படுத்துவதற்கான ருசி மற்றும் வாசனைப் பொருட்களைக் கொண்டு உணவுக்கான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தல்
- தனியாகவே ஆடை அணிதலை பயிற்றுவித்தல்
- பாடசாலை சிறார்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு, எழுதும் சிரமங்களை தவிர்ப்பதற்கு, வகுப்பறையில் நடத்தை முறைகளை உருவாக்குவதற்கு, உடல் மற்றும் உள சுகாதாரத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட தனது ஆடை பொத்தான்களை பொருத்துதல், பாதணிகளை அணிதல் போன்ற இலகுவான செயற்பாடுகளை பயிற்றுவித்தல்
- கத்திரிக்கோல், பென்சில், புத்தகங்களின் பக்கங்களை தொடும் செயற்பாடுகளில் ஈடுபடுதலைப் பயிற்றுவிக்க வேண்டும். இதற்காக ஆசிரியர்களினால் உருவாக்கப்பட்ட ஆலோசனை கையேடுகளை பயன்படுத்த வேண்டும்.
  அத்துடன் காது கேளாத மாணவர்களுக்கு முழுமையான தொடர்பாடல் திறன் (உதட்டசைத்தல், சைகை மொழித் திறன்) வழங்கப்படல் வேண்டும். பார்வை குறைபாடுகள் மாணவர்களுக்கு பிரெய்லி முறையை பயிற்றுவிப்பதற்காக அடிப்படை திறன் பயிற்றுவித்தல் மேற்கொள்ள வேண்டும்.

7.2 விசேடக் கல்வி அலகில் சேரும் மாணவர்கள் அனைவரும் விசேடக் கல்வி ஆசிரியர்கள் மூலமாக விருத்தி செய்த பின்னர் ஆகக்கூடுதலாக இரண்டு வருட முடிவில் ஆரம்ப பருவத்திற்கு ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். அதற்காக வலய மதிப்பீட்டுக் குழுவின்

இரண்டுபேர் மற்றும் குறிப்பிட்ட விசேடக் கல்வி அலகின் விசேடக் கல்வி ஆசிரியர் ஆகிய மூன்று போர்களைக் கொண்ட குழுவினால் ஒவ்வொரு மாணவர் தொடர்பாக வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை பரிந்துரைக்காக அதிபரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7.3 இரண்டு வருடங்கள் விசேடக் கல்வி அலகில் பயிற்சி பெற்ற பின்னரும் மேலும் விசேடக் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர ஒருவரின் உதவியின்றி கற்றலை மேற்கொள்ள இயலாத பிள்ளைகள் ஆரம்ப பருவத்திற்குரிய தகவமைப்பு பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு.ீமாற்று முறைகளை பயன்படுத்தி மேலும் இரண்டு வருடங்களுக்கு அவ் அலகினுள் அந்த பாடத்திட்டத்தை அதிகபட்ச திறன் மட்டத்திற்கு விருத்தி செய்தல் வேண்டும். அத்துடன் ஒருங்கிணைப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மாணவர் அவ்வப்போது பொது வகுப்பறையில் கல்வி வாய்ப்புகளை வழங்கி பொதுவான வகுப்பறையை பழக்கப்படுத்தல் வேண்டும். அதன்போது பொதுவாக ஆசிரியர் பிள்ளைகளை பொதுவாக கற்றல் கற்பித்தல் செய்றபாடுகளில் ஈடுபடுத்தும் போது விசேடக் கல்வி ஆசிரியர் ஐநீ.ீஐடீ பிரகாரம் தேவையான, பொருத்தமான, விசேட தருணங்களில் மாத்திரம் பொதுவான வகுப்பறைக்குள் இருந்த வண்ணம் விசேடத் தேவைகளைக் கொண்ட மாணவருக்கு உதவிபுரிய வேண்டும். ஏனைய தருணங்களில் விசேடக் கல்வி அலகில் பிள்ளையை விருத்தி செய்ய வேண்டும். இறுதியில் மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப இடைநிலை மற்றும் மூன்றாம் கட்டங்களில் ஒருங்கிணைப்பு செய்து உட்படுத்தல் கல்விக்கு பிரவேசிக்கும் வாய்ப்பினை வழங்க வேண்டும்.

7.4 மேலும் விசேடக் கல்வி பயிற்சியினைப் பெற்ற ஆசிரியர் ஒருவரின் உதவியின்றி கற்றலை மேற்கொள்ள இயலாத பிள்ளைகள் ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை பருவத்திற்குரிய தகவமைப்பு பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் இரண்டு வருடங்களுக்கு அவ் அலகினுள் அந்த பாடத்திட்டத்தை அதிகபட்ச திறன் மட்டத்திற்கு விருத்தி செய்து இறுதியில் மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கனிஷ்ட இடைநிலை கட்டத்திற்கு ஒருங்கிணைப்பு செய்துஉட்படுத்தல் கல்வியை வழங்க வேண்டும்.

7.5 அந்த மாணவர்கள் மாணவர் மையப்படுத்தப்பட்ட செயற்றிட்டம்/மொடியுல் பூர்த்தி செய்து குறிப்பிட்ட அதி சித்திகளை பெற்றுக் கொள்வதில் கனிஷ்ட இடைநிலை கட்டங்களை பூர்த்தி செய்து அதற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும். இந்த சான்றிதழைப் பெறுவதற்காக பரீட்சையொன்று இல்லை. அதற்காக விசேடக் கல்வி ஆசிரியர் ஒருவர் தேவைப்படும் பட்சத்தில் IEP/ILPபிரகாரம் உதவி ஆசிரியராக மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்கை தொடர்பில் மாணவருக்கு உதவ வேண்டும். தேவையான தருணத்தில் விசேடக் கல்வி அலகில்/வள நிலையத்தில் கல்விக்கான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7.6 எந்தவொரு தருணத்திலும் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியலை அகற்றி உரிய வகுப்பின் பெயர் பட்டியலில் சேர்க்கப்படல் வேண்டும். அவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் விசேடக் கல்வி அலகிற்குள் உள்வாங்குவதை மேற்கொள்ள முடியாது.

7.7 மாணவர்களை வகுப்புகளில் ஒருங்கிணைக்கும் போது அவர்கள் பாடசாலை பிள்ளைகள் என்றபடியால் குறிப்பிட்ட வகுப்புகளில் பொதுவான பிள்ளைகளுக்கான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளமாணவர் எல்லையினை கருத்திற்கொள்ளாது நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7.8 மேலும் விசேட பயிற்சிகளைப் பெற்ற ஆசிரியர் ஒருவரின் உதவியின்றி கற்றலை தொடர இயலாத பிள்ளைகள் 15 வயதை பூர்த்தி செய்யும் வரையில் கனிஷ்ட இடைநிலை கட்டத்திற்குரிய தகவமைப்பு பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு விசேட கல்வி

அலகினுள் கல்வி பயில வேண்டும். அக்காலத்திற்குள் அடிக்கடி சுகாதாரம், விளையாட்டு. அழகியல், தொழில்நுட்பம் (தொகுதி பாடங்கள்) போன்ற பாடங்களுக்கு பொதுவான பிள்ளைகளுடன் உட்படுத்தல் கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். விதிவிலக்குகள் எவ்வாவறிருப்பினும், ஒவ்வொரு தருணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களை விருத்தி செய்ய வேண்டிய கால எல்லைகளை தீர்மானிக்க வேண்டியது வலயக் கல்வி அலுவலகங்களின் அனுமதி பெற்ற IEP/ILP இலக்குகள் படியாகும். அந்தந்த வகைசார்ந்த பிள்ளைகளின் உடல், உள, மன மற்றும் அவரின் உணர்ச்சி நிலைகளை கருத்திற்கொண்டு கற்றலின் வேகத்திற்கமைவாக IEP/ILP இலக்குகள் தயாரிக்கப்படும்.

7.9 அவ்வாறு, 7.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட கல்வி அலகொன்றில் ஒருங்கிணைக்கப்பட்ட கனிஷ்ட இடைநிலை கட்டங்களை பூர்த்தி செய்யப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ள பிள்ளைகள் 15 வயது பூர்த்தியான பின்னர் வரும் புதிய ஆண்டில் முதலாம் தவணையில் சிரேஷ்ட இடைநிலை, கட்டத்தில் உள்வாங்கப்பட்டு உட்படுத்தல் கல்வியினை வழங்க வேண்டும். அதற்காக அந்த பிள்ளைகளின் நடத்தை முறைகள் சாதாரண பிள்ளைகளுடன் ஒன்று சேர்ந்து கற்றலை தொடர்வதற்கு பொருத்தமான விதத்தில் அவர்களை விருத்தி செய்தல் கட்டாயமாகும். இதற்காக இசை, நடனம், சித்திரம், நாடகம், விளையாட்டு மற்றும் தொழில்நுட்ப பாடங்களில் பொதுவான பிள்ளைகளுடன் உட்படுத்தல் கல்வி வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். விசேடக் கல்வி ஆசிரியரும் பொதுவான ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து அவ்வாறான கல்வி வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். விசேடக் கல்வி ஆசிரியரும் பொதுவான ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து அவ்வாறான வாய்ப்புகளை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.

7.10 15 வயதுக்கும் மேற்பட்ட அனைத்து மாணவர்களும் பொருத்தமான சமவயதுடைய மாணவர்கள் கல்வி பயிலும் பொதுவான வகுப்பறை ஒன்றுக்கு ஒருங்கிணைப்பு செய்வதினால் உட்படுத்தல் கல்வி வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கு அல்லது வெணிவெல்கொல,"சிஷ்யோதா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிறுவனத்தில் இடம்பெறும் வளர்ச்சி விருத்தி பயிற்சிக்கு முன்னிலைப்படுத்தல் அல்லது தொழில் பயிற்சி கல்விக்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

## 8.0 நீண்ட நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் மாணவர்களின் கல்வி

8.1 குழந்தை சிகிச்சைப் பிரிவுடன் கூடிய போதனா வைத்தியசாலைகள், பொது வைத்தியசாலைகளில் நீண்ட நாட்களாக அல்லது குறுகிய காலமாக வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறுகின்ற மாணவர்கள் சுகமடைந்த பின்னர் அவர்களின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியதால் அவர்களின் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அந்த வைத்தியசாலைகளில் குழந்தை நோய்ப் பிரிவுகளுக்காகப் பொருத்தமான ஆசிரியர்கள் அந்த வைத்தியசாலை அருகில் அமைந்துள்ள பாடசாலைகளில் இணைக்கப்பட்டு பயண ஆசிரியர்களாக ஈடுபடுத்தப்படும். இந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை பயண ஆசிரியர்களின் கீழ் வழங்கப்படும்.

8.2 அந்த ஆசிரியர்களினால் தொடர்ச்சியாக மாணவர்களை கல்வியில் ஈடுபடுத்துவதற்காக தேவையான அறிவை இற்றைப்படுத்தி வசதிகள் வழங்குபவராக மற்றும் ஆலோசகராக நீண்ட காலமாக தங்கியிருநச்து சிகிச்சை பெறும் மாணவர்களுக்குIEP/ILP அடிப்படையாகக் கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இற்றைப்படுத்தலுடன் பராமரிக்கப்பட்டு மாணவர்களுக்கு உதவ வேண்டும். குறிப்பிட்ட மருத்துவ மனைகள் அமைந்துள்ள கல்வி வலயத்தில் விசேட கல்வி அதிகாரிகளினால் அவர்களை சேவையில் ஈடுபடுத்துதல், வழிநடத்தல் மற்றும் கண்காணித்தல் மேற்கொள்ளப்படும்.

## 9.0 விசேட கல்வி அலகுகளின் மாணவர்களுக்கு ருங்கிணைப்பின் மூலமாக உட்படுத்தல் வாய்ப்புகளை வழங்குதல்.

9.1 7.2.,7.3,7.4 மற்றும் 7.9 வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வலய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய முறையே ஆரம்ப கட்டத்திற்கு, இரண்டாவது மூனறாவது கட்டத்திற்கு, கனிஷ்ட இடைநிலை அல்லது சிரேஷ்ட இடைநிலைக் கட்டத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உட்படுத்தல் கல்வியினைப் பெறும் வாய்ப்புகள் கிடைக்கும்.

9.2 ஒருங்கிணைப்புச் செய்யும் மாணவர்கள் பொதுவான மாணவர்களின் மட்டத்தை அடையவில்லை என கூறி வகுப்பறையில் இருந்து வெளியேற்றுதல் அல்லது அவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தாமல் இருத்தலாகாது. தேவையான வசதிகள் மற்றும் தகவமைப்பு கற்றல் அல்லது மாற்று வழிகள், கற்பித்தல் முறைமை பயன்படுத்தலில் சகல மாணவரினதும் பண்புத்தர கல்வியை உறுதிப்படுத்தல் சகல ஆசியர்களின் பொறுப்பாகும்.

## 10.0 விசேடக் கல்வி அலகுகளில் பொருத்தமான ஆசிரியர்களை கணக்கிடுதல்

10.1 சகலவிசேடக் கல்வி அலகும் இரண்டு வகுப்பறைகளைக் கொண்டதாகும். ஒரு வகுப்பறையானது முன்பருவ வயதான 4 வயதில் உள்வாங்கப்படும் மாணவர்கள் ஆரம்ப முதல் கட்டத்திற்கு ஒருங்கிணைப்பு செய்தல் தொடர்பாகப் பிள்ளைகளை விருத்தி செய்யும் வகுப்பறையாகும்.

10.2 இரண்டாவது வகுப்பறை மேற்படி 10.1 ற்கு அமைவாக ஒருங்கிணைப்புச் செய்யப்படாத மாணவர்கள் மற்றும் பொதுவான வகுப்புகளுக்கு ஒருங்கிணைப்புக் கல்வியை பெறும் மாணவர்கள் தொடர்பில் கற்பிக்கப்படுகின்ற வகுப்பறையாகும். அந்த வகுப்பறையின் ஆசிரியர் பொதுவான வகுப்புகளில் கல்வி பெறும் விசேடக் கல்வி ஆசிரியர் ஒருவரின் உதவி தேவைப்படும் மாணவர்கள் தொடர்பில் குறிப்பிட்ட வகுப்புக்குச் சென்று பொதுவான ஆசிரியர் கற்பிக்கும் சந்தரப்பத்தில் விசேடமாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவருக்கு அல்லது மாணவிக்கு உதவிக் கற்பித்தல் மேற்கொள்ளப்படும்.

10.3 இரண்டாவது வகுப்பறையின் ஆசிரியரினால் தேவையான மாணவர்கள் விசேடக் கல்வி அலகிற்கு வரவழைக்கப்பட்டு விசேட கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி பொதுவான வகுப்பில் கற்க முடியாத பாடங்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் விசேடக் கல்வி ஆசிரியரின் உதவி தேவையான பாடம்/தலைப்பு/செயற்றிட்டம்/ மொடியுல்தொடர்பாக விசேடக் கல்வி அலகில் உள்ள வகுப்பறையில் கற்பிக்கலாம். இல்லையெனில் பொதுவான வகுப்பறையில் பொதுவான ஆசிரியர் கற்பிக்கும்போது விசேடத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்குப் பொதுவான வகுப்பறையில் தங்கி கற்பித்தலில்உதவி புரியலாம். எனவே இரண்டாவது வகுப்பறையில் கற்றலைப் பெறும் மாணவர்கள் என்பது பௌதீகமுறையில் விசேடக் கல்வி அலகில்/வளப்பிரிவில் கற்றலை மேற்கொள்ளும் மாணவர்கள மட்டுமல்ல. IEP/ILPஅடிப்படையாகக் கொண்டு இரண்டாவது ஆசிரியரினால் விருத்தி செய்யப்படுமானால் அந்த மாணவர்களும் இரண்டாவது வகுப்பறை ஆசிரியரின் மாணவர்களாக கணக்கிடுதல் வேண்டும்.

10.4 சகல விசேடக்கல்வி அலகும் குறைந்தபட்சம் இரண்டு வகுப்பறைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அந்த இரண்டு வகுப்பறைகள் தொடர்பாக இரண்டு ஆசிரியர்களை ஈடுபடுத்த வேண்டும். அதன் பிரகாரம் உத்தேச ஆசிரியர் எண்ணிக்கையை கணக்கிடும்போது விசேடக் கல்வி அலகிற்கு குறைந்த பட்சம் இரண்டு வகுப்புகள் உள்ளடங்குவதனால் இரண்டு ஆசிரியர்கள் கணக்கிடப்பட வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் ஐந்து பிள்ளைகளுக்கு மேல் அதிகமாகும் எல்லா தருணங்களிலும் ஆசிரிய மாணவர் விகிதாசாரம்

1:5 எனக் கணக்கிட்டு தேவையான மீதி ஆசிரியர்களை வழங்க வேண்டும். ஒரு அலகில் இரண்டு வகுப்புகள் உள்ளபடியால் இவ்வாறு இரண்டு வகுப்புகளுக்காக வெவ்வேறாக கணக்கிடப்படவேண்டும். எனினும் ஒரு வகுப்பில் 5 பிள்ளைகள் அதிகமாகும் போது அதற்காக மேலதிக வகுப்பொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும். இருப்பினும் வலய கல்வி மதிப்பீட்டுக் குழு ஏவரேனும் ஒரு மாணவருக்காக IEP/ILP அடிப்படையாகக் கொண்டு அந்த மாணவருக்கு மாத்திரம் கற்பிப்பதற்கு ஆசிரியர் ஒருவரை ஈடுபடுத்த வேண்டும் என தீர்மானிக்கும் பட்சத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் அவ்வாறு ஒரு ஆசியரை ஈடுபடுத்தலாம். இது குறிகியகால விசேட நிலைமையாக காணப்படுவதால் அதற்கென உகந்த ஆசிரியர்களை ஈடுபடுத்துவதில்லை. உ+ம். மற்ற பிள்ளைகளுக்கு சிரமங்கள் ஏற்படும் விதத்தில் நடந்துக்கொள்ளும் மாணவர் ஒருவருக்கு அன்பு, கருணையுடன் உரிய உடற்பயிற்கிகள் போன்றவற்றைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு விருத்தி செய்யப்படும் வரையில் இவ்வாறு ஒழுங்குமுறைகளை மேற்கொள்ளலாம்.

10.5 ஒவ்வொரு விசேட கல்வி அலகும் வள அலகாக மாற்றமடைகின்றது. அந்த அலகினுள் மாணவர் ஒருவர் நிரந்தரமாகக் கல்வி கற்காமல் இருந்தாலும் உட்படுத்தல் கல்வி அறையினுள் கல்வி கற்கும் அல்லது தேவையான நேரத்தில் சிறப்புக் கல்வித் தேவை உள்ள மாணவர் ஒருவருக்கு விசேடக் கல்வி ஆசிரியர் உட்பட வள அலகின் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

10.6 பயண ஆசிரியர்களின்பொருத்தமான எண்ணிக்கையைக் கணக்கிடும்போது ஆசிரியர் மாணவர் விகிதம் 1:3 ஆக இருத்தல் வேண்டும்

10.7 ரிஜ்வே வைத்தியசாலை மற்றும் அபேக்ஷா வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகள் தொடர்பாக விசேடக் கல்விப் பயண ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இருவராக ஈடுபடுத்தப்படும். ஏனைய குழந்தை நோய் சிகிச்சை உடைய போதனா/பொது/அடிப்படை வைத்தியசாலைகளுக்காகப் பயண விசேடக் கல்வி ஆசிரியர் ஒருவர் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஒருவர் என ஈடுபடுத்தப்படும்.

10.8 மஹரகம ஓட்டிசம் நிலையம் மற்றும் மாகாண வளநிலையம் ஒவ்வொன்றுக்கும் விசேட கல்வி பயிற்சிக்கு மேலதிகமாக கண் பரிசீலனை, செவி பரிசீலனை பிரெயில், சைகை மொழி மற்றும் மதிப்பீட்டுவியல தொடர்பாக விசேட பயிற்சிப் பெற்ற விசேட கல்வி ஆசரியர் இரண்டுபேர் வீதம் இணைக்கப்பட வேண்டும்.

10.9 முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உகந்த ஆசிரியர் எண்ணிக்கையினை அனுமதித்துக் கொள்வது மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும்

## 11.0 தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டங்கள் (Individual Education Plan - IEP) /

11.1 தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டங்கள் (Individual Lesson Plan - IEP)

11.1.1 தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டம் என்பது பிள்ளைகளின் பன்முகத்தன்மையை கருத்திற் கொண்டு குழந்தை விருத்தி கட்டங்களுடன் ஒப்பிட்டு அவர்களின் விசேடக் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆசிரியர் உள்ளிட்ட தொழில் வல்லுநர்களால் உருவாக்கப்படும் முறையான கல்வித் திட்டமாகும். IEPஇன் குறிக்கோள் என்னவெனில் குழந்தையின் கற்றல்வாய்ப்புகளின் முன்னுரிமைக்கமைவாக ஆயத்தப்படுத்துவதாகும். அதற்காக முதலில் கல்வி மதிப்பீடொன்றை மேற்கொண்டு குழந்தையின் பலம் மற்றும் உடல், உள, இயக்க சிக்கல்கள் போன்றவற்றை அடையாளம் காண வேண்டும்.மாணவரை அதிக வெற்றிகரமாக மற்றும் விளைத்திறனாக ஆக்குவது எவ்வாறு? அதற்காக மாணவருக்கு

அதிக தேவைப்படுவது என்ன? என்பதை புரிந்துகொள்வது இந்த திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

குழந்தையினால் குழந்தைக்கு ஏற்படக்கூடிய மாற்றங்கள் பல்வேறுபட்டது என்பதாலும், அவர் ஒப்பிட்டளவில் வளர்க்கப்பட வேண்டியவர் என்பதாலும் இது தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டம் என அடையாளம் காணப்படுகின்றது. IEP இன் குறுகிய கால இலக்கு போலவே நீண்டநாள் இலக்கு என குறிப்பிடப்பட வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அல்லது தலைப்பு/மொடியூல் மற்றும் இறுதியில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் பின்னர் புதிய இலக்குகளுடன் IEP இல் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

11.1.2 இதில் மிக முக்கியமான விடயம் என்னவெனில் குழந்தையின் சமகால நிலையை புரிந்துகொள்ளுதல் ஆகும்.இதற்காக மாணவர் கல்வியினை மதிப்பீட்டிற்கு உள்ளாக்குவதன் மூலமாக அடையாளம் காணப்பட்ட விடயங்கள் மற்றும் மாணவரை பாடசாலையில் சேர்த்தப் பின்னர் முதல் மூன்று மாதத்தில் கணககாணிப்பதன் மூலமாக இகங்காணப்பட்ட விடயங்களை கயன்படுத்த வேண்டும். அந்த பாவனையின் ஊடாக ஆசிரியர் ஆலோசகர் மற்றும் விசேடக கல்வி ஆசிரியரினால்,நீண்டகால இலக்குகளை முதலில் அடையாளம் காண வேண்டும். அதன் பின்னர்நீண்டகால இலக்குகளைஅடைவதற்காகப் படிப்படியாக அடைய வேண்டிய குறுகிய கால குறிக்கோள்களை இனங்காணல் வேண்டும். அதன் பிரகாரம்IEP திட்டங்கள் மற்றும்˙ ILP திட்டங்களை தயாரிக்க வேண்டும்

11.1.3 IEP திட்டமிடப்பட்ட பின்னர் குழந்தையிடம் காணப்படும் தற்போதைய நிலையின் பலம் பலவீனம் போன்ற வாய்ப்புகள் மற்றும் IEPஇன் மூலமாக விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திறன்/இலக்கு தொடர்பில் பெற்றோர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி குழந்தையின் விருத்திக்கு அவர்களின் செயற்பாடு குறித்து அறிவுறுத்தப்படல் வேண்டும்

எ.கா: குழந்தைக்கு சட்டையில் பொத்தானை பொருத்தி ஆடை அணியும் நிலை வரையில் விருத்தியடைந்திருப்பின் எதிர்காலத்தில் குழந்தைக்கு சட்டையை அணிந்துகொள்வதற்கு இடமளிக்க வேண்டியதுடன் பெற்றோர்கள் அதிலிருந்து விலக வேண்டும்.

IEPயை தயாரிப்பதற்காக குழந்தையை புரிந்துகொள்வதற்கு குழந்தை நோய் விசேட வைத்தியர், பேச்சு, பௌதீக மற்றும் வாய்மொழி சிகிச்சையாளரின் அறிக்கை மற்றும் ஆலோசனைகளுக்கு உதவி பெற வேண்டும். IEP தயாரித்தலை விசேடக் கல்வி ஆசிரியர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஒன்றுசேர்ந்து மேற்கொள்ள வேண்டியதுடன், வலயத்தின் விசேட கல்வி ஒருங்கிணைப்பு அதிகாரி, விசேடக் கல்வி ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், விசேடக் கல்வி ஆசிரியர், பாடசாலையில் விசேட/உட்படுத்தல் கல்விப் பிரிவின் தலைவர் மற்றும் தேவைக்கேற்ப ஏனைய பாடங்களை கற்பிக்கும் பல்வகைப் பாடக் குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

11.1.4 ஒவ்வொரு பிள்ளைக்காகவும் விசேட அறிவுடன் கூடிய தொழில் வல்லுநர்களை வழங்க முடியாததனால் அந்த வலலுநர்களிடம் இருந்து தேவையான பயிற்சியை பல்வகைப் பாடக் குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களத்தனால் செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

### 11.2 தனிப்பயனாக்கப்பட்ட பாடத் திட்டம். (Individual Lesson Plan -ILP)

11.2.1 IEPயை அமுல்படுத்துவது ILPமூலமாக இடம்பெற வேண்டும். பாடம்/தலைப்பு/செயற்றிட்டம்/மொடியுல் போனறவற்றின் ஊடாக குழந்தை பெறவேண்டிய திறனை அடைவதற்காக பெறவேண்டிய துணை திறன்கள் அல்லது துணை திறமைகளை அடிப்படையாகக் கொண்டு மாணவரை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் அறிவாற்றல், புலனுணர்வு, மன இயக்கம் மற்றும் பயன்படுத்தலை குறிக்கோளாகக் கொண்டு

தனப்பயனாக்கப்பட்ட பாடங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரே அறிவு மட்டத்தில் அல்லது வளர்ச்சி மட்டத்தில் அல்லது ஒரே வகையாகக் காணப்படும் பிள்ளைகளுக்கு வெவ்வேறாக IL இருப்பினும் கற்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரே பாடத்தை தழுவி அந்த மாணவர்களுக்குக் கற்பிக்கலாம். இருப்பினும் அந்தந்த மாணவரின் தோற்றம் அல்லது சுருக்கத்தை மதிப்பீட்டிற்கு உள்ளாக்க வேண்டியது அந்தந்த மாணவரின் விருத்தி மட்டத்திற்கமைவாகவே ஆகும்.

## 12.0 விசேட கல்வித் துறைக்காக நியமனம் பெற்றவர்களை சேவையில் ஈடுபடுத்தல்.

12.1 விசேட கல்வி அலகில் கல்விச் செயற்பாடுகளை அது தொடர்பில் விசேட பயிற்சிப் பெற்ற ஆசிரியரின் மூலமாகவே வழிநடத்தப்படல் வேண்டும்

12.2 விசேடக் கல்வித் துறைக்காக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் வேறு பாடங்களை கற்பிப்பதற்காக ஈடுபடுத்துவது ஒருபோதும் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதுடன், அவர்களை சேவையில் ஈடுபடுத்துவது சகல அதிபர்களின் மற்றும் கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும். 2012.11.23 ஆம் திகதி மற்றும் இலக்கம் ED/1/28/2/249மற்றும் சுற்றறிக்கை இலக்கம் 42/2012இன் படி விசேடக் கல்வி பாடத்துறையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் அத்துறையில் விசேடக் கல்வி அலகுகளில், விசேட கல்வி வளநிலையங்களில் முழுநேர கடமையில் ஈடுபடுவது அவசியமாகும். அந்த ஆசிரியர்களின் நியமனக் கடிதங்களில் எந்தவொரு துணை பாடங்கள் குறிப்பிடபட்டிருப்பினும், முக்கிய பாடமான விசேட கல்வித்துறையிலேயே பணிபுரிவது கட்டாயமாகும்.

12.3 விசேட கல்வி அலகுகளில் முழுநேர சேவையில் ஈடுபடாத ஆசிரியர்களின் சம்பள ஏற்றங்களை பரிந்துரை செய்யும் அதிபர்கள் அல்லது ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பில் வலய/மாகாண/நிரல் அமைச்சு அதிகாரிகளினால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

12.4 சுற்றறிக்கை இலக்கம் 42/2012 மற்றும் 2017.05.17 ஆம் திகதிய மற்றும் ED/9/18/8/2/6இலக்கம் கொண்ட விசேடக் கல்வி பாடத்துறைககாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அத்துறையில் சேவையில் ஈடுபடுத்தாமை குறித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவது குறித்து கல்விச் செயலாளரின் கட்டளைகளை கவனத்திற் கொண்டு விசேட கல்வி ஆசிரியர் ஒருவர் ஏனைய பாடங்களை கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பின் அவரின் சம்பள ஏற்றத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12.5 இலங்கை கல்வி நிர்வாக சேவையில் விசேடக் கல்வித் துறைக்கு நியமனம் பெற்ற iii மற்றும் ii தரங்களில் தேசிய/மாகாண/வலய/கோட்ட மட்டத்தின் உத்தியோகத்தர்களையும் சேவை பிரமாணக்குறிப்பிற்கிணங்க விசேட கல்வித்துறையில் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

## 13.0 மாணவர்களுக்காகப் பயன்படுத்தப்படும் கருவிகளின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

13.1 எழுத்துக்களை பெரிதாகும் கருவிகள்/கணினி டெப்/டேசிப்ளேயர் மற்றும் வேறு தொழில்நுட்ப கருவிகள் மற்றும் கற்கை உபகரணங்களை பயன்படுத்துவதற்கு அதிபர்கள் அனுமதியினை வழங்க வேண்டியது விசேடத் தேவைகளுடன் கூடிய மாணவர்களின் அல்லது வேறு மாணவர்களின் கல்வி தொடர்பாக குழந்தை நோய் விசேட வைத்தியர்கள்/உளசிகிச்சையாளர்கள்/சிகிச்சையாளர்கள்/விசேட கல்வித்துறையின் அதிகாரிகள் /ஆசிரிய ஆலோசகர்கள் /விசேட கல்வி ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளுக் கமைவாகவே ஆகும்.

13.2. அவ்வாறு நாள்தோறும் மாணவர்களினால் உரிய கருவிகளை பாடசாலைக்கு கொண்டு வந்த பின்னர் விசேட கல்வி அலகிற்கு பொறுப்பான ஆசிரியருக்கு/வகுப்பாசிரியருக்கு அவற்றை கையளிக்க வேண்டும். அதற்காக ஆசிரியர் பெற்றோர் மாணவர் தொடர்பான புத்தகங்களை கையளித்தல், பொறுப்பேற்றலை குறிக்கக்கூடிய பகுதியொன்றை தொடங்கலாம். அவ்வாறு இல்லாவிட்டால் அதற்காக வேறு புத்தகம் ஒன்றைப் பயன்படுத்தலாம். இல்லையேல் தாய் /தந்தை/பாதுகாவலரினால் இதை சாதாரண அப்பியாச புத்தகம் ஒன்றை பயன்படுத்தி ஆரம்பிக்கலாம்.

13.3. பாடசாலையினுள் அந்த கருவிகளை ஆசியரின் மேற்பார்வை மற்றும் வழிநடத்தலின் கீழ் பயன்படுத்தப்படல் வேண்டும். பாடசாலையினுள் அந்த கருவிகளின் பாதுகாப்பு தொடர்பாக மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டு அவற்றின் பாதுகாப்பிற்கு ஒழுங்குமுறைகளை மேற்கொள்வதற்காகத் தேவைப்படும் செயற்றிட்டம் ஒன்றை அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழுவினால் மேற்கொள்ள வேண்டும். பாடசாலை முடிவின் போது மீண்டும் பெற்றோர்/பாதுகாவலர் அதை முறையாகப் பொறுப்பேற்று எடுத்துச் செல்ல வேண்டும்.

## 14.0 விசேட கல்வி அலகிற்காக பௌதீக வளங்கள் மற்றும் பிரவேச வசதிகளை வழங்குதல்

14.1 விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளின் கல்வித் தேவைகளைப் பாதுகாப்பதற்காக வலய/மாகாண/நிரல் அமைச்சுகளின் அதிகாரிகளுக்கு விசேட கல்வி அலகுகளை ஆரம்பிக்க முடியும்.

14.2 விசேடக் கல்வி அலகை விசேட கல்வி வளநிலையமாக விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வியை விருத்தி செய்வதற்கு தேவை என்பதால் அதற்கு பொருத்தமான இடவசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் பாடசாலை கட்டிட பொறியியலாளர் மற்றும் கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும்.

14.3 2006.10.17ஆம் திகதிய மற்றும் 1467/15 ஆம் இலக்கத்தைக் கொண்ட மற்றும் 1996/28 ஆம் இலக்கத்தைக் கொண்ட குறைபாடுகள் உள்ளவர்களின் உரிமை பாதுகாக்கப்படும் சட்டத்தின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சரினால் வெளியிடப்பட்ட 2006/01 ஆம் இலக்கத்தைக் கொண்ட குறைபாடுகள் உள்ளவர்கள் தொடர்பான (பிரவேசம்) கட்டளைகளை அமுல்படுத்துவதற்காக கல்விச் செயலாளரினால் வெளியிடப்பட்ட இலக்கம் 2007/09 மற்றும் 2007.05.14 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பாடசாலைகளுக்கும் பிரவேச வழிகள், வகுப்பறைக்கான பிரவேச வழிகள், அதிபர் அலுவலகத்திற்கான பிரவேச வழிகள்,நூலகம், விளையாட்டு மைதானம், ஆய்வுகூடங்கள், சுகாதார மையங்கள் போன்ற இடங்களுக்கான பிரவேச வழிகளை ஏற்படுத்துவது பாடசாலையின் கட்டிட பொறியியலாளர், அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும். இங்கு பிரவேச வழிகள் என கூறும்போது "எவருடைய உதவியும் இன்றி பெயர் பெற்ற கட்டிடம் ஒன்றில் அல்லது பெயர் பெற்ற இடத்திற்கு அல்லது பொது சேவைகளைக்கொண்ட இடத்திற்கு பிரவேசிப்பதற்கும், அங்குமிங்கும் செய்வதற்கும் மற்றும் அங்குள்ள வசதிகள் மற்றும் சேவைகளின் பலனை பெற்றுக்கொள்வதற்கு உள்ள வசதிகள்" எனக் கொள்ளப்படும். இதன்போது உப அட்டவணை இரண்டு மற்றும் மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய திட்டங்கள் மற்றும் யுனெஸ்கோ முன்மொழிவுகள் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

14.4 குறிப்பிட்ட கல்வி திட்டங்களின் மூலமாக தேவைகளை முன்மொழிவு செய்து நீண்டகால திட்டங்களில் உள்ளடக்குவது விசேடகல்வி அலகு தொடர்பான பொருத்தமான பௌதீகவளங்களைப் பெற்றுத் தருவதும் அதிபரின் மற்றும் கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும். இதன்போது பாடசாலைகளில் பெறுகை செயற்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கைகளை பின்பற்றப்படல் வேண்டும். விசேட கல்வி அலகுகளை அமைக்கும்போது விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் ஆளுமை அபிவிருத்திக்குப் பொருத்தமான

மனங்கவர் இடவசதிகள் உள்ள இடமாக அமைக்கப்படல் வேண்டும். அந்த அலகினுள் பிள்ளைகளுக்கு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செய்வதற்கு, ஓய்வெடுப்பதற்கு, கல்வி கற்பதற்கு, அழகியல் விளையாட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மற்றும் ஆரோக்கிய மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

14.5 கல்வி அமைச்சு/மாகாணக் கல்வித் திணைக்களம் /வலயக் கல்வி அலுவலகம் /ஏனைய வெளி நிறுவனங்கள் மூலமாக விசேட கலவி அலகின் உபயோகத்திற்காக வழங்கப்படும் உபகரணங்கள் அந்த அலகின் உபயோகத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

**15.0 விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை உட்படுத்தல் கல்வியின் கீழ் தரம் 1 இல் சேர்த்துக்கொள்ளுதல்**

15.1 .அரச பாடசாலைகளில் தரம் ஒன்றில் பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளப்படுவது கல்வி அமைச்சினால் வெளியடப்படும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவே. அந்த சுற்றறிக்கைகளின் பிரகாரம் விசேடக் கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் தரம் ஒன்றில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக சலுகைகள் வழங்கப்படுவது பின்வரும் ஆலோசனைகளுக்கு அமைவாகவே ஆகும்.

15.2 ஹவிசேடத் தேவையின் கீழ் தகைமைகளை பெறுவதற்கு மூன்று வயதில் வலயக் கல்விப் பணிப்பாளரினஅலுவலகத்தில் விசேடக் கல்வி ஒருங்கிணைப்பாளரிடம் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அந்த பிள்ளைக்கு 4 வயதாகும்போது உரிய கல்வி மதிப்பீட்டிற்கு உள்ளாக்கி பரிந்துரைப் பெற்றிருக்கவேண்டும்.தேலையான சந்தர்ப்பங்களில் இவ்வாறான பிள்ளைகள் தொடர்பாக பட்டிய்ல் ஒன்றை கல்விப் பணிப்டபாளரினால் தயாரிக்கப்பட்டு உரிய பாடசாலைக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்த பட்டியல் பிள்ளைகளின் நான்கு வயதில் தயாரிக்கப்பட்டு நேர்முகத்தேர்வு தொடங்குவதற்கு முன்னால் பாடசாலைகளுக்கு வழங்கப்படல் வேண்டும். தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை தெரிவு செய்யும்போது விசேடத் தேவையில் அல்லது குறைபாடுகளின் தன்மை தொடர்பாக மருத்துவர் அறிக்கை மற்றும் கல்வி மதிப்பீட்டு அறிக்கை பரிந்துரைகள் கவனிக்கப்படல் வேண்டும். இந்த தெரிவுசெய்தல் தொ்டர்பாக பிரச்சினைகள் எழுமானால் வலய விசேடக் கல்வி மதிப்பீட்டுக் குழுவின் ஒத்துழைப்பு பெறப்படல்வேண்டும்.

15.3 வயதுக்கு முன்னால் மேற்கொள்ளப்படும் கல்வி மதிப்பீட்டு அறிக்கைளில் விசேடத் தேவைகள் கொண்ட ஒரு பிள்ளை குறுகிய காலத்திற்குள் விருத்தி செய்யப்பட்டு புதிய ஆண்டில் பொதுவான வகுப்பறையில் உட்படுத்தல் கல்வியை வழங்க முடியும் என பரிந்துரைக்கப்பட்டால் அவ்வாறான மாணவர்களின் பெற்றோர்களினால் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்க்கும் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும்போதே அந்த பிள்ளையின் குறைப்பாட்டிறு ஏற்றவாறு பிள்ளைக்கு மிகவும் பொருத்தமான அருகாமையில் அல்லதுபிற வகையின் அடிப்படையில்லான விண்ணப்பங்களை பாடசாலைகளுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுவாக தகைமையுடையோரின் பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்க முடியும். குறைபாடுகள் சேர்ப்பதற்கு தடையாக அமையாது.

15.4 முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளும் போது விசேட கல்வி அலகொன்றில் விருத்தி செய்யப்பட்டு முதலாம் தரத்திற்கு ஒருங்கிணைப்பு செய்யக்கூடிய மாணவர்களுக்காக இடவசதிகளை ஒதுக்குதல் அவசியமாகும். இடவசதிகளை ஒதுக்கும்போது மாணவரின் வகைப்படியே ஒதுக்கப்படல் வேண்டும். மாணவர், பழைய மாணவர் ஒருவரின் குழந்தையெனில் பழைய மாணவர் என்ற வகையிலும், ஏற்கனவே அவர்களின் சகோதர சகோதரி அந்த பாடசாலையில் கல்வி கற்பதாக இருப்பின் மாணவரின் சகோதரர் என்ற வகையிலும் ஏனையோருக்கு அண்மித்தவர்கள் என்ற வகையிலும் இடங்கள் ஒதுக்கப்பட்டு எஞ்சிய வெற்றிடங்களுக்காக பிள்ளைகளைத் தெரிவுசெய்தல வேண்டும்.

15.5 முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளும் போது விசேடக் கல்வி அலகொன்றில விருத்திசெய்யப்பட்டு முதலாம் தரத்திற்கு ஒருங்கிணைப்பு செய்யவேண்டிய மாணவர்களுக்காக இடவசதிகள் ஒருக்கப்படல் வேண்:டும். மாணவர் எந்த வகையைச் சேர்ந்தவர் என்பதை பொருத்துஇடவசதிகள் ஒதுக்கப்படல் வேண்டும். மாணவர் பழைய மாணவர் ஒருவரின் பிள்ளையெனில் பழைய மாணவர் பிரிவிலிருந்தும் தற்போது அவர்களின் சகோதரர் அல்லது செகோதரி ஒருவர் அந்த பாடசாலையில் கல்வி கற்பதாக இருப்பின் மாணவர் உடன் பிறப்பு பிரிவில் இருந்தும் ஏனையோர்கள் அருகாமையில் இருந்து தெரிவு செய்ய வேண்டும். எஞ்சிய வெற்றிடங்களுக்காக பிள்ளைகள் தெரிவு செய்யப்படல் வேண்டும்

## 16.0 உட்படுத்தல் கல்வி

16.1 சகல பிள்ளைக்கும் கல்வி பயில முடியும் என்பதுடன், ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வேகத்தில் கற்றலில் ஈடுபடுகின்றார்கள் என்பதும் பல வேறுபாடுகளைக் கொண்ட பல பேருக்கு பல்வேறு உதவிகள் தேவையென்பதும் உளவியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே பிள்ளைகளின் உடல், அறிவு, சமூக, உணர்வு, மொழி மற்றும் வேறு நிலைகளைக் கருத்திற் கொள்ளாது சகல பிள்ளைகளுக்கும் பொதுவான பாடசாலைகளில் கல்வி பயிலும் இடவசதிகள் அளிக்கப்படல் வேண்டும். குறைபாடுகள் உள்ள பிள்ளைகள், மகிழ்ச்சியான பிள்ளைகள் வதிவிடங்களற்ற பிள்ளைகள், கஷ்ட அல்லது நிரந்தர வதிவிடமில்லாத மக்களின் பிள்ளைகள் மற்றும் வரப்பிரசாதங்களற்ற அல்லது தனியாக்கப்பட்ட மாகாணங்களில் அல்லது குழுக்களின் பிள்ளைகள் இதில் உள்ளடங்க வேண்டும்.

16.2 குறைபாடுகளைக் கொண்ட தனிப்பட்ட ஒருவருக்கு தமது கல்வி தொடர்பாகத் தமது விருப்பை தெரிவிப்பதற்கு உரிமையுண்டு

16.3 மிக நீண்ட காலமாக விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் திறமைக்கு மற்றும் விளைத்திறனைவிட அவர்களின் குறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தும் சமூகம், விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளின் கேள்விகள் குழப்பமடைய செய்யப்பட்டுள்ளன. எனவே விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பாக உட்படுத்தல் பாடசாலைகளாக அடையளப்படுத்தப்படும் பொதுவான பாடசாலைகளில் கல்வி வழங்கும்போது அப்பாடசாலைகள் பல சவால்களை எதிர்கொள்ளும் நிலை ஏற்படுகின்றன. இதனால் உட்படுத்தல் கல்வியை வழங்குவதற்கு பிள்ளையை மையப்படுத்தப்பட்ட கற்பித்தல் முறையொன்றை மேம்படுத்துவது அவசியமாகும். இதன்போது பிள்ளையின் வேறுபாட்டை மதிக்கும் பாடசாலை சமூகம் ஒன்று உருவாகவேண்டும். அந்த பாடசாலையின் மூலமாக ஒவ்வொரு பிள்ளையினதும் சாத்தியக்கூறுகளை உயர் மட்டத்திற்கு கொண்டுவரும் உயர்மட்டத்திலான கல்வியை வழங்குவதற்கு அன்புடன் ஒருவரையொருவர் வரவேற்கும் உட்படுத்தல் சமூகமொன்று உருவாக வேண்டும்.

16.4 அவ்வாறான முறைமையொன்றில் கற்பித்தல் செயற்பாட்டின் வேகம் மற்றும் தன்மையாக அமையவேண்டியது இதற்குமுன் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைக்கு பிள்ளையை பயன்படுத்துவது அல்ல. பிள்ளையின் தேவைக்கு ஏற்றவிதத்தில் கற்பித்தலை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளை மையப்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைமை சகல பிள்ளைகளுக்கும் உபயோகமாக அமைவதுடன் அதன் பெறுபேறுகளாக ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மையே ஏற்படும். அதன்மூலமாக பாடசாலையில் இருந்து விடுபடும் மற்றும் மீண்டும் மீண்டும் பரீட்சைகளுக்குத் தோற்றும் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளலாம்.

16.5 அனைத்து பிள்ளைகளும் அவர்கள் முகம் கொடுக்கும் சிரமங்கள், மாற்றங்கள் போன்றவற்றை கருத்திற்கொள்ளமல் எல்லா சந்தரப்பங்களிலும் கல்வி கற்றல், உட்படுத்தல் வசதிகள்வழங்குவது பாடசாலையின் அடிப்படை கோட்பாடாகும். பாடசாலையானது அவர்களின் விளைத்திறனை பேணுவதற்குத் தேவையான உதவியை வழங்குவதற்கு

கட்டுப்பட்டுள்ளது. எனவே இதற்காக பயிற்சிபெற்ற விசேட கல்வி ஆசிரியர் ஒருவர் வகுப்பிற்கு வருகைதந்து IEP/ILP பிரகாரம் மாணவருக்கு உதவி வழங்குவார்ஒரு விடயம் புரியாத பட்சத்தில் அடிக்கடி கேள்விகளை தொடுக்கும் மாணவர்களை மனரீதியாகவும் உணரச்சி ரீதியாகவும பலவீனப்படுத்தாமல் அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கும் அன்போடும் கருணையோடும் மாணவரை ஊக்கப்படுத்துவது உட்ப:டுத்தல் கல்வி வகுப்பறையின் ஆசிரியரின் எதிர்பார்ப்பாகும்.

16.6 விசேடத் தேவைகளுடனான ஒரு பிள்ளையை அருகில் உள்ள பாடசாலைக்கு, அதாவது அவர் ஒரு குறைபாடற்ற பிள்ளை என்றால் சேர்க்க வேண்டிய பாடசாலையில் சேர்வதற்கு தேவையான ஒழுங்குவிதிகளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைமையின் ஊடாக அவரின் கல்வியை பூர்த்தி செய்வது கடினம் என்றால் மாத்திரம் ஆரம்பக் கல்வி மதிப்பீட்டு அறிக்கை பரிந்துரையின் பேரில் உதவிபெறும் விசேட பாடசாலையில் சேர்க்கப்பட்டு உட்படுத்தல் நியதிகளுக்கு மாறாக செயல்படுவதற்காக ஒருங்கிணைப்பின் கீழ் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உட்படுத்தல் கல்வியின்போது காதுகேளாத பிள்ளைகளை தேசிய சைகை மொழியின் மூலமாக கல்வி கற்பதாக பொறுப்பேற்க வேண்டும்.

16.7 இதற்காக பிள்ளைகளின் தேவைகளுக்கு பொருத்தமான எண்ணங்களுக்கு பொருத்தமான நெகிழ்வுடன கூடிய பாடதிட்டமொன்றை ஏற்பாடு செய்யவேண்டும். மேலதிக ஒத்துழைப்புகள் தேவைப்படும் பிள்ளைகளுக்கு அந்த உதவிகள் மற்றும் ஒத்துழைப்பை வழங்கி அனைத்து பிள்ளைகளுக்கும் ஒன்றாக கற்பதற்கு ஏற்பாடு செய்வது உட்படுத்தல் கல்வியின்போது மேற்கொள்ளப்படும். அத்துடன் விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தன்னார்வ நேர அட்டவணை ஒன்றின் படி ஒத்துழைப்பு வழங்கும் குழந்தை நட்புக்குழுவொன்றை கட்டியெழுப்ப வேண்டும்.

16.8 பிள்ளைகளின் கற்றல் வேகம் மற்றும் வேறுபாடுகளுகமைய ஒவ்வொரு பிள்ளையினதும் வகுப்பறைக்குள்ளேயும், பாடசாலை மட்டத்திலும், தேசிய மட்டத்திலான பரீட்சைகளின் போதும் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வியின் திறமையைப்போலவே பிள்ளையின் சிரமங்களை இனங்கண்டு அவர்களை அதிலிருந்து மீட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மற்றும் மதிப்பீடு செய்வதற்கும் செயற்றிட்டம் ஒன்று வகுக்கப்படும்.

16.9 கற்றலின்போதும், பாடத்திட்டத்தை அமுல்படுத்தும் போதும் அளவிடுதல் மற்றும் மதிப்பீட்டை பயன்படுத்தும்போதும், பாடத்திட்டத்தின் சிறப்புத்தன்மையை அதிகரிப்பதற்கு மற்றும் விசேடத்தேவைகளுடனான பிள்ளையை சிறப்பான மற்றும் விளைத்திறனான ஒருவராக பொருளாதாரத்திற்கு மற்றும் சமூகத்திற்கு அர்ப்பணிப்பதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் கல்வித்துறையின் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், உளவியலாளர்கள், தொழில் சிகிச்சையாளர்கள், சுகாதார அதிகாரிகள் உட்பட அனைத்து தரப்பினராலும் வழங்குவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

16.10 உட்படுத்தல் கல்வியை வெற்றிகரமாக்குவதற்கு உப அட்டவணை 2 இல் யுனெஸ்கோ அமைப்பினால் முன்வைக்கப்பட்ட உட்படுத்தல் மற்றும் கல்வி தொடர்பாக 2020 உலகளாவிய கல்வி வழிநடத்தல் அறிக்கையின் 10 முன்மொழிவுகள் மற்றும் உப அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ள கல்வி பெறுபவர்கள் தொடர்பாக கற்றல் தொடர்பான வடிவமைப்பு முறைமைகளை சகல சந்தர்ப்பங்களிலும் பிரயோக அளவில் இலங்கைக்கு பொறுத்தமான விதத்தில் பயன்படுத்தலுக்குத் தேவையான ஒழுங்குமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

16.11 உட்படுத்தல் கல்வியின் போது எந்தவொரு குழந்தையையும் அப்புறப்படுத்தலாகாது. சகல பிள்ளைகளினதும் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமாக சம உரிமையை

வழங்குதல் தனிப்பயனாக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான இடவசதிகளை வழங்கவேண்டும்.

16.12 சாதாரண வகுப்பறைகளில் கல்வி பயிலும் விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் பல்வேறு திறமைகளை கொண்டிருப்பதால் அவர்களை புறந்தள்ளாமல், வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு பல்வேறு கற்றல் முறை மற்றும் தகவமைப்பு மாற்று முறைகளை பயன்படுத்துவது மூலம் அபிவிருத்தி செய்வதற்காக செயற்படுதல் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

16.13 உட்படுத்தல் கல்வியின் மூலமாக சகலருக்கும் பண்புத்தரமிக்க கல்வியை வழங்குவதற்காக மூன்று படிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

- பாடசாலை செல்லாத வீதி பிள்ளைகள், பொருளாதார சிக்கல்களில் தவிக்கும் பிள்ளைகள், சலுகையற்ற சூழலில் (தோட்டபுற, மீன்பிடி, தீவுவாசிகள், போன்றவர்கள்) வாழும் பிள்ளைகள், தாழ்வானவர்களின் பிள்ளைகள், ஆதிவாசி பிள்ளைகள், பாடசாலைகளை விட்டு செல்பவர்கள் மற்றும் பாடசாலையில் விடுபடுகின்றவர்கள், சிறுவர் தொழிலாளிகள் போன்றவர்களை பாடசாலைமயப்படுத்தி கல்வி வசதிகளை வழங்குதல்
- பாடசாலைமயப்படுத்தாத விசேடத் தேவைகளைக் கொண்ட அனைத்து பிள்ளைகளையும் பாடசாலைமயப்படுத்தல் மற்றும் தற்போது பாடசாலைமயப்படுத்தப்பட்டுள்ள விசேட தேவைகளைக் கொண்ட அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வி வசதிகளை ஏற்படுத்தல்
- பாடசாலைமயப் படுத்தப்பட்டிருப்பினும் பண்புத்தரமிக்க கல்வியை பெறாத அனைத்து பிள்ளைகளுக்கும் பண்புத்தரமிக்க கல்வியை வழங்குவதை உறுதிப்படுத்தல். இதற்காக உப அட்டவணை இரண்டு மற்றும் மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய கல்வி மேற்பார்வை அறிக்கையில் உட்படுத்தல் கல்வி குறித்து முன்மொழிவுகள் மற்றும் கற்றலில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடர்பாக கற்றல் தொடர்பான உலகளாவிய ஆக்கங்கள் சாதாரண கல்வியின் ஆரம்ப மற்றும் இடைநிலை சகல ஆசிரியர்களினாலும் பயன்படுத்தல் வேண்டும்.

## 17.0 "சிஷ்யோதயா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிறுவனம்

17.1 எம்.ஜீ. கன்ஸல்டன் நிறுவனத்தின் உட்படுத்தல் கல்வி ஆக்கங்களின் மூலமாக விசேடக் கல்வியை வலுப்படுத்தல்" எனும் தலைப்பைக் கொண்ட கல்வி அமைச்சின் விசேட கல்வி ஆலோசகர் பிரயன் ஸ்மித் கிங்கின் அறிக்கை (2005) இன் பிரகாரம் ஆராய்ச்சிகளை நடாத்துதலும், ஆலோசனை முறை மற்றும் ஆசிரியர் பயிற்சி அபிவிருத்திக்கும் உட்படுத்தல் பாடசாலைகள் மற்றும் முறைகளை கட்டியெழுப்புவதற்கும் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் மேற்பார்வைக்காக கல்விச் செயலாளரின் தலைமையிலான கட்டுப்பாடு சபையொன்று நியமிக்கப்படும்.

17.2. கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், பரீட்சைத்திணைக்களம் மற்றும் மதிப்பீடு மற்றும் பரிசீலனை சேவை, தேசிய கல்வியியற் கல்லூரி, தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளின் அதிபர்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற விசேடத் தேவைகளைக் கொண்ட பிரதிநிதித்துவ நிறுவனங்கள் உள்ளடங்கும் விதத்தில் இந்த கட்டுப்பாட்டுச் சபையை நியமிக்க வேண்டியதுடன், பொது நிர்வாக அமைச்சின் தாபன பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் கொடுப்பனவொன்றை வழங்க வேண்டும்.

17.3 அதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக முறைசாரா மற்றும் விசேட கல்விப் பணிப்பாளரின் தலைமைத்துவத்தைக் கொண்ட கல்வி அமைச்சின் கணக்காளர் ஒருவரின், கல்வி அமைச்சின் பிரதிநிதி ஒருவரும், தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் ஒருவரும் மற்றும் நிறுவனத்தின் தாபகர் போன்ற ஏழுபேர்களைக் கொண்ட செயற்பாடுகளைத் திட்டமிடும் குழுவொன்றை அமைக்க வேண்டும் அதன் மூலமாக

கட்டுப்பாட்டுச் சபையினால் அனுமதிக்கப்படுகின்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

17.4 விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி அபிவிருத்தியை முன்னிட்டு கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை ஊக்குவிப்பதற்காக தேசிய மட்டத்தில் தரவுகள் மற்றும் தகவல் வங்கியொன்றை "சிஷ்யோதா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிறுவனத்தில் நடத்திச் செல்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக கல்வித் துறையில் அனைவருக்கும் விசேட கல்வி மற்றும் உட்படுத்தல் கல்விக்குரிய சிறப்பான கல்வி, கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறை, அந்த தரவுகள் மற்றும் தகவல்கள் வங்கிக்கு முன்னிலைப்படுத்தும் இயலுமை மற்றும் அவற்றை அந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பயன்படுத்தும் வசதிகள் வழங்கப்படும். ஆசிரியர்கள் மற்றும் வகுப்பறை ஆராய்ச்சியாளர்களினால் சிறந்த IEP/ILP குறிப்புகள், கற்றல் கற்பித்தல் மதிப்பீடு, வீடியோ நாடாக்கள் போன்றவற்றை வழங்குதல் அத்தியாவசியமாகும்.

## 18.0 விசேட கல்வி ஆலோசனைக் குழு

கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேடக் கல்வி, உட்படுத்தல் கல்விக் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கல்வி அமைச்சு செயலாளரின் தலைமையில் ஆலோசனைக் குழுவொன்று உள்ளது. இலங்கையில் விசேடக் கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், வலய மற்றும் அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கல்வி நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பெயர் முன்மொழிவுகளுக்கு ஏற்ப குழு உறுப்பினர்கள் நிமிக்கப்படுவார்கள். தாபனப் பணிப்பாளரின் அனுமதியின் பிரகாரம் இந்த உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு வழங்கல் தீர்மானிக்கப்படும்.

## 19.0 விசேடத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்காக தேசிய மட்டத்தில் மற்றும் பாடசாலை மட்டத்தில் பரீட்சை வசதிகளை பெற்றுக்கொடுத்தல்

19.1 தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சை மற்றும் கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சை போன்ற பரீட்சைகளில் பரீட்சைத் திணைக்களத்தினால் விசேடத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதற்கான விண்ணப்பங்களை முன்வைக்கும் போது விசேடத் தேவைகள் மற்றும் அதற்குரியவாறு வழங்கப்பட வேண்டிய சலுகைத் தேவைகள் தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்தல் அதிபரின் பொறுப்பாகும். இதன்கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்களை பரீட்சைத் திணைக்களத்தின் விசேடக் கல்வி தொழில் வல்லுநர்களின் பங்கேற்புடன் நேர்முகத் தேர்வுகளை நடாத்தி தேவையான பரிந்துரைகள் வழங்கப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சை சலுகைகள் வழங்கப்படும் மாணவர்களின் தகவல்கள் அடங்கிய ஆவணமொன்று கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேடக் கல்விக் கிளைக்கும், மாகாணங்கள் தொடர்பான தகவல்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வலய சம்பந்தப்பட்ட தகவல்கள் வலய கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்புதல் வேண்டும்.

19.2 பரீட்சை சலுகைகள் என்பது பரீட்சைகளின்போது பிள்ளைகளுக்கு ஏற்படும் தடைகளை அகற்றுவதாகும். எழுத இயலாத மாணவர்களுக்கு வாய்மூல பதில்களை வழங்குவதற்கும், தொழில்நுட்ப மற்றும் விசேட கருவிகளை பயன்படுத்துவதற்கும், பேசுவதற்கு மற்றும் எழுதுவதற்கும் இயலாத மாணவர்களுக்கு மாற்றுவழிகள் மூலமாக மதிப்பிடுவதற்கும், உடல் மற்றும் நரம்பு கோளாறுகள் உள்ள மாணவர்களுக்கு மாற்றுவழிகள் மூலமாக பரீட்சைகளின்போது அதிகபட்ச வெற்றியை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாற்று மதிப்பீட்டு முறை என்பது மதிப்பீட்டு முறைமையில் நிலவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள் தொடர்பான இணக்க மாற்றங்களாகும். இதற்காக பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு மாற்று மதிப்பீட்டு முறைகள் வழங்கப்பட வேண்டும்

என விடுக்கப்படும் கோரிக்கைகளை வலயக் கல்வி அலுவலகத்தின் விசேடக் கல்வி உதவி/பிரதி/கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தியதன் பின்னர் பாடசாலைகளுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும்.

இதற்காக பரீட்சைத் திணைக்களத்திற்கு உதவுவதற்காக சைகை மொழி அறிவுடன் கூடிய குழாம் ஒன்றும், பிரெய்லி முறை அறிவைக்கொண்ட குழாம் ஒன்றும், பரீட்சை வினாத்தாள்களை வாசிக்கும் கண்காணிப்பாளர்களும் உள்ளடங்களாக விசேட கண்காணிப்பாளர்களைக் கொண்ட குழாம் ஒன்றும், பயிற்சியளித்தல், பரீட்சைத் திணைக்களம் மற்றும் “சிஷ்யோதா”விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பான தேசிய நிறுவனமும் ஒன்றுகூடி மேற்கொள்ள வேண்டும்.

19.3 தேசிய மட்டத்திலான பரீட்சைகளின் போது பரீட்சைத்திணைக்களத்தினால் வழங்கப்படும் விசேட மானியங்களை ஆகக்கூடிய விளைத்திறனுடன் பயன்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறனை வகுப்பறையினுள்ளே வழங்குவதற்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளில் அந்த திறனை பெற்றுக்கொடுப்பதற்காக ஏலவே பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வசதிகள் சிலவற்றை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அறிந்து கொள்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ளது.

I. பிரேய்லி மூலமாக பதில் வழங்குவதற்கு கடதாசி உபகரணங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்
II. தேவையான அளவு பதில் வழங்குவதற்காக மேலதிக நேரத்தை வழங்குதல்
III. பெரிய எழுத்துக்களுடன் கூடிய மடக்கை புத்தகங்களை வழங்குதல்
IV. வினாத்தாள்களை வாசித்தல் மற்றும் வேறு தேவையான உதவிகளுக்காக விசேட கண்காணிப்பாளர்களின் ஒத்துழைப்பு வழங்குதல்
V. பிரேய்லி சிலேட், ஸ்டையில்ஸ், பிரெய்லி தட்டச்சு போன்ற விசேட உபகரணங்களை வழங்குதல் மற்றும் அதற்கான அனுமதி வழங்குதல்
VI. வாய்மொழி மூலம் பதில் வழங்குபவர்களின் பதில்களைபதிவுசெய்தல் மற்றும் எழுதுதல்
VII. பொருத்தமான மேசை கதிரைகளை வழங்குதல்
VIII. பிரவேச வசதிகளை வழங்குதல்
IX. குறைபாடுகளுக்கு அமைவாக வசதியானதோரணையில் இருந்து பதிலளித்தல்
வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு பாடசாலையில் இருந்து பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்
X. பதில் எழுதும்போது சுகவீனமடைந்தால் விடுப்பட்ட நேரத்தை வழங்குதல்
XI. விண்ணப்பதாரருக்கு தேவைப்பட்டால் சக்கர நாற்காலியில் இருந்து பதில் எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்
XII. காதுகேளாத விண்ணப்பதாரர்கள் தொடர்பாக சைகை மொழியில் பதில் வழங்குவதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் அவற்றை எழுத்து மூலமாகவும் பதிவுசெய்தல்

19.4. விசேட பரீட்சை வசதிகளின் கீழ் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளின் பெயர் பட்டியலில்காணப்படும் பிள்ளைகளுக்கு பாடசாலைகளை வழங்கும்போது அந்த பட்டியலின் பிள்ளைகளுக்கிடையில் புலமைப் பரிசில் பரீடட்சையின் தடைதாண்டல் புள்ளிகளை மீறியுள்ள பிள்ளைகள் ஏதேனும் ஒரு பாடசாலைக்கு விண்ணப விண்ணபித்திருந்தால், அந்த பிள்ளைகளுக்கிடையில் உச்சகட்ட புள்ளிகளை பெற்ற 3% வீதம் வரை புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 6 ஆம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த 3% வீதம் வழங்க வேண்டியது,தெரிவு செய்வதற்குரிய குறிப்பிட்ட மாணவர் எண்ணிக்கையில் இருந்தாகும்.

இதன்போது பொதுவான பிள்ளைகள் குறித்து தீர்மானிக்கப்படும் புள்ளகளின் தொகையை விட 20 புள்ளிகளுக்கும் குறைவான பிள்ளைகள் அந்த பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படக் கூடாது.

19.5 விசேட பரீட்சை வசதிகளின் கீழ் க.பொ.த (சா/தர)பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட பரீட்சை சலுகை வழங்குவதற்கு தீர்மானிக்கப்படும் பிள்ளைகளின்பெயர்பட்டியலில் காணப்படும் பிள்ளைகளுக்கு க.பொ.த. (உ.தரத்திற்காக) பாடசாலைகளை வழங்கி இந்த பட்டியலில் காணப்படும் குறைந்த தகைமைகளைப் பெற்றுள்ள பிள்ளைகளுக்கு உயர் தர வகுப்புகள் உள்ள பாடசாலைகளை வழங்கி அவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தி பெறாத அல்லது குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டிராத மாணவர்களை 13 வருட கல்வி தொடர்பாக அருகில் உள்ள பாடசாலை வழங்கப்பட்டு அவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தல் வேண்டும். க.பொ.த. (சா/தர) பரீட்சை பெறுபேறுகளுக்கமைவாக அடிப்படை தகைமைகளை பெற்றுள்ள பிள்ளைகளை அவர்களுக்கு கற்கக்கூடிய பாடநெறிகள் (கலை,அழகியல்,தொழில்நுட்பம்) போன்றவற்றுக்கு பிள்ளைகள் தெரிவுசெய்யப் படாவிடின், தகைமைகளைக் கொண்ட பிள்ளைகளில் 3% வீதம் வரையில்பாடசாலைக்கு உள்ள தூரத்தின் அடிப்படையில் உயர்தர வகுப்புகளில் சேர்க்கப்படல் வேண்டும்.ஏதேனும் ஒரு பாடசாலையில் பிள்ளைகளை உயர்தர வகுப்புகளில் சேர்ப்பதற்காக அண்மையில் உள்ள சில பாடசாலைகளை பெயரிடுவது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும். கணித பிரச்சினைகள் உள்ள மாணவர்கள் தொடர்பாக உயர் தர கலை/அழகியல் பாடநெறியில் சேர்க்கும்போது மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும்போது விசேடமாக தயாரிக்கப்பட்ட மாற்று மதிப்பீட்டு முறைமையை பயன்படுத்த முடியும்.

## 20.0 விசேடக் கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக அதிபரின் பங்கு

20.1 விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்குத் தேவையான பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்தி மூலோபாய வழிகளை திட்டமிடுதல் மற்றும் அந்த வசதிகளை உருவாக்குதல்.

20.2 விசேட கல்வி அலகில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் உட்படுத்தல் விசேட கல்வி மாணவர்கள் தொடர்பில் பொருத்தமான மதிப்பீட்டு முறையை பயன்படுத்தல் அத்தியாவசியம் என்பதுடன், அதற்காக ஆசிரியர்களை அறிவுறுத்தல் மற்றும்ஒழுங்குபடுத்தல்..

20.3 பாடசாலையினுள் பிரவேச வசதிகளை அபிவிருத்தி செய்தல்

20.4 விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் பிள்ளைகள்இயன்ற வரையில் இணைப்பாடவிதான பொது கற்றல் வாய்ப்புகளில் பங்கேற்க செய்து உட்படுத்தல் வாய்ப்புகளை வழங்குதல்.

20.5 விசேட கல்வித் தேவைப்பாடுகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் கல்வி வாய்ப்புகளை உறுதிபடுத்துவது தொடர்பாக பாடசாலை மாணவர்களினுள் நேர்மறையான அணுகுமுறைகளை உருவாக்குதல் தொடர்பாகப் பொருத்தமான செயற்றிட்டங்களை அமுல்படுத்தி விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் தொடர்பாக ஏனைய பிள்ளைகளின் ஒத்துழைப்பு மற்றும் நட்பை வழங்குவதற்கும் அவரவர்களுக்கிடையில் வரவேற்பு தன்மையை ஏற்படுத்துவதற்கும் தேவையான நேரத்தில் விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நேர அட்டவணைப்படி பணிபுரியும் தன்னார்வ மாணவர் ஒன்றியத்தை ஒழுங்குபடுத்தல்.

20.6 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆறாம் தரத்தில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களுடன் ஒன்றாக அமர்ந்து கல்வி பயில்வதற்கு இலகுவான விதத்தில் உதவி சேவைகளை வழங்குதல்.

20.7 கல்விச் செயலாளரின் இலக்கம் 17/2014 மற்றும் 2014.05.23 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேடக் கல்வி அலகுகளில் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ள விசேடக் கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 10% வீத கொடுப்பனவை வழங்குவதற்கு பரிந்துரைக்கின்றேன்.

20.8 அழகியல், விளையாட்டு மற்றும் தொழில்நுட்ப பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பாக ஒரு பாடத்திற்கு குறைந்தபட்சம் ஒருகிழமைக்கு ஒரு பாடத்தையோ நேரசூசியில் உள்ளடக்கப்பட்டு விசேட கல்வி அலகில் கல்வி பயிலும் வயது, வளர்ச்சி, திறன் மட்டத்திற்கமைவாக பொருத்தமான சாதாரண வகுப்பொன்றில் சாதாரண பிள்ளைகளுடன் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மேலதிகமாக மாணவர் இயலுமை மற்றும் வயதெல்லையை இனங்கண்டு முடியுமானவரையில்

பொதுவான வகுப்பறையில் கல்வி வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு (உட்படுத்தல் கல்வி) வசதிகளை ஏற்படுத்துதல்

20.9 சகல ஆசிரியர் தொடர்பாகவும் விசேட கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக அறிவுறுத்தும் ஆசிரியர் விருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தல், முன்சேவை மற்றும் சகல ஆசிரியர் விருத்தி செயற்றிட்டங்கள், உட்படுத்தல் முறை, உலகளாவிய திட்டங்கள், விளைத்திறனுடன் கூடிய மாற்று தொடர்பாடல் முறைமை கொண்ட கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைமை பயற்றுவிக்கும் பாடத்திட்டமாக மாற்றியமைக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான மொடியூல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்

20.10 சகல விசேட கல்வி அலகிலும் ஆசிரியர்கள்/வகுப்பறையில் மாணவர்களுக்கு உதவி வழங்கும்

கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் /பயண ஆசிரியர்களின் செயற்பாடுகள் உள்ளக மற்றும் வெளியக மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படல் வேண்டும்

20.11 பிள்ளையை பாடசாலையில் சேர்க்கும்போது பாடசாலையில் ஒப்படைக்கப்படும் சுயவிபரக் கோவை, பிறப்பு சான்றிதழ், மாணவர் செயற்பாடு குறியீடு அடங்கிய அனைத்து ஆவணங்களும் அதிபரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

20.12 அதற்கு மேலதிகமாக விசேடக் கல்வி அலகினுள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். அந்த கோவைகள், மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் அதிபரினால் மேற்பார்வை செய்து, வசதிகள் வழங்கப்பட்டு, விசேடக் கல்வி அலகில் பாடசாலை கட்டமைப்புக்குரிய அலகாகப் பேணப்படல் வேண்டும்.

I. விசேட கல்வி அலகின் லொக் புத்தகம்-கல்வித் துறையில் மற்றும் சுகாதாரத் துறையில் விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் வளர்ச்சிக்கு/மதிப்பீட்டிற்குஉரிய/அபிவிருத்திக்கு உரிய ஆலோசனை குறிப்புகள் /மேற்பார்வை ஆலோசனைகள் இங்கு குறிப்பிடப்படலாம். நாள்தோறும் ஆசிரியரினால் உரிய குறிப்புகளை வாசித்து புரிந்துகொண்டு அமுல்படுத்தி நாளாந்தம் விசேடக் கல்வி ஆசிரியரின் குறிப்புகளையும் இட்டு இற்றைப்படுத்தி பேணப்படல் வேண்டும்.

II. விசேட அதிதிகளின் குறிப்பேடு

III. வகுப்பின் பொருள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய உப தொகைப்புத்தகம்

IV. நாளாந்த வருகைக்கான பெயர் பட்டியல்

V. மாகாண/வலய/கல்வி அலுவலகங்களில் அனுமதிக்கப்பட்ட பாடசாலை நேர அட்டவணையில் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட விசேட கல்வி அலகிற்குரிய நேர அட்டவணையின் பிரதி

VI. 3 வயதில் விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் பதிவுசெய்யும் போது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தில வலயக் கல்வி அலுவலகத்தினால் பதவிமுத்திரையிட்டு உறுதிப்படுத்தப்படும் இரண்டாவது பிரதி
VII. அந்தந்த மாணவரின் வைத்திய/மருத்துவ/சிகிச்சைக்குரிய அறிக்கைகளின் பிரதிகள்
VIII. அந்தந்த மாணவரின் பிறப்பு சான்றிதழின் மூலப்பிரதி (அலுவலகத்திற்கு மேலும் ஒரு பிரதியை வழங்கவேண்டும்.)
IX. அந்தந்த மாணவரின் கல்வி மதிப்பீட்டு அறிக்கை
X. அந்தந்த மாணவரின் தனிப்பயனாக்கப்பட்ட பாடத்திட்டம
XI. தனிப்பயனாக்கப்பட்ட பாடத்திட்டம்
XII. அந்தந்த மாணவரின் அடைவுமட்ட திறன் விருத்தி திட்டம்
XIII. ஒருங்கிணைத்தல்/உட்படுத்தல் செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒத்துழைப்பு கல்வியை வழங்குவதென்றால் கற்பிக்கும் இடம், திகதி, காலம், பாடம்/தலைப்பு/மொடியூல் மூலமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் விசேட இலக்குகள் உள்ளடக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட பாடத்திட்டங்கள்
XIV. பிள்ளைகளின் புகைப்படங்கள் உள்ளிட்ட அடையாள பெயர்ப்பட்டியல்
XV. மாகாண மற்றும் தேசிய வள நிலையங்களுடன் பரிமாற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறான செயற்றிட்டங்களை தயாரிக்கும்போது எதிர்காலத்தில் ஒரு மாணவரின் அடையளத்திற்கு பங்கம் ஏற்படாத விதத்தில் கற்றல் விடயங்களை மாத்திரம் புகைப்படம்/வீடியோ செய்யவேண்டும். இதற்கு மேலதிகமாக சகல பிள்ளைகள் தொடர்பாகவும் கணினி பக்கம் ஒன்றை வடிவமைக்க வேண்டும். அதன் ஆரம்ப தினத்தில் பெறப்பட்ட நிழற்படம் மற்றும் மாணவரின் அடைவுமட்டத்தை காட்சிப்படுத்தும் படங்கள் உள்ளிட்ட கோவை ஒன்றை பராமரிக்க வேண்டும். அந்த கணினியிலேயே மாணவரின் மதிப்பீட்டு அறிக்கை இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். அதில் நல்ல கல்விக்குரிய குறிப்புகள், நிழற்படங்கள் அல்லது வீடியோ காட்சிகளை உள்ளடக்க வேண்டும்.
XVI. உட்படுத்தல் வசதிகளை பெறும் பிள்ளைகளின் பெயர் பட்டியல் மற்றும் உரிய விடயங்கள்

## 21.0 விசேடத் தேவை கல்வி மற்றும் ஆரம்ப, இடைநிலை பிரிவு ஒருங்கிணைப்பிற்காக உட்படுத்தல் ஒருங்கிணைப்பு பிரிவுத் தலைவர் ஒருவரை நியமித்தல் மற்றும் அந்தப் பிரிவுத் தலைவரின் செயற்பாடுகள்

21.1 அதிபரின் செயற்பாடாக காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஆலோசனை ஆசிரியரினால் விசேடக் கல்விப்பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் வெளி சமூகத்துடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு விசேட கல்வி அலகின் அபிவிருத்திக்கும், உட்படுத்தல் கல்வியைப்பெறும் மாணவர்களின் விருத்திக்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுவான மாணவர்கள் ஆசிரியர்கள் உள்ளடங்கிய பாடசாலையின் அனைத்து பங்குதாரர்களை அறிவுறுத்துவதற்காக சகல பாடசாலைகளுக்கும் விசேடத் தேவை கல்வி ஒருங்கிணைப்பு ஆசிரியர் ஒருவரை ஆசிரியர் குழாமில் இருந்து நியமிக்கப்படல் வேண்டும்.

21.2 கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு சலுகை வழங்குதல் பொது வகுப்பறைகளில் காணப்படும் விசேடத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் உதவி ஆசிரியர் நேர அட்டவணை, IEP/ILP ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல் அந்த பிரிவுத் தலைவரின் செயற்பாட்டை சார்ந்ததாகும்.

21.3 தமது பாடசாலை சார்ந்த பயண ஆசிரியர்கள் தொடர்பிலான ஒருங்கிணைப்பும் அவர்களின் ஆசிரிய நேர அட்டவணை IEP/ILP ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல் அந்தப் பிரிவுத் தலைவரின் செயற்பாட்டை சார்ந்ததாகும்.

21.4 விசேடக் கல்வி அலகுகளில் கல்வி பயிலும் மாணவர்கள் சமூகத்தில் ஏனையோரோடு சமூகமயமாக வாழ்வதற்குத் தேவையான புரிந்துணர்வு மற்றும் திறன்களை வளர்ப்பதற்காக உட்படுத்தல் கல்வியைப் பெறுவது மிக முக்கியமாகும். விசேடக் கல்வி அலகில் கல்வி பயிலும் மாணவர்களுடன் சேர்ந்து ஒற்றுமையுடன் செயற்படுவதற்காக ஏனைய மாணவர்கள், ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். இதனால் ஆரம்ப/கனிஷ்ட இடைநிலை வகுப்புகளில் செயற்பாடுகளின் போது அதிபரின் அறிவுடன் ஏனைய பிள்ளைகளுடன் ஒன்றுசேர்ந்து செயல்புரிவதற்காக விசேட கல்வி அலகில் கல்வி பயிலும் மாணவர்களும் அவ்வப்போது பொதுவான வகுப்பறையில் உட்படுத்தல் கற்றல் வாய்ப்புகளை ஒழுங்கமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது பிரிவுத் தலைவரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21.5 விசேடத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மற்றும் ஏனைய மாணவர்களிடம் இருந்து ஏற்படும் துன்புறுதல்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

21.6 அத்துடன் இடைநிலைப் பிரிவின் மாணவர்களுடன் ஒன்று சேர்ந்து அழகியல், மனையியல், சுகாதாரம் மற்றும் உடற்கல்வி போன்ற பிரயோக விடயங்களைக் கற்பதற்குச் சந்தர்ப்பங்களை வழங்குதல், இணைப்புச்செய்தல் பிரிவுத் தலைவரின் பொறுப்பாகும்.

21.7 அதிபர் மற்றும் விசேட தேவைகள் கல்வி ஒருங்கிணைப்பாளர்/ பிரிவு தலைவர்கள் ஒன்றுகூடி உட்படுத்தல் கல்வியை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதாக இருப்பின் உட்படுத்தல் கல்வி தொடர்பாக பாடசாலையின் பங்குதாரர்களான பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் குழாம், கல்விசாரா பணிக்குழுவினர், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் பிரதேசவாசிகள், அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரிகள், சமய தலைவர்கள் உட்படுத்தல் கல்வி தொடர்புகள் உட்பட ஒட்டுமொத்த மக்களிடையே உட்படுத்தல் கல்வி தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். உட்படுத்தல் கல்வி வசதிகளை தேவையான பிள்ளைகளுக்கு உட்படுத்தல் கல்வி தொடர்பில் சகல பிரிவினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதை புரியவைப்பது அந்த ஒருங்கிணைப்பு அதிகாரிகள்/பிரிவுத் தலைவர்களின் பொறுப்பாகும்.

## 22.0 பாடசாலையில் ஆலோசனை ஆசிரியரின் செயற்பாடுகள்

22.1 ஏனைய பிள்ளைகளின் உதவி விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கு வழங்குவதில் ஒருங்கிணைப்பு மற்றும் உட்படுத்தல் கல்வியின் அடிப்படை குறிக்கோள்களை நிறைவேற்றவதற்கு இலகுவாக அமையும். அப்போது ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்தி ஒற்றுமையுடன் கல்வி பயில்வதற்கு வசதியாக அமையும். இதற்காக அடிக்கடி அந்த பிள்ளைகளுடன் ஒற்றுமையாக செயல்புரிவது தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்துவது, அறியச்செய்வது, பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் நடுநிலை வகித்து தீர்வுகாண்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவது, ஆசிரியர் குழாம் மற்றும் பெற்றேர்களை அறிவுறுத்தல் பாடசாலையில் ஆலோசனை செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவிருக்கும் ஆசிரியரின் கடமையாகும்.

22.2 விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் துன்புறுத்தல்களின் போது தேவையான ஆலோசனை வழங்குதல் மற்றும் வழிகாட்டல்

22.3 விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் தொழில் விருத்தி தொடர்பாக அவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவளர்களை அறிவுறுத்தி ஊக்கமளித்தல்

## 23.0 சிறப்பான அறிவார்ந்த திறன்களைக் கொண்ட பிள்ளைகளை இனங்காண்பது, கல்வி வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்

23.1 இலங்கையில் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப, அரசியல், கல்வி மற்றும் கலைப்பிரிவுகளில் முன்செல்லக்கூடிய சிறப்பான குழந்தைகளை சிறுபருவத்திலேயே இனங்கண்டு அவர்களுக்காக விசேட கல்வித் தேவைகளை வழங்குதல் கல்வி அமைச்சின் பொறுப்பாகும். குழந்தை பருவத்திலிருந்தே அற்புதமான திறமைகளைக் கொண்ட குட்டையான (Podgy), படைப்பாற்றலுடன் கூடிய புதிய எண்ணங்களுடன் கூடிய சிறப்பு திறமையுடைய,(Genius), மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பிரிவுகளில் ஏனைய மாணவர்களை விட முன்னிற்கும் இயல்புத் திறமையுடைய,(Gifted), புதிய எண்ணங்கள் மற்றும் சிந்தனைகளுக்கு அமைய செயல்புரியும் ஆக்கபூர்வமான (Creative) மற்றும் மொழியியல், அழகியல் அல்லது தொழில்நுட்ப துறையில் புதிய சிறுபருவத்தில் இருந்தே அதற்கான முயற்சியில் ஈடுபடும், கண்டுபிடிப்புகளில் ஈடுபடும், உள்ளார்ந்த திறமைகளைக் (Talented) கொண்ட மாணவர்கள் இதில் அடங்குவார்கள்.

23.2 உயர்ந்த கல்வி திறன் கொண்ட இயல்புத்தன்மையுடைய, உள்ளார்ந்த திறமைகளைக் கொண்ட, சிறப்புத் தன்மையுடைய கல்வியில் மேம்பட்ட, ஆக்கபூர்வமான அல்லது திறமையான, அறிவார்ந்த குழந்தைகளுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான கற்றல் முறை உள்ளடக்கிய கல்வி விசேட தேவையுடைய கல்வியில் உள்ளடங்கும்..

23.3 பொதுவாக பாடம் குறித்து ஆசிரியரிடம் கேள்வி கேட்டும், ஞாபக சக்தி அதிகமான, உடனடியாகவே அதிக தகவல்களை முன்னிலைப்படுத்தும், அதிகமாக ாசிக்கும் திறனைக் கொண்ட நிரந்தரமாகவே நூல்களின் கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் திறமைக் கொண்ட, உளவியல் ரீதியாக குறிப்பிட்ட வயதுக்கு முதல் வார்த்தைகளை உச்சரிக்கும் முயற்சியுடைய, அதிகமான வார்த்தைகளை வெளிக்கொணரக் கூடிய பேச்சு ஆற்றலைக்கொண்ட, கடிகாரத்தின் முற்கள் செயல்படும் விதம், நாட்குறிப்பு தொடர்பாக முயற்சியுடைய, Jigsaw Puzzles (புதிர்கள் மற்றும் சிக்கல்கள்) குறுகிய காலத்தில் தீர்வு தரக்கூடிய மாணவர்களை அடையளம் கண்ட பின்னர் அவர்களை அறிவு பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் சிறப்பு திறனைக் கொண்ட மாணவர்களை இனங்காண முடியும்.

இதற்கான அளவுகோல்கள் கல்வி அல்லது ஆக்கபூர்வமான திறன்களாகும். அவற்றை எடைபோடுவதற்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டு தரப்படுத்தப்பட்ட நுண்ணறிவு அளவீடுகளுடன் தயாரிக்கப்படல் வேண்டும். 130 புள்ளிகள் தொடக்கம் 144 வரையில் நல்ல நடுத்தர குழந்தைகள் ஆவார்கள். இந்த அறிவு பரிசோதனையில் 145 முதல் 159 வரையிலான புள்ளிகளைக் கொண்ட குழந்தைகள் நல்ல குழந்தைகள் ஆவார்கள். 160 முதல் 179 வரையிலான புள்ளிகளை பெறும் மாணவர்கள் சிறப்பு திறன்களைக் கொண்ட மாணவர்கள் என அடையாளம் காணலாம். 180 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்கள் ஆழ்ந்த சுப வாழ்க்கையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

23.4 145 அல்லது அதற்கு மேலான புள்ளிகளை பெறும் மாணவர்கள் தொடர்பாக இந்த பிரிவின் கீழ் வசதிகள் வழங்கப்படும். இவ்வாறான மாணவர் ஒருவர் வலய கல்வி மதிப்பீட்டுக் குழுவால் அடையாளம் காணப்பட்ட பின்னர் அவர்களின் கல்வி மதிப்பீட்டறிக்கையுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு மற்றும் கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேட கல்விக் குழுவிற்கு அறியத்தர வேண்டும்.

23.5 விசேட திறன்களைக் கொண்ட பிள்ளைகளை அடையாளம் காணுதல் மற்றும் அதி விசேட திறன்களைக் கொண்ட மாணவர்களை இன ங்காண்பதற்குப் பொருத்தமான வயதாகக் கணிப்பது 5 முதல் 8 வரையிலான வயதெல்லையாகும்.

23.6 ஒரு பிள்ளை சிறப்பான திறனைக்கொண்ட பிள்ளையாக உறுதிப்படுத்தப்படுவாரெனில் பின்வரும் பரிந்துரைகளை வழங்கி தேவையான படிமுறைகளை நடைமுறைப்படுத்தலாம்.

1. அந்த மாணவரின் பாடத்திட்டத்தை போஷிப்பதற்கு மேலதிக நூல்களை பரிந்துரைத்தல்.
2. அந்த மாணவர் ஆர்வம் காட்டும் பாடத்துறையை கற்பதற்கு வாய்ப்புகளை வழங்குதல்
3. இரட்டை சித்திகள் வழங்குவதன் மூலம் அவரின் அறிவு மட்டத்திற்கு சமமட்டத்திலான வகுப்பொன்றில் கற்பதற்கு இடமளித்தல்
4. அரசாங்க பரீட்சைகளுக்குத் தோற்றும் வயதெல்லையில் இருந்து விடுவிப்பது மற்றும் அடுத்த பாடத்திட்டத்திற்குப் பதிவுசெய்யும் வயதெல்லையில் இருந்து விடுவித்தல்.
5. அந்த மாணவர் ஆர்வம் காட்டுகின்ற துறைகளை ஆழமாக பயில்வதற்கு மற்றும் தகவல்களைச் சேகரிப்பதற்குரிய நூலகங்களில் தம்மை பதிவுசெய்துக் கொள்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்
6. மாணவரின் திறமைக்குப் பொருத்தமான வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலையொன்றில் கல்வி பெறும் சந்தர்ப்பங்களை வழங்குதல்.
7. புதிய படைப்புகள் அல்லது புதிய ஆக்கங்களைச் செய்வதற்கு மானியங்களை வழங்குதல்

இந்த மாணவர்கள் எந்த பாடசாலையில் கற்றலை மேற்கொண்டார்களோ அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மானியங்கள் வழங்குவது கல்வி அமைச்சினால் மேற்கொள்ள முடியும். கல்வி அமைச்சின் அனுமதியின்றி இந்த வசதிகள் வழங்கப்படமாட்டாது.

## 24.0 கற்பவர்களுக்கான கற்றல் தொ்டர்பான உலகளாவிய படைப்புகள்

24.1 ஒவ்வொரு மாணவரினதும் கலாசார சூழல், சமூக பொருளாதார சூழலுடன் வேறுபடும். சகாலரும் சகலவற்றிலும் வேறுபட்டு விளங்குகிறார்கள். மொழியை எழுதுதல் வாசித்தல் போன்ற அனைத்திலும் சகலரும் வேறுபடுகிறார்கள்.. பன்முகத்தன்மையுடன் கூடிய பிள்ளைகள் இருக்குமிடத்தில் பல்வேறு விசேட தடைகள் காணப்படுகின்றன. எனவே அவ்வாறான வேறுபட்ட தடைகளை தவிர்த்து சகலருக்கும் சிறப்பாக திகழ்வதற்கு சமமான வாய்ப்புகளை வழங்குவது உலகளாவிய கற்றல் தொடர்பான எதிர்ப்பார்ப்பாகும்.

24.2 உலகளாவிய கட்டிடக் கலை வடிவமைப்பு என்பது உட்படுத்தல் கட்டிட கலையாகவே கருதவேண்டும். உலகளாவிய திட்டங்கள் என்பது வெவ்வேறு உடல் மற்றம் உள இயலுமையைக் கொண்டவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சூழல் ஒன்றை மற்றும் பொருட்களை வடிவமைப்பதற்காக உபயோகப்படுத்தும் முறையாகும். இதற்காக சகல பொது இடங்கள் மற்றும் பாடசாலைகள், கட்டிடங்கள், இடம், வகுப்பறைக்குள் பிரவேசிப்பதற்கான விரிவான நுழைவாயிலைக் கொண்ட, தடைகளற்ற, பிரவேசிப்பதற்கு அடையளங்கள், கைபிடிகளைக் காட்டும் சைகைப் பலகைகள் போன்வைகள் குறைபாடுகள் உள்ளவர்களுக்கும் சாதாரணமானவர்களுடன் சகல இடங்களுக்கு பிரவேசிக்கக்கூடியவாறு தயாரிக்கப்படல் வேண்டும்

24.3 அத்துடன் கற்பவர்கள் தொடர்பாக கற்றல் தொடர்பான உலகளாவிய படைப்புகளின் படி வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும். உலகளாவிய திட்டங்களுக்காக கற்றல் வடிவமைப்பு என்பது கற்றல் பெறுபவரை மாற்றாமல் சூழுலைத் திட்டமிட்டு, கற்பவரின் இயலுமைகளுக்கு அப்பால் சென்று பண்புத்தரமிக்க

கல்வியினை வழங்குவதற்காக வகுப்பறையில் அனைத்தையும் கற்பதற்கான முழுமையான பிரவேச வழிகளை வழங்குவதாகும். அதன் மூலமாக ஒவ்வொரு மாணவரினதும் தனிப்பட்ட ஆயத்தம், ஆர்வம் மற்றும் கற்றல் உபகரணங்களை வெளிப்படுத்துவர். இதன் மூலமாக குறைபாடுகளைக் கொண்ட குறைபாடுகள் அல்லாத அனைத்து மாணவர்களுக்கு ஒரே சூழலில் பா்டசாலையில் சிறப்பாக விளங்குவதற்கு இடமளிக்கிறது. இதன்போது பல்வித முறைகளின் மூலமாக முன்னிலைப்படுத்தல் அதாவது கற்றல் சூழலை செறிவூட்டலை சுட்டிக்காட்ட இயலும். இதற்காக வகுப்பறையில் கல்வி பயிலும் அனைவருக்கும் எல்லா வகையான கற்றல் முறைகளுக்கும் பிரவேசிப்பதற்கு இயலுமையை வழங்கும். (கணினி, படங்கள், வீடியோ, ஆடியோ போன்ற பல்வேறுபட்ட) அத்துடன் பல்வேறு முறைகளின் மாணவர்களுக்கு வெளிப்படுத்தலகளுக்கு அவகாசம் வழங்க வேண்டும். அதாவது, எழுத்துமூலமானவெளியீடுகள் மட்டுமல்ல கிராபிக் ஒழுங்கமைப்பு, வாய்மூல வெளியீடுகள், மற்றும் பல்வேறு மட்டங்களில் உதவி வழங்கலை குறிப்பிடலாம். மேலும், கற்றலில் ஈடுபடுவதற்கு உண்மையான உலகத்தின் அனுபவங்களுடன் கற்றலை தொடர்பு படுத்தக் கூடிய வாய்ப்புகளின் சுவை மற்றும் ஆளுமைக்கு அமைவாக கற்றல் அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு தேர்வுகளை முன்லிைப்படுத்துவது இந்த கற்றலுக்கான உலகளாவிய ஆக்கங்களின் ஊடாக எதிர்ப்பார்க்கப்படுகின்றன. அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு முடியாவிட்டால் கற்றலைத் தொடர முடியாது என உலகளாவிய திட்ட வடிவமைப்புகளில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.. இதனால் மாணவர்களின் தேவைக்கேற்ப பல்வித மற்றும் நெகிழ்வான வெளியீடுகளை ஊடகங்கள் வழங்கவேண்டும்

24.4 வெவ்வேறு கற்றல் தேவைகளுடன் கூடிய ஒரே பாடத்திட்டம் வகுப்பறையொன்றில் அல்லது கற்றல் சூழலுடன் கூடிய வெவ்வேறு மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக கல்வியியலாளர்கள் பயன்படுத்தும் வெவ்வேறு கற்பித்தல் முறை

- பாடங்களைத் தழுவிக் கற்பித்தல்
- மாணவர்களின் கற்றல் பாணியின் அடிப்படையில் பாடங்களை வடிவமைத்துக் கற்பித்தல்
- இணை கற்பித்தல், தலைப்பு அல்லது ஒப்படைப்புகள் தொடர்பான இயலுமையின் படி மாணவர்களை குழுவாக அமைத்தல்
- மாதிரி மதிப்பீட்டு முறைகளை பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்தல்
- பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்கி வகுப்பறையை முகாமைத்துவம் செய்தல்

24.4 பாடங்களைத் திட்டமிடும்போது உலகளாவிய திட்டங்களின் படி பின்வரும் கற்றல் படிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

- நெகிழ்வான, தெளிவான, சிற்ப்பான கற்றல் இலக்குகளை இனங்காணுதல்
- கற்றல் மாறிகளைக் கவனித்தல்
- கற்றலை மையமாகக்கொண்ட கற்பித்தல் முறையை செயல்படுத்தல்
- மாணவர் மைய கற்பித்தல் முறையை செயல்படுத்தல்
- கற்றல் அறை மற்றும் அதற்குரிய கற்றல் ஆதாரங்களைப் பயன்படுத்தல்
- பொருத்தமான மதிப்பீட்டு முறையை தீர்மானித்தல்
- கற்பித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- தமது கற்பித்தல் திட்டங்களை சுய மதிப்பீட்டின் மூலமாக பலம், பலவீனத்தை அடையாளம் கண்டு மீண்டும் திருத்துதல்

**கற்றலுக்கான உலகளாவிய முக்கிய ஏழு கோட்பாடுகள**

- **கோட்பாடு1: சம பயன்பாடு**
- **கோட்பாடு 2: பயன்பாட்டின் நெகிழ்வுத்தன்மை**
- **கோட்பாடு 3: எளிய மற்றும் இயற்கை பயன்பாடு**
- **கோட்பாடு 4: உண்மையான தகவல்கள்**
- **கோட்பாடு 5: பிழைக்கான பொறுமை**
- **கோட்பாடு 6: குறைவானஉடல் உழைப்பு**
- **கோட்பாடு 7: அணுகள் மற்றும் பயன்பாட்டிற்?க போதிய அளவு மற்றும் அவகாசம்**

24.6 இதற்கு மேலதிகமாக உப அட்டவணை 2 மற்றம் 3 இன் படி பொருத்தமான படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்

## 25.0 இடைக்கால விதிகள்

25.1 எதிர்காலத்தில் மேற்படி 4, 5 ஆம் பந்திகளின் படி வைத்தியர்களால் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கமைவாக மாணவர் ஒருவர் பாடசாலையில் சேர்க்கப்பட்டலும் இல்லாவிட்டாலும் 3 வயதாகும்போது வலயக்கல்வி அலுவலகத்தின் விசேடக் கல்வி உதவி/பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் சென்று பதிவுசெய்யப்பட்டு ஆலோசனை பெற்றுக்கொள்வது தாய்/தந்தை/பாதுகாவளர்களின பொறுப்பாகும்

பெற்றோர்களிடம் சரியான புரிந்துணர்வு இல்லாதபடியால் தற்போது கட்டாயக் கல்வி வயதில் அதாவது 5 முதல் 16 வயது வரையிலான பெரும்பாலான பிள்ளைகள் கல்வி பெறாமல் வீட்டில் வாழ்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. இச் சுற்றிக்கை மற்றும் ஆலோசனைக் கையேடு வெளிடப்பட்டு இரண்டு வருட காலத்தை இடைக்காலமாக வெளியிடுவதுடன், அந்த காலத்திற்குள் அவ்வாறான பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படுவதற்கு இடமளிக்கப்படும்.

எனவே இரண்டு வருட காலத்திற்குள் கட்டாயக் கல்வி கட்டளைகளை செயல்படுத்தும் பாடசாலை மட்டத்திலான குழுக்கள் மற்றும் கோட்ட மட்டத்தில் மேற்பார்வைக் குழுக்கள் அந்த இடைக்காலத்திற்குள் அனைத்து பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்ப்பதும் அதற்கான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அத்தியாவசியமாகும். அந்த காலத்திற்குள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் ஒழுங்குபடுத்தும் நடடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

25.2 அந்த இடைக்காலத்திற்குள் சகல பிள்ளைகளையும் பாடசாலைகளில் சேர்க்க வேண்டியதுடன், அவ்வாறு சேர்க்க முடியாத பிள்ளைகளுக்காக கட்டாயக் கல்வி கட்டளைகளுக்கமைவாக பாடசாலைக் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் அந்த பிள்ளைகளின் இயலாமை தொடர்பாக மாற்றுவழிகளை செயல்படுத்த வேண்டும். அதற்கான சிக்கல் சுருக்க அறிக்கைகளை வலய/மாகாண கல்விப் பணிப்பாளர்களின் பரிந்துரைகளுடன் கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேட கல்விக் கிளைக்கு முன்னிலைப்படுத்தி ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

25.3 கட்டாயக் கல்வி கட்டளைகள் உள்ளடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 2(ii) அமைவாக கோட்டக் கல்விப் பணிபாளரினால் பாடசாலை போசனை பிரதேசங்களில் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைக் குழுவின் மூலமாக இடைக்காலத்திற்குள் தற்போது பாடசாலை செல்லாமல் அல்லது பாடசாலைகளில் விடுப்பட்ட சகல மாணவர்களையும் பாடசாலையில் சேர்ப்பதற்கு மற்றும் அவர்களை விருத்தி செய்வதற்கு குறிப்பிட்ட விடயங்களை செயற்படுத்த வேண்டும்.

25.4 இதற்கான விதிமுறைகளை மேற்கொள்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். வலயக் கல்விப் பணிப்பாளரினால் முறைசாரா, ஆரம்ப, விசேடக கல்வி ஒருங்கிணைப்பு அலுவலர்கள், செயற்றிட்ட அலுவலர்கள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தலைமையுடன் கூடிய கட்டாயக் கல்விக் கட்டளைகளை செயல்படுத்தும் கல்விக் குழுவின் உதவியையும் பெற்றுக்கொண்டு பிள்ளைகளை பாடசாலை மயப்படுத்துவதற்கான குழுவை வழிநடத்தி இடைக்காலத்திற்குள் இந்த இலக்கை அடையவேண்டும்.

25. 5சகல மாவட்டங்களிலும் வதிவிட வசதிகளுடன் கூடிய தேசிய பாடசாலைகளில் தங்கி கல்வி பயில்வதற்கு விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். வதிவிட பிள்ளைகளில்3% வீதம் விசேடத் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளாக இருத்தல் வேண்டும். இதற்குத் தேவையான ஒழுங்குவிதிகளை இடைக் காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டும்.

25.6 பின்வரும் சகல பயிற்சி பாடத்திட்டத்திலும் விசேடக் கல்வி மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பாக அறிவூட்டும் இரண்டு தலைப்புகளை உள்ளடக்கி அது குறித்து பரந்தளவிலான செயன்முறை புரிந்துணர்வை வழங்க வேண்டும். இதற்கு மேலதிகமாக தற்போது பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அந்தந்த காலங்களில் இற்றைப்படுத்துவதற்காக அறிவுறுத்தப்படல் வேண்டும்.

I. தேசிய கல்வி நிறுவனம் மற்றும் பல்கலைக்கழக கல்விப் பீடங்களின் கல்விமானி பட்டதாரி பாடத்திட்டம் மற்றும் பட்டப்பின் பட்டதாரி டிப்ளோமா பாடத்திட்டம்
II. ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பாடத்திட்டம்
III. கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் பாடத்திட்டம்
IV. ஏனைய புதிய ஆசிரியர்களை தொழில் ஆரம்பத்தில் திசைமுகப்படுத்தும் பாடத்திட்டம்
V. வலய கல்வி அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் பாடத்திட்டங்கள்

25.7 அந்த இரு தலைப்புகளுக்கும் உப அட்டவணை 02 இல் உள்ளடக்கப்பட்ட 10 முன்மொழிவுகள் தொடர்பாக விரிவான புரிந்துணர்வு வழங்கப்படும்.

25.8 இந்த சுற்றறிக்கைகளை வெளியிட்டதன் பின்னர் இடைக்காலத்திற்குள் அதில் அடங்கும் சகல விடயங்களையும் செயல்படுத்துதல், நிர்வகித்தல்,கண்காணித்தல், மதிப்பிடுதல், மீள்திருத்தங்களை மேற்கொள்தல் போன்ற அனைத்து விடயங்கள் தொடர்பாக பாடசாலை எவ்வளவு பண்புத்தரமானது? பாடசாலைக் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீடு செயற்பாடுகளை அபிவிருத்தி செய்து வலுவூட்டப்படும்.

25.9 இந்த சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை கையேடு தொடர்பாககாலப்போக்கில் எழும் சிக்கல்கள் காணப்படுமெனில் கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேடக்கல்விக் கிளையை அறிவுறுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இங்கு காணப்படும் விதிமுறைகளை செயல்படுத்துவதற்கு கால அவகாசம் போதாதெனில் இடைக்காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**உப அட்டவணை இலக்கம் 01**

**<u>3 வயதில் விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பதிவுசெய்தல்</u>**

**விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப் படிவம்**

I. **பகுதி (பெற்றோர் பாதுகாவலர்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

**01. பிள்ளை தொடர்பான தகவல்கள்**

1.1 முழுப் பெயர் :-.........................................................................................................................

(குடும்பப் பெயரின் கீழ்க் கோடிடுக)

1.2 முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்)......................................................................

(இறுதியில் வரும் பெயரில் ஒரு பெயரை மட்டும் எழுதுக)

1.3 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்)...................................................................

(இறுதியில் வரும் பெயரில் ஒரு பெயரை மட்டும் எழுதுக)

1.4 ஆண்/பெண் நிலை:-.................................................................................................................

1.5 சமயம்........................................................................................................................................

1.6 கற்றல் மொழி மூலம் (சிங்களம்/தமிழ்) ..................................................................................

1.7 பிறந்த திகதி.................. வருடம்................. மாதம் ................... திகதி..............................................

1.8 ஜனவரி 31 ஆம் திகதிக்கு வயது .................................................................................................

1.9 பிறப்பு எடை.................................................................................................................................

1.10 பிறந்த இடம்................................................................................................................................

1.11 விசேடத் தேவை(குறைபாடுகள்) தன்மை...................................................................................

**02. விண்ணப்பதாரர் தொடர்பான விபரங்கள் (தாய்/தந்தை/சட்டபூர்வ பாதுகாவலர்)**

**விண்ணப்பதாரர்**

2.1 முழுப்பெயர்..................................................................................................................................

2.2 முதல் எழுத்துக்களுடன் பெயர் .....................................................................................................

2.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் .............................................................................................

2.4 இலங்கையரா ..................................................................................................................................

2.5 சமயம்.............................................................................................................................................

2.6 நிரந்தர முகவரி ........................................................................................................................................

2.7 தொலைபேசி இலக்கம்...................................................................................................................

நிலையான............................... கையடக்க .......................................................

2.8 வசிக்கும் மாவட்டம்

2.9 வசிப்பிடத்திற்குரிய பிரதேச செயலாளர் பிரிவு.............................................................................

2.10 வசிப்பிடத்திற்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவு..............................இலக்கம்...................

2.11 தொழில்...................................................................................................................................

2.12 வருமானம் (அண்ணளவாக)......................................................................................................

**மனைவி**

2.13 முழுப்பெயர்............................................................................................................................

2.14 முதல் எழுத்துக்களுடன் பெயர்....................................................................................

2.15 தேசிய அடையாள அட்டை ................................................. ........................................................

2.16 இலங்கையரா ......................................................... ........................................................

2.17 சமயம்.............................................. .......................... ...........................................................

2.18 நிரந்தர முகவரி............................................. ...........................................................................

2.19 தொலைபேசி இலக்கம் நிலையான.......................................கையடக்க ..........................................

2.20 வசிக்கும் மாவட்டம்........................................................................................................................

2.21 வசிப்பிடத்திற்குரிய பிரதேச செயலாளர் பிரிவு.........................................................................

2.22 வசிப்பிடத்திற்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவு............................ இலக்கம்..............................

2.23 தொழில்....................................................................................................................................

2.24 வருமானம் (அண்ணளவாக).............................................................................................................

2.25 தாய் தந்தை இருவர்களுக்கிடையில் இரத்த உறவு உண்டா?.......................................................

2.26 குடும்பத்தில் உள்ள ஏனைய பிள்ளைகளின் எண்ணிக்கை.............ஆண் ...........பெண்.......................

2.27 அவர்களின் வயது வரிசைப்படி .......................................................................................................

2.28 அவர்கள் பாடசாலை செல்வதாயின் கல்வி பயிலும் வருடம் (வரிசையாக)

1. .........................................................................................................................

2 . .........................................................................................................................

3. ........................................................................................................................

4. ........................................................................................................................

2.29 அவர்கள் விசேட தேவைகளுடைய பிள்ளைகள் என்றால் அது குறித்த விபரங்கள்.......................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

**பகுதி II (தாய்/தந்தை/பாதுகாவலருடன் கலந்துரையாடி விசேடக் கல்வி ஆசிரிய ஆலோசகர்/சிரேஷ்ட விசேடக் கல்வி ஆசிரியரினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்)**

**03. குழந்தையின் பிறப்பு தொடர்பான விபரங்கள்**

3.1 குழந்தை பிறக்கும்போது தாயின் வயது..................................

3.2 கர்ப்பக் காலத்தில் ஏதேனும் நோய்கள்/ஆபத்துக் காரணிகள் இருந்தனவா?..............................

":ஆம்'" எனில் சுருக்கமாகக் குறிப்பிடவும் ..........................................................................

3.3 பிரசவ விபரங்கள்

1. சாதாரண பிறப்பு ☐
2. சத்திரசிகிச்சை மூலமான பிறப்பு ☐
3. கருவி பயன்படுதல் ☐

3.4 முதிர்ச்சி பெறாத குழந்தை ☐ பிறக்கும் போது ஒரு முதிர்நத குழந்தை

3.5 பிறக்குமபோது குழந்தையின் எடை ☐ ☐

3.6 பிரசவத்தில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தனவா? ☐

குழந்தையின் அழுகை தாமதமானது ☐

குழந்தை மஞ்சல் நிறமாகுதல் ☐

குழந்தை பிரிவில் சிகிச்சை பெறுதல் ☐

வேறு ☐

**III பகுதி III ( விசேடக் கல்வி உதவி/பிரதி கல்விப் பணிப்பாளரினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்)**

1. கலந்துரையாடல்

பங்கேற்றவர்களின் பெயர்கள்...........................................................................................................:

தோன்றிய சிக்கல்கள் மற்றும் ஆலோசனைகள்

..........................................................................................................................................................
..........................................................................................................................................................

2 கலந்துரையாடலில் பங்கேற்றவர்களின் பெயர்கள்
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

தோன்றிய சிக்கல்கள் மற்றும் ஆலோசனைகள்

..........................................................................................................................................................
..........................................................................................................................................................

3 கலந்துரையாடலில் பங்கேற்றவர்களின்
பெயர்கள்.........................................................................................................................................
..........................................................................................................................................................

தோன்றிய சிக்கல்கள் மற்றும் ஆலோசனைகள்

..........................................................................................................................................................
..........................................................................................................................................................

கல்வி மதிப்பீட்டை நடாத்துவதற்கு வழங்கப்பட்ட திகதி.............................................................................

கல்வி மதிப்பீட்டை நடாத்துவதற்கு வழங்கப்பட்ட இடம்

பெற்றோர்களுக்கானஆலோசனை

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

ஆசிரியருக்கான ஆலோசனை

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
.....................................................................................................மதிப்பிடப்பட்டதிகதி -:
..........................................இடம்..........................................

மதிப்பீடு செய்தவரின் பெயர்/பதவி/சேவைபுரியும் இடம்

1.........................................................................................................................

2.........................................................................................................................

3.........................................................................................................................

கல்வி மதிப்பீட்டில் செய்யப்பட்ட பரிந்துரை ..........................................................................................

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொண்ட படிமுறை. ........................................................

விசேடக் கல்வி உதவி/பிரதிக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை

பரிந்துரைக்கின்றேன் / இல்லை

ஒப்பம் :- ........................................................................

பதவி முத்திரை :- .......................................................

வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி

அனுமதிக்கின்றேன்/இல்லை

ஒப்பம் :- ........................................................................

பதவி முத்திரை :- .......................................................

**<u>உலகளாவிய கல்வி மேற்பார்வை அறிக்கையில் உட்படுத்தல் கல்வி தொடர்பாகவுள்ள 10 முன்மொழிவுகள்</u>**

உட்படுத்தல் மற்றும் கல்வி: சகலதும் என்பது சகலதுமாகும்.

கல்விப்பிரிவு சிறப்பாக அமைவதற்கு வலுவாகும் என்பதுடன் உலகத்தில் உட்படுத்தல் கல்விக்காக அர்ப்பணிப்பது தற்செயலானது அல்ல. ஒவ்வொரு குழந்தைக்கும், இளைஞர்களுக்கும் மற்றும் பெரியோர்களுக்கும் கற்பதற்கான அவர்களின் இயலுமையை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற விதத்தில் நல்ல நிலைமையுடன் கூடிய கல்வி முறைமையின் அடிப்படை அதுவாக அமைகின்றது.ஆண் பெண் நிலை, வயது, அமைப்பு, வறுமை, இயலாமை, இனத்துவம், மொழி, சமயம், இடப்பெயர்வு, அல்லது இடப்பெயர்ச்சி நிலை,பால் திசைமுகப்படுத்தல் அல்லது ஆண் பெண் நிலை குறித்து அடையாளத்தை வெளிப்படுத்தல், சிறைப்படுத்தல், நம்பிக்கை மற்றும் அணுகுமுறை கல்வி பங்கேற்பில் மற்றும் அனுபவங்களில் எவரையும் வித்தியாசமாக நடத்துவதற்கு அடிப்படையாக அமையக் கூடாது. முன் நிபந்தனையாக அமையவேண்டியது கற்றலின் பன்முகத்தன்மையை ஒரு வாய்ப்பாக காண்பதேயன்றி ஒரு பிரச்சினையாக அல்ல. உட்படுத்தலை மேற்கொள்வது ஒரு சிரமம் / துன்புறுத்தல் / எரிச்சலூட்டுவதாக தோன்றினால் அல்லது கற்பவர்களின் இயலுமை மட்டம் நிலையானதென மக்கள் நம்பினால் அதை அடைய முடியாது. கல்வி முறைமையில் கல்வி பயிலும் அனைவரின் தேவைகளுக்கு மறுமொழி கூறுவது அவசியமான ஒன்றாகும். பின்வரும் பரிந்துரைகளின் தடைகள் ஆழமான வேர்களையும், ஒருங்கிணைப்பு தொடர்பான சிக்கல்களின் அளவையும் கருத்திற்கொள்வதோடு அதன்மூலமாக 2030 ஆம் வருட இலக்குகளை அடைவது ஒரு சவாலாக அமைகின்றது..

1) உட்படுத்தல் கல்வி தொடர்பான புரிந்துணர்வை விரிவு படுத்துங்கள்: அடையாளம், பின்னணி அல்லது இயலுமையை கருத்திற்கொள்ளாது, கற்பவர்கள் சகலரும் அதில் சேரவேண்டும். உட்படுத்தல் செய்யும் கல்விக்கு உள்ள முறைமைக்குள் கற்பவர்கள் அனைவரும் உட்புகுந்தாலும், பல அரசுகள் இன்னமும் அவர்களின் சட்டம், கொள்கை மற்றும் பயன்படுத்தல் இந்த கொள்கையின் அடிப்படையில் கொண்டு வரவில்லை. பன்முகத்தன்மையைப் போற்றும் ஒவ்வொருவரும் மதிப்பு சேர்ப்பதாக எண்ணும் கல்விஅமைப்புகளின் சாத்தியக் கூறுகளை கௌரவத்துடன் நடத்தப்படல் வேண்டும். நிலைபேறான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக உலகத்திற்கு தேவைப்படும் அடிப்படை விடயங்கள் மாத்திரமல்ல பரந்தளவிலான திறன்களையும் கற்றுக்கொள்ள முடியும். இது உட்படுத்தல் கல்வித் திணைக்களம் ஒன்றை அமைப்பதல்ல. அதற்குப் பதிலாக, எவரையும் வித்தியாசமாக நடத்தாமல் இருத்தல், எவரையும் மறுக்கப்படாமல் இருத்தல், பல தேவைகளை பூர்த்திசெய்வதற்காக பொதுவாக தங்குமிட வசதிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆண் பெண் சமத்துவத்திற்காக செயல்படுவதாகும். வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான தலையீடுகள் குழந்தை பருவத்தில் இருந்து முதிர் வயது வரை ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். எனவே கல்வித்துறையின் திட்டங்களை வகுக்கும்போது உட்படுத்தல் கல்வி உள்ளடக்கிய ஒரு முன்னோக்கு பின்பற்றப்படல் வேண்டும்.

2) கைவிடப்பட்டவர்களுக்கான இலக்கு நிதி: உட்படுத்தல் சேர்க்கை இல்லாததுடன், மில்லியனுக்கும் மேலானவர்களுக்கு கல்விப் பிரவேசம் இல்லாமல் உள்ளது. குழந்தை தொழில், குழந்தை திருமணம், மற்றும் சிறுபருவத்திலேயே கர்ப்பம் தரித்தல் போன்ற தடைகளை தீர்ப்பதற்காக சட்டக்கருவிகள் செயல்படுத்தும் போது அரசுகளுக்கு இரட்டை கற்றல் அணுகுமுறைகள் தேவைப்படுவதுடன், அதன்மூலமாக சகல கற்பவர்களுக்கும் உட்படுத்தல் கல்வி சூழலை உருவாக்குவதற்காகப் பொது நிதி ஒதுக்கப்படுகின்றது. விரைவில் பாடசாலைக்கு பிரவேசித்த பின்னர், முதலாவது நடுநிலை மூலமாக இயலாமையின் முன்னேற்றம் மற்றும் கற்றல் தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கம் அல்லது தூரம் போன்றவற்றை கணிசமாக குறைத்துக்கொள்ள முடியும்.

3) நிபுணத்துவம் மற்றும் வளங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்: உட்படுத்தலுக்காக ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்வது ஒரே வழியாகும். பல விதத்தில் உட்படுத்தலை அடைவது முகாமைத்துவ சவாலாகும். பன்முகத்தன்மையை நிவர்த்தி செய்வதற்கு மானிட மற்றும் பொருள் வழங்களின் குறைபாடுகள் நிலவுகின்றன. வரலாற்று ரீதியாக அவை ஒதுக்கப்பட்ட மானியங்களின் உரிமையாக பல இடங்களில் பிரிக்கப்பட்டு குவிந்திருப்பதுடன், அவை சமமற்ற விதத்தில் விநியோகிக்கப்படுகின்றன. நிபுணர்கள், வல்லுநர்கள் பிரதான பாடசாலைகளையும் முறைசாரா கல்வி ஊக்கங்கள் தேவைப்படுகின்றன. அமைப்புகளையும் ஆதிரிப்பதை உறுதிசெய்வதற்காக அவற்றை நெகிழ்வான முறையில் கொண்டு செல்வதற்கான பொறிமுறைகள் மற்றும்ஊக்குவிப்புகள் தேவைப்படுகின்றன.

4) சமூகம் மற்றும் பெற்றோர்களுடன் அர்த்தமுள்ள ஆலோசனையில் ஈடுபடுதல்: உட்படுத்தலை உயர்மட்டத்தில் இருந்து செயல்படுத்த முடியாது. கல்விக்கு உட்படுத்தல் தொடர்பான கொள்கைகளை வகுக்கும்போது அரசாங்கங்கள் சமூகங்களுக்கு அவர்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பைத் திறக்கவேண்டும்.பெற்றோர்களின் சங்கம் அல்லது மாணவர் இணைத்தல் முறைமை ஊடாக பாடசாலை நடைமுறைகளை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பாடசாலை சுவர்களுக்குள் மற்றும் வெளியில் தொடர்புகளை அதிகரிக்கவேண்டும்.ஒவ்வொருவரின் பார்வையையும் கணக்கிலடப்பட வேண்டும்.

5) அரசாங்க திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அடுக்குகளுக்கிடையிலான ஒத்துழைப்பை உறுதிப்படுத்தல்: கல்வி உட்படுத்தல் என்பது சமூக உட்படுத்தலின் ஒரு உப பிரிவாகும். உட்படுத்தல் செய்யப்படும் கல்வி தொடர்பாக நிர்வாகம் சம்பந்தமான பொறுப்பை பகிர்ந்துகொள்ளும் அமைச்சின் தேவைகளை அடையாளம் காணுதல், தகவல்களை பரிமாரிக்கொள்ளுதல் மற்றும் நிரலர்களை திட்டமிடுவதற்காக ஒத்துழைப்புடன் செயல்புரிய வேண்டும். தெளிவாக வரையறுக்கப்பட்ட உட்படுத்தல் கல்வி வகைகளை செயல்படுத்துவது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மானிட மற்றும் நிதி உதவிகளை மத்திய அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6) அரச சார்ப்பற்ற செயல்பாட்டாளர்களுக்கு சவால் விடுவதற்கு மற்றும் இடைவெளிகளை நிரப்புவதற்கு இடமளியுங்கள்: அவர்கள் உட்படுத்தல் குறிக்கோள்களை நோக்கி செயல்புரிவதை பொறுப்பேற்க வேண்டும். கல்விச் சேவை வழங்கலை உட்படுத்தல் செய்வதற்கும், தராதரங்களின் படி மற்றும் தேசிய கொள்கைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கும் அரசாங்கம் தலைமத்துவத்தை வழங்கவேண்டும் என்பதுடன் அரச சார்ப்பற்ற நிறுவனங்களுடன் உரையாடல்களை நடாத்த வேண்டும். அரச சார்ப்பற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் கடமைகளை நிறைவேற்றுவதை மேற்பார்வை செய்வதற்கு மற்றும் கல்வியில் விடுப்பட்டவர்களுக்காக முன்வருவதற்குரிய நிபந்தனைகளை அரசாங்கத்தினால் உருவாக்கப்படல் வேண்டும்.

7) உலகளாவிய திட்டங்களை பயன்படுத்தல்: உட்படுத்தல் செய்யப்படும் முறைமைகள் ஒவ்வொரு கற்பவரின் இயலுமையை பூர்த்தி செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சகல குழந்தைகளும் ஒரே நெகிழ்வான, பொருத்தமான மற்றும் அணுகக்கூடிய பாடத்திட்டடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அது பன்முகத்தன்மையை இனங்கண்டு வெவ்வேறு கற்பவர்களின் தேவைகளுக்கு மறுமொழி வழங்குகிறது. ஒரே மாதிரியான நூல்கள் அகற்றப்படும்போது பாடநூல்களில் பேசப்படும் மற்றும் கையொப்பமிடும் மொழி மற்றும் படங்களையும் அனைவரும் காணலாம்.மதிப்பீடு செய்தல் முறையானதாக அமைய வேண்டியதுடன் மாணவர்களுக்கு வெவ்வேறு வழிகளில் கற்றலை விவரணப்படுத்துவதற்கு இடமளிக்க வேண்டும்.பாடசாலை உட்கட்டமைப்பை எவரும விலக்கக் கூடாது என்பதுடன், தொழில்நுட்பத்தின் பெரும சாத்தியத்தை பயன்படுத்திகொள்ள வேண்டும்.

8) கல்வி தொழில் அணியை தயாரித்தல், வலுவூட்டுதல் மற்றும் தூண்டுதல்: சகல மாணவர்களுக்கும் கற்பிப்பதற்கு சகல ஆசிரியர்களும் ஆயத்தமாக வேண்டும். உட்படுத்தல் செய்யும் பிரவேசங்கள் நிபுணத்துவம் கொண்ட தலைப்பாக இல்லாமல் அடிப்படை கல்வி அல்லது தொழில் அபிவிருத்தியாகட்டும் ஆசிரியர் கல்வியின் அடிப்படை பிரிவாக கருதவேண்டும். அவ்வாறான எடுத்தாளர்கள் சில மாணவர்களின் குறைபாடுகள் மற்றும் கற்றுக்கொள்ள முடியாதவர்களாக காட்டிக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். உட்படுத்தல் பாடசாலை நெறிமுறைகளை

நடைமுறைப்படுத்தவும் தொடர்பு கொள்ளவும் தலைமை ஆசிரியர்கள் தயாராக இருத்தல் வேண்டும். வெவ்வேறு கல்வி தொழில் அணியை சேர்ப்பதையும் ஆதரிக்கின்றது.

9) கவனத்துடனும், கௌரவத்துடனும் உட்படுத்தல் செய்வதற்காக தரவுகளை சேகரித்தல்: அவதூறுகளை ஏற்படுத்தும் வேலைகளில் இருந்து விலக வேண்டும்.ஓரங்களுக்கான தீமை அளவினை புரிந்து கொள்வதற்காக மக்கள் தொகை அளவிலான ஒத்திசைவுகளை சேகரிப்பதற்காக கல்வி அமைச்சு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் புள்ளிவிவர நிலையங்களுடன் ஒத்துழைப்புடன் செயல்புரிய வேண்டும். இயலாத நிலை பொறுத்து வாஷிங்டன் குழுமத்தின் குறுகிய கேள்வித் தொடர்மற்றும் குழந்தை செயல்பாட்டு மொடியுலை பயன்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும். நிர்வாக முறைமையின் குறிக்கோளாக இருக்க வேண்டியது, உட்படுத்தல் கல்வி சேவைகளை வழங்குதல் தொடர்பான உதவிகளை திட்டமிடுதல் மற்றும் வரவு செலவு தயாரித்தலுக்கான தரவுளை சேகரித்தல் மட்டுமல்ல உட்படுத்தல் செய்யும் அனுபவங்கள் தொடர்பான தரவுகளாகும். எவ்வாறாயினும் விரிவான மற்றும் வலுவான தரவுகள் தொடர்டபாகும் இருக்கும் ஆர்வம் எந்தவொரு கற்பவர்களுக்கு பாதகம் ஏற்படாது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை கொண்ட செயல்பட வேண்டும்

10) சமவயது சகாக்களிடம் இருந்து கற்றல்: உட்படுத்தலுக்கு மாறுவது இலகுவானது அல்ல. உட்படுத்தலை பிரதிநிதித்துவப்படுத்துவது பாகுபாடு மற்றும் தப்பெண்ணத்தை அகற்றி வெவ்வேறு சூழல்களுக்கும் யதார்த்தங்களுக்கும் ஏற்றதாக இருக்கும். இந்த மாற்றதின் வேகம் அல்லது சரியான திசையை குறிப்பிட முடியாது. எனினும் ஆசிரியர் வலைத்தளம், தேசிய மன்றங்கள் மற்றும் வலய மற்றும் உலகளாவிய தளங்களின் ஊடாக அனுபவங்களை பரிமாரிக்கொள்வதில் இருந்து நிறையவற்றை கற்றுக்கொள்ளலாம்.

**உப அட்டவணை - 03**

**<u>கற்பவர்களுக்கு கற்பித்தல் தொடர்பான உலகளாவிய வடிவமைப்புகள - Universal Design of Learning for the Learners UDL</u>**

சகலருக்கும் கல்வி என்பது, சகலருக்கும் சமமான உரிமையாக கருதப்படும். அதில் அனைவரும் தழுவப்படுகின்றார்கள். சகலருக்கும் பண்புத்தரக் கல்வியை வழங்கவேண்டுமெனில், உட்படுத்தல் கல்வி என்ற கருத்தினை செயற்படுத்த வேண்டியதுடன், உட்படுத்தல் கல்வியை பிரயோக ரீதியில் செயற்படுத்துவதற்காக கற்பவர்களுக்கு கற்பித்தல் தொடர்பான உலகளாவிய கற்றல் வடிவமைப்பை (UDL - Universal Design of Learning for the Learners) செயற்படுத்த வேண்டும்.UDL குறைபாடுகள் உள்ள மற்றும் குறைபாடுகளற்ற மாணவர்களுக்கு ஒரே சூழலில் பாடசாலையினுள் சிறப்பாக விளங்குவதற்கு வழிவகுக்கின்றது

உலகளாவிய திட்டங்களுக்கான கற்றல் வடிவமைப்பு என்பது கற்றலைப் பெறுபவரை மாற்றாமல் சூழலை திட்டமிட்டு கற்பவரின் இயலுமைக்கு அப்பால் சென்று அவருக்கு பண்புத்தரமிக்க கல்வியினை அளிப்பதற்காக வகுப்பறையில் அனைத்திற்கும் கல்விக்கான முழு பிரவேசத்தையும் வழங்குவதாகும். இதன் மூலமாக ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட ஆயத்தம், முயற்சி மற்றும் கற்றல் சுயவிபரங்களைத் தெரிவிக்கின்றது.

கற்றலுக்கான உலகளாவிய திட்டம் என்பது, கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பாகச் சிந்திக்கும் முறைமையாகும். இதன் மூலமாக உயர்ந்த இயலுமையுடன் கூடிய திறமையான குழந்தைகளைப் போலவே வெவ்வேறு பாலினங்கள், வயது, வறுமை, இனவெறி, பழங்குடி, மொழியியல், மத, இன நம்பிக்கைகள, குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு பாகுபாடு இல்லாமல் வெற்றிபெற சம வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்UDLஇனால் பன்முகத்தன்மை அங்கீகரிக்கப்படுகின்றது, பன்முகத்தன்மையை கௌரவிக்கின்றது.

UDL இனால் ஒவ்வொரு மாணவரினதும் கலாசார சூழல், சமூக பொருளாதார பின்னணிகள் மாறுபடும் என்பதை ஏற்றுக்கொள்கின்றது. மொழி, எழுதுதல், வாசித்தல் போன்ற அனைத்திலும் சகலரும் வேறுபட்டவர்கள். அந்த பன்முகத்தன்மையினை கருத்திற் கொள்ளாது சகலரும் சிறப்பாக விளங்குவதற்கு சந்தரப்பங்களை அளிப்பது UDLஇன் குறிக்கோளாகும். பன்முகத்தன்மையுடன கூடிய பிள்ளைகள் இருக்குமிடத்தில் குறிப்பிட்ட பல தடைகள் உள்ளன. அந்தத் தடைகளை அகற்றுவதற்காக விரிவாக செயற்படுத்துவது அவசியமாகும்.

இதற்காக 7 பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

1. UDLதிட்டமிடுதல்
2. UDLஇன் பிரகாரம் பாடநெறியினை விருத்திசெய்தல்
3. UDLஇன் பிரகாரம் பிள்ளையை இனங்காணுதல்
4. UDLஇன் பிரகாரம் பாடங்களைத் திட்டமிடுதல்
5. UDL இன் பிரகாரம் நெகிழ்வான கற்றல் சூழலை வழங்குதல்
6. UDLதொடர்பான மாணவர் மையக் கல்வியை அடிப்டையாகக் கொள்ளுதல்
7. ஆசிரியர் தன்னைப்பற்றி சிந்திப்பதற்கான சுயமதிப்பீடு

1. UDL திட்டங்கள்

கற்றலுக்கான உலகளாவிய திட்டம் என்பது பல்வேறு உடல் மற்றும் உள இயலுமைகளுடன் கூடியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சூழல் மற்றும் பொருட்களை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்படும் முறையாகும். இதை வெற்றிபெறச் செய்வதற்கு அனைத்து குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் குறைபாடுகளற்ற மாணவர்களுடன் ஒரே பாடசாலை சூழலில் வெற்றி பெறுவதற்கு இடவசதிகளை ஏற்படுத்துவதாகும். உட்படுத்தல் கல்விக்காக பாடசாலையை UDL பிரகாரம் திட்டமிட வேண்டும். இதற்காக அனைவருக்கும் தடைகளின்றி பிரவேசிப்பதற்கான வழிகாட்டல் வரைபடம், ஆதாரங்களுடன் கூடிய பிரவேச வழிகள், விரிவான நுழைவாயில், ஆதாரங்களுடன் கூடிய மலசல கூடங்கள் பிரவேசிக்கும் வழிகள் மற்றும் இயற்கையான ஒளிகளுடன் கூடிய வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றின் உள்ளடக்கங்களுடன் பாடசாலையை மீள்வடிவமைப்புச் செய்ய வேண்டும். இந்த மீள்வடிவமைப்புகளின் போது பிரவேச வசதிகள் தொடர்பாக அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும்.(இலக்கம்1,467/15 மற்றும் 2006 ஒக்டோபர் 17 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்) இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தாபன தலைவர்களின் படி 2014 வருடமாகும் போது, அனைத்து பொது கட்டிடங்கள். பொது இடங்கள் குறைபாடுகள் கொண்டவர்களுக்கு பிரவேசிப்பதற்கு ஏதுவாக அமைக்கவேண்டிய பொறுப்பு உள்ளது. உலகளாவிய திட்ட வயது, உடல் இயலுமை, உயரம் பருமன் போன்வற்றை கருத்திற்கொள்ளாது தடைகளின்றி அனைவருக்கும் பாதுகாப்புடன் பிரவேசிக்கும் வகையில் அமைக்கப்படல் வேண்டும். இந்த உலகளாவிய திட்டம் குறைபாடுகள் கொண்டவர்கள் தொடர்பான பிரவேசத்தை ஊக்குவிப்பதுடன் ஏனையோருக்கும் பிரவேசத்தின்போது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**2. UDLஇன் படி பாடத்திட்டங்களை விருத்தி செய்தல்**

UDLஇன் படி பன்முகப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மாணவருக்கும் தமது அடையாளத்தை பாதுகாத்து ஒவ்வொரு மாணவரினதும் வெற்றிக்கு சமான வாய்ப்புகளை வழங்கும் உறுதிப்படுத்தக் கூடிய மற்றும் சாத்தியமான பாடத்திட்டத்தை மேம்படுத்த வேண்டும்.

உறுதிப்படுத்தபடக் கூடிய மற்றும் சாத்தியமான பாடத்திட்டம் என்பது,(Guaranteed and Viable Curriculum - GVC)

பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் வெற்றியை விட வலுவாக இணையக் கூடியதாகும். அதனால் அந்தந்த தர மட்டங்களில் குறிப்பிட்ட பாடத்திட்டம் மற்றும் தர மட்டத்திற்கு குறிப்பிட்ட உள்ளடக்கங்கள் கற்பிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். பன்முகத்தன்மையுடன் கூடிய தலைப்புகளின் பிரகாரம் பல்வேறு பாடத்திட்டங்களைத் தயாரிக்கப்படல் வேண்டும். அதற்குத் தேவையான தரவுகளின் ஊடாக உரிய தர மட்டத்தில் பிள்ளைகள் பெறவேண்டிய அறிவு மற்றம் திறன் தீர்மானிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் கட்டாயமாகப் பெற வேண்டிய திறமைகள் மற்றும் திறன்கள் பெற்றுக்கொண்டுள்ளதை மதிப்பீட்டின் மூலமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதற்காக 4 முக்கிய காரணிகள் உள்ளன

1. சகிப்புத் தன்மை - GVC மூலமாக ஒவ்வொருவரும் தேவையான திறனைப் பெற்றுக்கொள்வதுடன், தேவையான மாணவர்களுக்கு ஆராய்ச்சிக்கு அப்பால் அறிவு, திறமைகளை வழங்குதல்.

2. தயாராகுதல் -GVC மூலமாக அடுத்த தரத்திற்கு அல்லது பாடத்திட்டத்திற்குத் தேவையான அறிவு மற்றும் திறமைகளை வழங்குதல்

3. லீவர் - GVC மூலமாக மாணவர்களுக்கு வேறு பாடங்கள் தொடர்பாக உதவியாக அமையும் அறிவு, திறமைகளை வழங்குதல்

4. பன்முகத்தன்மை – பொருளாதாரத்திற்கு, சமூகத்திற்கு, கலாசாரத்திற்குத் தேவையான பல்வேறு தலைப்புகளுடன் கூடிய பன்முகத்தன்மை கொண்ட பாடத்திட்டங்களைத் தயாரித்தல்

இக் குறிக்கோள்களுடன் மொடியுல்களைக்கொண்ட பாடத்திட்டமொன்றைக் கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சினால் தேசிய கல்வி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறில்லையெனில் விசேடக் கல்வி ஆசிரியர் மற்றும் பொது கல்வி ஆசிரியர் இணைந்து நிலவும் பாடத்திட்டங்களின் பாடங்கள் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

3.UDL **<u>இன் பிரகாரம் பிள்ளையை இனங்காணுதல்</u>**

UDL அமுல்படுத்துவதற்காக வகுப்பறை குறிப்புகள்(Class Profile)வடிவமைக்கப்படல் வேண்டும் வகுப்பு குறிப்புகள் தயாரிக்கப்படவேண்டியது ஒவ்வொரு மாணவரின் விருப்பு வெறுப்பு, பலம் மற்றும் பலவீனம் போன்றவற்ளை கவனத்திற்கொண்ட பின்னராகும். மாணவரின் இயலளவை இனங்கண்டு மாணவரை விருத்திசெய்தல் வேண்டும். இதற்காக மாணவரை இனங்காணும் மதிப்பீட்டு கருவிகள (Assessment tool) பிரவேச பரீட்சைகள், இடஅமர்த்தும் பரீட்சைகள் (Placement test) போன்றவற்றை கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டு வெளியிடுவதுடன், மாணவர்களின் விருத்திற்குரிய மதிப்பீடுகள் ஆசிரியரினால் தயாரிக்கப்படல் வேண்டும்

4.UDL **<u>இன் பிரகாரம் பாடங்களை திட்டமிடுதல்</u>**

இதற்காக பொது வகுப்பறை ஆசிரியர்கள் மற்றும் விசேடக் கல்வி ஆசிரியர் ஒத்துழைப்படன் தொடர்பாடலை ஏற்படுத்தி, தமது நோக்கு மற்றும் திறமைகளை பகிர்ந்து கொண்டு செயல்படவேண்டும். அவர்கள் இருதரப்பினரும் ஒன்றிணைந்து UDL முறைப்படி பிள்ளையின் விருத்தியினை அடிப்படையாகக் கொண்டு தரவுகளை சேகரித்து திட்டமிடப்படல் வேண்டும். பிள்ளையை இனங்காணுவதற்காக SMART GOALLSதயாரிக்கப்படல் வேண்டும். இதன்போது உரிய குறிக்கோள்கள் சிறப்பாக இருத்தல் வேண்டும்.(**S**pecific) குறிக்கோள்கள் அளவிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.(**M**easurable)குறிக்கோள்களை அடையக்கூடியதாக இருத்தல் வேண்டும். (**A**chievable) குறிக்கோள்கள் யதார்த்தமாக இருத்தல் வேண்டும்.(**R**ealistic) குறிக்கோள்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றிக் கொள்ள கூடியதாக இருத்தல் வேண்டும். (**T**iming)

**<u>5.UDL தொடர்பாக நெகிழ்வான கற்றல் சூழல் ஒன்றை வழங்கதல்</u>**

UDL இன் பிரகாரம் மீள்வடிவமைப்பு செய்யப்பட்ட வகுப்பறையினுள் நெகிழ்வுடன் கூடிய கற்றல் சூழல் ஒன்றை உருவாக்க வேண்டும். பல தொடர்பாடல் பாடங்களை செயல்படுத்தும் விதத்தில் (Multi Sensor Lessons) இசைக் கருவிகள், விளக்கப்படங்கள், பாடப்புத்தகங்கள், டிஜிட்டலை அடிப்படையாகக் கொண்ட செவியுறு விழிசார் ஆதாரங்கள் வைத்திருப்பது மிகவும் உகந்ததாகும்.குழு செயற்பாடுகள், செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம் (கண்பார்வையற்ற மாணவர் ஒருவர் இருப்பாரெனில் பிரேயில் தட்டச்சு, எம்பொஸ் செய்யப்பட்ட வரைபடங்கள், செவிபுலனற்ற மாணவர்கள் இருப்பார்கள் என்றால சைகைப் பலகைகள், உடல் உபாதைகளுடன் கூடிய மாணவர்கள் இருப்பார்களேயானால், சக்கர நாற்காலிகள் பயன்படுத்துபராக இருந்தால் அங்குமிங்கு நகரும் தன்மை, எழுத்துப் பிரச்சினைகள் உள்ள மாணவர்களுக்குஎழுத்துறு அளவு பெரிதாக்கப்பட்ட புத்தகங்கள், எழுத்து சிக்கல்கள், கணித சிக்கல்கள் எழுதும் சிக்கல்ககள் உள்ள மாணவர்கள் டெப் கணினிகளை பயன்படுத்தல்)

நெகிழ்வான கற்றல் சூழல் ஒன்றில் பின்வரும் 6 விடயங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

01. மாணவர்களின் பலம் மற்றும் பலவீனங்களை இனங்காணுதல்

02. இயலுமான வரையில் கற்றல் ஆதார மொடியுல் அல்லது டிஜிட்டல் ஆதாரங்களை பயன்படுத்தல்.

03. பாடங்களின் உள்ளடக்கம் மாணவரின் அறிவு மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் பல்வேறு வழிகளில் பகிர்ந்து கொள்ளுதல்

04. மாணவர்கள் தமது அறிவை பகிர்ந்துகொள்ளும் விதத்தை நிருபிப்பதற்காக தெரிவுகளை முன்வைத்தல்

05. மென்பொருள் ஆதாரங்களின் பலனை பெறுதல்

06. மற்றவர்களிடம் கற்றுக்கொள்வதற்கு இடமளித்தல்

**6. UDL தொடர்பான மாணவர் மையக்கல்வி**

தாய்மொழி, கணக்கீடு, அளவீடு, தொடர்பாடல் போன்ற கல்வியின் அடிப்படை அமைப்பினை உருவாக்கும்போது விளையாட்டு செயற்பாடுகளை அடிப்படையகக் கொண்டு ஆசிரிய மையக்கற்பித்தல் முறையையும் பயன்படுத்தலாம். அடிப்படை ஆரம்பக் கல்வியின் பின்னர் விசேடத் தேவைகளைக்கொண்ட மாணவர்கள் தனிப்பயனாக்கப்பட்ட கல்வி (Individual Education Plan -IEP ) தனிப்பயனாக்கப்பட்ட பாடங்களை திட்டமிடுதலுடன் பொது வகுப்பறையில் விசேடக் கல்வி ஆசிரியர் ஒருவரினால் மாணவருக்கு ஒத்துழைப்பதில் சாயல் கல்வியை மேலும் உறுதிப்படுத்த முடியும்.

இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர் மைய கல்வி முறையை பயக்படுத்த வேண்டும். இங்கு ஆசிரியர் செய்யவேண்டியது வசதிகளை வழங்குபவர் என்ற ரீதியல் மாணவரின் தேவையினை கண்டறிவதாகும். ஆவரிகளை வழிநடத்துவதாகும். இதன்போது கவனிப்பட வேண்டிய விடயங்கள் அநேகம் உள்ளன. மாணவருக்கு எதை கற்பிக்க வேண்டும். எந்த நேரத்தில் கற்பிக்க வேண்டும், கற்பிப்பதினால் எழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் சிறப்பு குறிக்கோள்கள் என்ன, சிறப்பு குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எத்தனிக்கும்போது எதிரிகொள்ள நேரிடும் தடைகள் நிவர்த்தி செய்யப்படுமா, பாடங்களின் குறிக்கோள்கள் தவறவிடப்படம்டுள்ளதா, போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படட படிப்படியாக பாடங்கள் கவனிக்கப்படல் வேண்டும். இதன் பிரகாரம் மாணவர்மைய குறிக்கோள்கள் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்குவது எவ்வாறு என்பதும் கவனிக்கப்படல் வேண்டும்.,

01. (Choice Assignment)தாம் விரும்பும் ஒப்படைப்பு ஒன்றை தெரிவு செய்யும் சந்தர்ப்பம் உண்டு

02. பல்வேறு தலைப்புகளைக் கொண்ட புத்தகங்கள் மற்றும்ஆடியோ காட்சி உபகரணங்களை வழங்குதல் (Variety of Materials)

03. நெகிழ்வான மதிப்பீட்டு முறை – மாணவரின் மட்டத்தை கருத்திற்கொண்டு மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும். எ.கா: காதுகேளாத மாணவர் ஒருவரின் பாடம் வாசித்தலை எடைபோடக் கூடாது என்றும் அதற்கான மாற்று வழிகளை ஏற்படுத்த வேண்டும்.

04. மாற்றங்களை முன்னிலைப்படுத்தல். ஓவ்வொரு மாணவரும் சொற்பொழிவுகளுக்கு செவிமடுக்கலாம். எனவே ஒருவருக்கு ஒரே சந்தர்ப்பத்தில் பல முறைகிளல் கற்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. சிலர் வீடீயோ மூலமாகவும், இன்னும் சிலர் டேசி ப்ளேயர் ஒன்றுக்கு செவிமடுத்துவதினால், சிலர் புத்தகம் ஒன்றை வாசித்தல்

UDL மாணவ மையக் குறிக்கோளானது சகல மாணவர்களுக்கும் அவர்களின் தேவைகள் மற்றும் இயலுமைகளை கருத்திற் கொள்ளமல் எல்லாவற்றுக்கும் முழுமையான பிவேசத்தை வழங்குதலாகும்

**7. ஆசிரியர் தன்னைபற்றி சிந்திப்பதற்கான சுயமதிப்பீடு**

தமது பாடத்தை வேறொருவக்கு அவதானிப்பதற்காக ஒப்படைத்தல், வீடியோ செய்தலினால் மீண்டும் அதன் பிரதிபலிப்பை அறிவதற்கோ அல்லது தெரிந்து கொள்வதற்கோ UDL தொடர்பாக தம்மை அறியும் முறையை அடையாளப்படுத்த முடியும். அந்த சுய கண்காணிப்பானது, தனது கற்பித்தல் பலவீனங்களை இனங் காண்பதற்கு சந்தரப்பம் வழங்குகின்றது.